பக்.. ங்கள்: இருபத்தியாறு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 17 புதன்கிழமை (31.03.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 125

# தேர்தல் காலப் பாதுகாப்புக்கு முப்படைகளும் ஈடுபடுத்தப்படும்

## மோதல்கள் அதிகரிப்பதால் வழமையைவிட முற்கூட்டியே ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 31

பொதுத் தேர்தல் காலப் பாதுகாப்புக்கு, வழமையைவிட முற்கூட்டியே பொலிஸாருடன் இணைந்து பணிபுரிய முப்படைகளினதும் உதவி நாடப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் நேற்றுவரை தேர்தல் வன்முறைகள் தொடர்பாக 219 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவற்றில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் தங்களது கட்சிக்கு எதிராகச் செய்துள்ள முறைப் பாடுகளே எண்ணிக்கையில் அதிகம் என்றும் பொலிஸ்மா அதிபர் கூறினார். (26ஆம் பக்கம் பார்க்க)

## மழையுடன் கூடிய மின்னல் தாக்கலாமென எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 31

மழையுடன் கூடிய காலநிலை தற்போது நிலவுவதால் நாடு முழுவதும் மின்னல் தாக்கம் ஏற்படக் கூடிய அபாயம் உள்ளதென வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

கடந்த சில நாள்களாக இத்தகைய அனர்த்தங்கள் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன எனத் திணைக்களத்தின் கடமை அதி

(26ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் ஆரோக்கியம் குறித்த இராணுவ மதிப்பீட்டை ஐ.தே.க. நிராகரிப்பு

கொழும்பு, மார்ச் 31

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவதைக் கண்டித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி, அவரின் உடல்நிலை தொடர்பாக இராணுவம் வெளியிட்ட மதிப்பீட்டையும் நிராகரித்துள்ளது.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களுக்கு இதனைத் தெரிவித்த கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் உடல்நிலை தொடர்பாக இராணுவ மருத்துவர் மேற்கொண்ட வைத்திய பரிசோதனை தொடர்பாக எமக்குத் திருப்தியில்லை.

(26ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் பேசவிருந்த கூட்டத்தின் மேடையை பொலிஸார் அகற்றியதால் ராஜகிரியவில் பதற்றம்!

கொழும்பு, மார்ச் 31

கொழும்பு ராஜகிரிய பகுதியில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுவதற்காக அமைக்கப்பட்டிருந்த மேடையை பொலிஸார் நேற்றுத் திடீரென அகற்றியமையைத் தொடர்ந்து பலத்த பரபரப்பு ஏற்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் சிரான் லக்திலஹவின் ஏற்பாட்டில் வெலிக்கடை ராஜகிரிய சந்தியில் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரக் கூட்டமொன்று நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

இக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிற்பகல் மூன்று மணியளவில் உரையாற்றுவார் என அறிவிக்கப்பட்டிருந்தது.

(26ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் சுவரொட்டிகள் யாவும் 5 ஆம் திகதிக்கு முன்னர் அகற்றப்படும்

கொழும்பு, மார்ச் 31

பொதுத் தேர்தல் பிரசாரங்களுக்காக ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகள் அனைத்தும் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் நீக்கப்பட்டுவிடும். வேட்பாளர்களும் அவர்களது ஆதரவாளர்களும் இதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தேர்தல்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண இவ்வாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

காமினி நவரட்ண மேலும் தெரிவிக்கையில்,

'சுசுவரொட்டிகள், பதாகைகள் மற்றும் 'கட்அவுட்'களை அகற்றும் பணி தொடர்ந்தும் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை, தேர்தல் தொடர்பான 'ஸ்டிக்கர்'கள் ஒட்டப்பட்ட பல வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

(26ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களுக்கு எந்த வகைத் தீர்வு தேவை என்பதனை அவர்களே முடிவு செய்ய வேண்டும்

### அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் அர்த்தமற்றது

கொழும்பு, மார்ச் 31

அரசமைப்புச் சட்டத்துக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை மீண்டும் நிறைவேற்றக் கோருவதோ அதனை ஒரு தீர்வாகக் கொள்ள முயற்சிப்பதோ அர்த்தமற்றவை.



தமிழ் மக்களுக்கு எந்த வகையான அரசியல் தீர்வு தேவை என்பதனை அவர்களே தீர்மானிக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் அண்ணாமலை வரதராஜப் பெருமாள். (26ஆம் பக்கம் பார்க்க)

## ஊடக அடக்குமுறைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 31

ஊடகங்களுக்கு எதிராகத் தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஊடகவியலாளர்கள் சத்தியாக் கிரகப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

வன்முறைகளுக்கு எதிரான ஊடகவியலாளர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் கறுப்புத் துணியால் வாயைக் கட்டித் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

அரசியல்வாதிகளின் ஊழல்களை அம்பலப்படுத்தினால் ஊடகவியலாளர்கள் தாக்கப்படும் நிலை இலங்கையில் காணப்படுகிறது என இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த 'லங்கா -ஈ.நியூஸ்' ஆசிரியர் சந்தன சிறி

(26ஆம் பக்கம் பார்க்க)






# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசநாயகம் அன்னலட்சுமி

சங்கானை கிழக்கைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசநாயகம் அன்னலட்சுமி நேற்று (30.03.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து இராசநாயகம் (இளைப்பாறிய ஆசிரியர், அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும் அமலசுதன் (சங்கானை ப.நோ.கூ.சங்கம்), இடபாரூடன் (அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ. சங்கம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நவராணி, நந்தினி (ஆசிரியர், சதானந்த வித்தியாலயம், அளவெட்டி) ஆகியோரின் அன்பு மாமியும், கலைச்செல்வன், பிரணவன், வைஷ்ணவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2010) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தம்மனை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி தெற்கு.

தகவல்:
இ.இடபாரூடன் (மகன்), குடும்பத்தினர்.
தொ.பே: 0718872198, 0779488093

(96208)

## விநாசித்தம்பி திருச்செல்வம்

(இளைப்பாறிய கணித ஆசிரியர், யாழ். மங்கையற்கரசி வித்தியாலயம்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட வி.திருச்செல்வம் நேற்று (30.03.2010) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி - நாகரெத்தினம் தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் பத்மாவதி தம்பதியினரின் மருமகனும், உமாவின் அன்புக் கணவரும், பொன்னையா, பாலச்சந்திரன், செல்வி. ராஜேஸ்வரி (ஓய்வுபெற்ற பிரதி அதிபர், யாழ். வட்டு. மத்திய கல்லூரி), காலஞ்சென்ற செல்வி மனோன்மணி, திருமதி ச.தங்கராணி (ஆசிரியை, யாழ். சென்.றோக்.க. மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி சுகந்தி ஸ்ரீதரன், ப.சங்கர் (முகாமையாளர், சம்பத் வங்கி), திருமதி டக்ஷனி லோகேந்திரா, திருமதி நளாயினி விஷ்வநாதன், நாகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், சிவானி, தாரணி ஆகியோரின் சிறியதந்தையும், சரவணன், கௌதமன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31.03.2010) புதன் கிழமை பிற்பகல் 4 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
உமா (மனைவி),
சங்கர் (மைத்துனர்)

## திருமதி பகவதி சிவசுப்பிரமணியம்

(பாக்கியம் - நவரத்தினம், செல்லப்பா கடை)

நாரந்தனை தெற்கைப் பிறப்பிடமாகவும், அராலி மேற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பகவதி சிவசுப்பிரமணியம் (A.D) 29.03.2010 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், திரு திருமதி தில்லையம்பலம் தம்பதிகளின் மகளும், மவுனம்மா, நல்லபிள்ளை ஆகியோரின் சகோதரியும், நாகேஸ்வரி, கந்தவேள், கௌரீஸ்வரி, நந்தீஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் நடராசா, சிவயோகமலர், சேனாதிராசா, தளையசிங்கமுதலியார் ஆகியோரின் அன்பு மாமியாரும், கீதாவின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30.03.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் வட்டுக்கோட்டை கொத்தத்துறை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.

(96175)

தகவல் :
குடும்பத்தினர்.

## திருமதி மீனாம்பாள் இராமச்சந்திரன்



கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனாம்பாள் இராமச்சந்திரன் நேற்று (30.03.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இராமச்சந்திரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மீரா, இரமணன் (ஆசிரியர், க/அல்மனார் மத்திய கல்லூரி) ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்றவர்களான நகுலேஸ்வரர் - சிவக்கொழுந்து தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், வேதநாயகாம்பாள், சதானந்தயோகேஸ்வரன், கமலாம்பாள், காலஞ்சென்ற ஞானசம்பந்தன் ஆகியோரின் அருமைச் சகோதரியும், இலங்காதிலகம், ருத்திராதேவி, சரவணபவன், காயத்திரிதேவி, சாவித்திரிதேவி, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2010) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன் காடு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(96220)

தகவல்:
இ. இரமணன்
(மகன்)


## பெண் தொழிலாளர் தேவை

Binding பகுதிக்கு பெண் தொழிலாளர் தேவை. பைண்டிங் பழக விரும்புபவர்களும், இந்தத் தொழிலில் முன் அனுபவம் உடையவர்களும் நேரில் வரவும்.

பாரதி பதிப்பகம்,
430, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## வாடகைக்கு

A-9 வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் புங்கன்குளம் வீதியில் 3 அறைகள் (ஒன்று குளியலறை) குசினி, ஹோல் மற்றும் வாகனங்கள் நிறுத்தக் கூடிய வசதியுள்ள வீடு வாடகைக்கு உண்டு.
தொலைத் தொடர்பு போபுரங்கள் நிறுத்துவதற்கான இடவசதிகளும் உண்டு.
N.G.O, BANK, RESTURANT மற்றும் நிறுவனங்களுக்கு ஏற்றது. தொ. பே: 0779937402

## வேலை ஆள் தேவை

Net Cafe இற்கு கணனி அறிவுள்ள ஆள் தேவை. Photo Shop, Typing தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:320, பலாலி வீதி, கந்தர்மடம்.
தொ. பே: 0772230523, 021 2223620

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையில் உள்ள Moniters, கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்.
தொடர்புகளுக்கு : 0779364491,
0778695157

## வேலையாள் தேவை

பிரபல்யமான நிறுவனத்துக்கு சமையல் மற்றும் இதர வேலைக்கு ஆள்கள் தேவை.
வயதெல்லை 35-50 தனிநபர் விரும்பத்தக்கது. தங்கி இருந்து வேலை செய்பவர்களாக இருத்தல் வேண்டும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு : இல.31, ஆஸ்பத்திரிவீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.


## கொழும்பிலிருந்து வந்தவர் சுழிபுரத்தில் கிணற்றில் இருந்து சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 31

சுழிபுரம் மேற்கு பிரதேசத்தில் கல்விளான் வயல் பகுதி கிணற்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் நண்பகல் மீட்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துக் கிராமசேவையாளர் மூலம் மக்கள் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு அறிவித்தனர். சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் சடலத்தின் அருகில் இருந்து பயணப்பை ஒன்றைக் கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட பயணப்பையில் இருந்த ஆவணங்களிலிருந்து சடலமாக மீட்கப்பட்டவர் சுழிபுரம் பறாளையைச் சேர்ந்த கந்தையா கணேசமூர்த்தி (வயது-49) என்பவரென அடையாளம் காணப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்திருந்த உறவினர்கள் சடலத்தை அடையாளம் காட்டினர்.

மேற்படி சடலத்தின் அருகில் ஒரு வித திரவம் நிரப்பப்பட்ட போத்தல் ஒன்றும் கிடக்கக் காணப்பட்டது.

கொழும்பு வெள்ளவத்தைப் பகுதியில் நீண்ட காலமாகத் தனிமையில் வசித்து வந்த இவர் கடந்த சனிக்கிழமையே யாழ்ப்பாணம் வந்திருக்கலாம் என உறவினர்கள் தெரிவித்தனர்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சாவகச்சேரி நகரில் கைத்தொலைபேசி களவு; திருடிய இருவர் கைது

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள தொலைபேசி விற்பனை நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற திருட்டுச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 3 லட்சம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் மடிக்கணனி உட்பட திருடப்பட்ட பொருள்களும் மீட்கப்பட்டன. இந்த தகவலை சாவகச்சேரி பொலிஸ் பொறுப்பதிகாரி டி.கே. ஏ. சரத்குமார தெரிவித்தார்.

(ஒ-10-207)

# மரண அறிவித்தல்கள்

## வினாசித்தம்பி துரைசிங்கம்



புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி சிவன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி துரைசிங்கம் நேற்று (30.03.2010) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-மாணிக்கம் தம்பதியினரின் மருமகனும், தர்மகுலசிங்கம், பாஸ்கரன், இந்திரன் (லண்டன்), வரதன், றஞ்சி, சிவறஞ்சன், காலஞ்சென்றவர்களான இராமன், இலட்சுமணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சகுந்தலாதேவி, சந்திராதேவி, நந்தினி (லண்டன்), கோகிலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், யுரேன், சுரேந்திரன், சியாம்சங்கர், வைஷ்ணவன், வைஷ்ணவி, அபிஷன் (லண்டன்), அபிஷாந்தி, கோகிலரஞ்சன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், பார்வதி, குமாரசாமி, கண்ணம்மா மற்றும் கமலாச்சி, குமாரவேல், முத்தம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2010) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்கோயிலடி,
சாவகச்சேரி.

(96184)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## திருமதி தவமரீஸ் சுஜிதா



மாசேரி, வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமரீஸ் சுஜீதா நேற்று (30.03.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தவமரீஸின் பாசமிகு துணைவியாரும் வல்லிபுரம் (அருமைத்துரை)- சறோசாதேவி தம்பதியினரின் அருமை மகளும் காலஞ்சென்ற செல்லத்தம்பி மற்றும் பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சங்கீதா மற்றும் சுஜந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2010) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாளம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாசேரி,
வரணி

(96215)

தகவல் :
குடும்பத்தினர்.

## அழகரட்ணம் விக்னேஸ்வரன்

வைமன் வீதி, நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட அழகரட்ணம் விக்னேஸ்வரன் நேற்று (30.03.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜெகநாதன், விஜயநாதன், சிவநாதன், ராஜநாதன், பத்மநாதன், சிவசுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2010) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் வைமன் வீதி, நல்லூரில் உள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வைமன் வீதி,
நல்லூர்.

(வி/566306)

தகவல்:
பொ. குருதேவ்.


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.03.2009 அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 1 | பருத்தித்துறை - 285 | 15.05.2010 | மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை - 030 |
| 2 | வல்வெட்டித்துறை - 141 | | |
| 3 | நெல்லியடி - 106 | | |
| 4 | யாழ்.ஸ்ரான்லி வீதி -030 | | |
| 5 | சேவை நிலையம், மானிப்பாய் - 837 | | |
| 6 | சாவகச்சேரி - 110 | 16.05.2010 | |
| 7 | அச்சுவேலி - 107 | | |
| 8 | சுன்னாகம் - 109 | | |
| 9 | காங்கேசன்துறை -031 | | |
| 10 | சேவை நிலையம், மல்லாகம் - 899 | | |
| 11 | யாழ்.பிரதான வீதி-104 | | |
| 12 | சேவை நிலையம், உரும்பிராய் - 865 | | |
| 13 | சங்கானை - 108 | | |
| 14 | யாழ். பல்கலைக்கழகம் - 162 | | |
| 15 | சேவைநிலையம், திருநெல்வேலி - 855 | | |
| 16 | யாழ். கன்னாதிட்டி - 284 | 18.05.2010 | |
| 17 | சேவை நிலையம், இணுவில் - 905 | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம்விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி பிரதேச காரியலயம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(வி/566297)

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## காலம் பிந்திய கவலை தெரிவிப்பு

இலங்கையில் யுத்த நிறுத்தம் பேணப்பட்ட காலத்தில் அந்த நாட்டிற்கு ஆயுதங்களை விற்பனை செய்தமைக்காக பிரிட்டன் இப்போது கவலை வெளியிட்டிருக்கின்றது.

இந்தக் கவலை தெரிவிப்பு நடவடிக்கையை எந்தக் கண்ணோட்டத்தில் நோக்குவது என்று தெரியாமல் - புரிந்துகொள்ள முடியாமல் - தவிக்கின்றார்கள் இலங்கைத் தமிழர்கள். பிரிட்டனின் இந்தக் காலம் பிந்திய ஞானம் குறித்து அழுவதா அல்லது சிரிப்பதா என்று தமிழர்களுக்கு விளங்கவில்லை.

'அணில் ஏற விட்ட நாய் மாதிரி'விடயத்தைக் கோட்டை விட்டுவிட்ட பின்னர் மரத்தின் கீழிருந்து அண்ணாந்து பார்த்துக் குரைப்பதில் அர்த்தமில்லை.

அது போன்றதுதான் இலங்கை விவகாரத்தில் பிரிட்டன் உட்பட்ட மேற்குலகின் இப்போதைய குதிப்பும் போக்கும் கூட.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் சமாதானப் பேச்சு மேசையில் பேரம் பேசும் வலுவுடன் தமிழர் தரப்பு அப்போது இருந்தது.

அந்த நேரத்தில் யுத்த நிறுத்தம் தடைப்படாமல் தொடர்வது அந்த சமாதான முயற்சிகள் ஆக்கபூர்வமான திசையில் முன் நகர்வதற்கு அத்தியாவசியமாக இருந்தது. அதனை சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் பிரதிநிதிகள் மட்டுமல்லர், சமாதான முயற்சிகளுக்கு அனுசரணை வகித்த நோர்வேத் தரப்பினர், யுத்த நிறுத்தத்தைக் கண்காணித்த - ஸ்கண்டிநேவிய நாடுகளைச் சேர்ந்த - கண்காணிப்பாளர்கள், சர்வதேசத் தலைவர்கள் எனப் பலரும் ஒரே குரலில் வலியுறுத்தி வந்தனர்.

அத்தகைய யுத்த நிறுத்தம் நீடிப்பதற்கு அத்தியாவசியமான தேவைப்பாடு ஒன்று குறித்தும் இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அனுசரணையாளர்களான நோர்வேத் தரப்பினரும், யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்களும் அச்சமயம் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்தனர்.

அது - யுத்த நிறுத்தம் நின்று, நிலைத்து, நீடிப்பதாயின் அந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரினதும் இராணுவ வலுச் சமநிலை பாதிக்கப்படாமல் தொடர்ந்து பேணப்பட வேண்டும் என்பதே அந்த விடயமாகும்.

ஆனால், அமைதிப் பேச்சு - சமாதான முயற்சி - சமரச நடவடிக்கை - என்ற பெயரில் காலத்தை ஒருபுறம் இழுத்தடித்துக் கொண்டு, மறுபுறம் சிங்கள தேசம் தனது இராணுவ வலிமையை எக்கச்சக்கமாக வளர்த்தெடுத்தது. அது பரகசியமான உண்மை.

யுத்த நிறுத்த காலத்தில் இலங்கைக்கு ஆயுதங்களை விற்றமை போன்ற 'முட்டாள்தனமான' வேலைகளை சர்வதேச உலகம் செய்தமையால் கொழும்பின் இராணுவ வலிமை அளப்பரும் அளவில் வளர்ச்சியடைய கொழும்பு அரசு பெரும் இராணுவ மேலாதிக்க நிலையை எட்டியது.

அதனால் யுத்த நிறுத்தத்தில் சம்பந்தப்பட்ட இரு பிரதான சக்திகள் இடையேயும் இராணுவ வலுச் சமநிலை தலைகீழாக மாறியது.

இராணுவ வலுச் சமநிலை தமக்குச் சாதகமாக மாறியமையை உணர்ந்த அரசுத் தரப்பினர் உடனடியாகத் தம் கைவரிசையைக் காட்டத் தொடங்கினர்.

முதலில் யுத்த நிறுத்தம் - சர்வதேச பங்களிப்புடனும், அதன் முன்னிலையிலும் உருவாக்கப்பட்ட போர்நிறுத்தம் - இலங்கை அரசால் தூக்கிக் குப்பைக் கூடைக்குள் கடாசப்பட்டது.

அடுத்து தமிழர் தாயகம் மீது தனது கொடூர இராணுவ மேலாதிக்க வலிமையை முழு அளவில் பிரயோகித்துக் காட்டத் தொடங்கியது அரசு.

தமிழர் தாயகம் இன்று தென்னிலங்கை அரசின் முழுக் கட்டுப்பாட்டு நிர்வாகத்தில் வந்துவிட்டது. விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றது.

'பிரிவினைவாதப் புலிகள்' தொடுத்த யுத்தம் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டு விட்டதாக இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்து மார்தட்டுகின்றது.

ஆக, அமைதி முயற்சியில் - பேச்சு மேசையில் - தனது உரிமைக்கான குரலை உறுதியுடன் முன்வைக்கக்கூடிய - வலிமையை இலங்கைத் தமிழர்கள் இழந்து இன்று துவண்டு கிடக்கின்ற அவலம்.

இனப்பிரச்சினைக்கான எத்தனங்களில் தென்னிலங்கை ஆட்சித்தரப்புடன் சம அந்தஸ்துடனும், சமநிலையிலும், சமவலிமையுடனும் பேரம் பேசுவதற்கு இருந்த சக்தியை ஈழத் தமிழர்கள் இழப்பதற்கு அந்த யுத்த நிறுத்தம் செயலிழந்து, தமிழர் தாயகம் மீது தென்னிலங்கை அரசு படையெடுத்து முற்றாக அதைக் கைப்பற்றியமையே முக்கிய காரணமாகும்.

அத்தகைய யுத்த நிறுத்தம் முறிவடைவதற்கு வழி செய்யும் விதத்தில் இராணுவ வலுச் சமநிலையை இலங்கை அரசுத் தரப்புக்கு சார்பாக மாற்றியமைக்கும் பிரதான காரணியாக அமைந்தது பிரிட்டன் உட்பட்ட மேற்குலகின் பொறுப்பற்ற போக்குத்தான்.

யுத்த நிறுத்த காலத்தில் ஒருபுறம் இராணுவ மற்றும் யுத்த உதவிகளை இலங்கைக்கு அள்ளி வழங்கிக் கொண்டு, மறுபுறம் தமிழர் தரப்பின் பிரதிநிதிகளாக அப்போது அமைதி முயற்சிகளில் ஈடுபட்ட புலிகள் இயக்கத்தை 'பயங்கரவாத அமைப்புகளின்' பட்டியலில் சேர்த்து, அதனைத் தடை செய்ததன் மூலம் மேற்குலகு, இலங்கைத் தீவில் இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான இராணுவச் சமநிலையை அரசுக்கு சார்பானதாக மாற்றியதுடன் புலிகளுக்கு சமாதான நடவடிக்கைகளில் இருந்த சமதரப்பு அந்தஸ்தையும் சீரழித்தது.

அதன் பெறுபேறைத்தான் தமிழினம் இப்போது இலங்கையில் பெரும் துன்பமாக - துயரமாக - அவலமாக - விடிவில்லாத இருளாக - அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

'கண் போன பின்னர் சூரிய நமஸ்காரம் செய்வது போல்', 'குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடிய கதையாக' - எல்லாம் நடந்து முடிந்து, பேரழிவுகளும் சம்பவித்த பின்னர் பிரிட்டன் போன்ற தேசங்கள் இப்போது கவலை வெளியிட்டு என்ன பயன்?

# யுத்த நிறுத்த காலத்தில் இலங்கைக்கு ஆயுதங்கள் விற்றமை குறித்து பிரி. கவலை

லண்டன், மார்ச் 31

இலங்கையில் யுத்த நிறுத்தம் காணப்பட்ட காலப் பகுதியில் அந்த நாட்டிற்கு ஆயுதங்களை விற்றமை குறித்து பிரிட்டன் கவலை தெரிவித்துள்ளது.

மேலும் இலங்கைக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதியளிக்கும் ஒன்பது அனுமதிப் பத்திரங்கள் குறித்து மீளாய்வு செய்து அவற்றை இரத்துச் செய்துவிட்டதாகவும் பிரிட்டன் குறிப்பிட்டுள்ளது.

பிரிட்டனின் கீழ் சபையின் - ஆயுத ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுக் குழுவின் அறிக்கையிலேயே இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையின் பலவீனமான யுத்த நிறுத்த காலத்தில் அந்த நாட்டிற்கு பிரிட்டன் ஆயுதங்களை ஏற்றுமதி செய்தமை குறித்துக் கவலையடைகிறோம்.

ஸ்திரத்தன்மையற்ற நாடுகளுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்யும் போது அந்த ஆயுதங்கள் எவரின் கைகளுக்குச் செல்கின்றன, அவை எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பவை குறித்து ஆழ்ந்த கவனம் செலுத்தவேண்டும்.

இலங்கைக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதற்கான ஒன்பது அனுமதிப் பத்திரங்களை இரத்துச் செய்துள்ளமையை வரவேற்கிறோம்.

சூழ்நிலைகள் மாற்றமடைந்துள்ளமையைக் கருத்தில் கொண்டே இந்த அனுமதிப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இராணுவ ஹெலிக்கொப்டர்கள் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்களுக்கான உதிரிப்பாகங்களைப் பெறுவதற்கான அனுமதிப் பத்திரங்களையே இரத்துச் செய்துள்ளோம்.

பிரிட்டனின் வர்த்தக அமைச்சர் இயன் லூகாஸ் அனுமதிப்பத்திரங்கள் மீளப்பரிசீலனைக்கு உட்படுத் தப்பட்டுள்ளமையை உறுதிசெய்துள்ளார்.

எனினும் பிரிட்டன் இலங்கையின் போக்குவரத்து ஹெலிக்கொப்டர்களுக்கான உதிரிப்பாகங்களை ஏற்றுமதி செய்துள்ளது.

இலங்கை இந்த ஹெலிக்கொப்டர்களை மோதல்களின் இறுதிக் கட்டத்தில் காயமடைந்தவர்களை வெளியேற்றுவதற்கும் விநியோகங்களுக்கும் பயன்படுத்தியுள்ளது.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தில் இறுதித் தருணங்களில் மனித உரிமைகள் பாரியளவில் மீறப்பட்டன என ஆழந்த கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ள வர்த்தக அமைச்சர் இயன் லூகாஸ், இதன் பின்னரே அனுமதிப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டன எனவும் தெரிவித்தார்.

இலங்கையின் நிலைவரம் குறித்து பிரிட்டன் நீண்ட காலமாக ஆழ்ந்த கவலை கொண்டிருந்தது. இதன் காரணமாக மிக எச்சரிக்கையாக இருந்தது என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து சிறியளவு தகவல்களே கிடைத்த போதிலும் 2009ஆம் ஆண்டு ஜூலை - ஓகஸ்ட் மாதங்களில் ஒன்பது அனுமதிப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டன என வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்தார் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## முதியோர் இல்லத்தின் முன்பாகவுள்ள பள்ளத்தை சீர்படுத்தித்தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 31

கைதடி அரச முதியோர் இல்லத்திற்கு முன்பாகக் காணப்படும் பெரிய பாழடைந்த பள்ளத்தைச் சீரமைத்துத் தருமாறு சாவகச்சேரி பிரதேச சபையிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக இல்லத்தின் அத்தியட்சகர் என்.இராஜலிங்கம் சாவகச்சேரி பிரதேச சபைச் செயலருக்கு கடிதம் ஒன்றினை எழுதியுள்ளார்.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு-

முதியோர் இல்லத்திற்கு முன்பாக பாழடைந்து கிடக்கும் தாழ்ந்த பள்ளத்தை மண்ணால் நிரப்பி சீர்செய்யப்படவேண்டும். மாரி காலங்களில் இப்பள்ளத்தில் நுளம்புகள் பெருகுவதுடன் சிலர் தவறி விழுந்து காயமடையும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. எனவே இந்த பள்ளத்தைச் சீர்படுத்த சம்பந்தப்பட்ட தரப்புகள் உதவ வேண்டும் என்றுள்ளது. (50-224)

## மரியன்னை பேராலயத்தில் தவக்கால புனிதவார வழிபாடுகள்

கொழும்புத்துறை, மார்ச் 31

தவக்காலத்தின் புனிதவாரத்தை ஒட்டி யாழ். தூயமரியன்னை பேராலயத்தில் பரிசுத்த வார வழிபாடுகள் நாளை வியாழன் தொடக்கம் உயிர்ப்பு ஞாயிறு வரை நடைபெறவுள்ளன.

புனித வியாழன்று மாலை 5 மணிக்கு கால்கழுவும் சடங்குடன் கூடிய திருப்பலியும், இரவு 10 மணிக்கு நற்கருணைச் சந்திப்பு பொது வழிபாடுகளும் இடம்பெறும்.

புனித வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆலய வளாகத்தில் சிலுவைப்பாதையும், மாலை 4 மணிக்கு இயேசுவின் பாடுகள் திரு மரணத்தை நினைவு கூரும் பெரிய வெள்ளிச் சிறப்பு வழிபாடுகளும் நடைபெறும்.

புனித சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு இயேசு சிலுவையில் மொழிந்த ஏழு வார்த்தைகளின் தியானமும், அன்று இரவு 10.30 மணிக்கு திருவிழிப்பு வழிபாடும் இடம்பெறும்.

உயிர்ப்பு ஞாயிறு தினத்தன்று உயிர்ப்பு விழாத் திருப்பலி காலை 5.15 மணிக்கு யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையிலும், இரண்டாம் திருப்பலி காலை 7.15 மணிக்கும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (50-135)

## தந்தை செல்வாவின் பிறந்ததின நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 31

தந்தை செல்வாவின் 113 ஆவது பிறந்த தினமான இன்று புதன்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ். நகரில் உள்ள அவரது நினைவுச் சதுக்கத்தில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

தந்தை செல்வா அறங்காவலர் குழுவின் தலைவர் இளைப்பாறிய பேராயர் கலாநிதி. எஸ். ஜெபநேசன் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இன்று மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணக் கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தந்தை செல்வாவின் வாழ்க்கைக்கும் சேவைக்கும் இறைவனுக்கு நன்றி செலுத்தும் வழிபாடு சுண்டுக்குளி புனித திரு முழுக்கு யோவான் ஆலயத்தில் இடம்பெறும். (50-23)

## வலி.மேற்கு செயலகத்தில் அபிவிருத்தி தொடர்பான கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 31

வலி. மேற்கு பிரதேசத்துக்கான ஒருங்கிணைக்கப்பட்ட உள்ளூர் அபிவிருத்தித் திட்டத்தின் திட்ட முறைப்படுத்தல் கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி வலி. மேற்கு பிரதேச செயலர் திருமதி தே.பாபு ஆகிய இருவரினதும் இணைத் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்துக்கு யாழ். மாவட்ட அரச, கூட்டுத்தாபன, நியதிச் சட்ட சபைகள், கூட்டுறவு மற்றும் கிராம மட்டத் தலைவர்கள் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபை உயரதிகாரிளும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-302)

# இன்று மாணவன் கபிலநாத்... நாளை யார், யாரோ? அரசியல் பலம் கொண்டவர் பின்னணியில் உள்ளாரா?

## இவ்வாறு கேள்வி எழுப்புகிறார் ஐ.தே.க. வேட்பாளர் துவாரகேஸ்வரன்

யாழ்ப்பாணம்,மார்ச் 31

அப்பாவி மாணவன் கபிலநாத் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுவிட்டான். படுகொலை வரிசையில் நாளை யார், யாரோ....? இவ்வாறான கடத்தல்கள், படுகொலைகளுடன் அரசியல் பலம்மிக்க எவரும் உள்ளனரா?

இவ்வாறு கேள்வி எழுப்புகின்றார் ஐ.தே.கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளர் தியாகராசா துவாரகேஸ்வரன்.

மாணவன் கபிலநாத் படுகொலை தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாணவன் திருச்செல்வம் கபில்நாத் கப்பம் கோரிக் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட செய்தியானது தமிழ் மக்களைப் பீதிக்குள்ளாக்கி உறையவைத்துள்ளது. இக் கொலையைச் செய்த பாதகர்களுக்கு இனம் தெரியாதவர்கள் என வழமை போலப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த இனம் தெரியாதவர்கள் யார்? இவர்களை இயக்கவைக்கும் - பாதுகாத்து போசிக்கும் பேரழிவு செய்யும் சக்தி எது? இவர்களைக் கண்டு பிடிக்கவோ தண்டிக்கவோ திராணியற்ற நிலையில்தான் சட்டம் ஒழுங்கை பராமரிப்பவர்கள் உள்ளார்களா? அப்படியானால் 2006முதல் தீவிரமாகத் தொடரும் இத்தகைய அராஜகங்களுக்கு முடிவுகட்டவே முடியாதா? இவை தான் இன்று மக்கள் மத்தியில் எழும் கேள்விகள். இதற்கான பதிலை அளிக்க வல்லவர் யார்?

2006முதல் இன்று வரை மக்களைப் பீதியின் விளிம்பில் நிற்க வைத்து அச்சுறுத்தி வரும் இந்தக் கடத்தல் படுகொலை, கலாசாரத்தின் பின்னணி இயங்குதளமாக இருக்கும்அமைப்பின் இனங்காண முடியாத சூத்திரதாரி ஆத்மபலம்மிக்கவரா? அரசியல்பலம் மிக்கவரா? ஆத்மபலம் மிக்கவர் இந்த மாதிரியான அற்பத்தனமான வேலைகளில் ஈடுபடமாட்டார்.

ஆகவே இந்த அட்டூழியங்களின் பின்னால் இருக்கும் அரசியல் அராஜகத்தை மக்கள் அறிந்தும் அறியாதவர் போல் மௌனம் காப்பதுதான் இவர்களின் அடாவடித்தனங்களுக்கெல்லாம் பலம் சேர்ப்பதாகவுள்ளது.

(25 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

பங்குனி 18 01.04.2010

வியாழக்கிழமை

| | |
|---|---|
| திதி | : திருதியை பி.இ. 4.34 வரை |
| நட்சத்திரம் | : சுவாதி மு.இ.09.10 வரை |
| சுபநேரம் | : 07.41-09.11 வரை |
| ராகுகாலம் | : 01.41-03.11 வரை |

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர்

**திரு.சுப்பிரமணியம் விவேகானந்தன்**
**(B.A. PGDE, M.A)**

அவர்கள் 27.03.2010 அன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் குடிசன மதிப்பீட்டுக்கல்வியியலில் முதுமாணி (M.A) பட்டத்தைப் பெற்றுள்ளமைக்கு எமது மனம் நிறைந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு கல்வித்துறையில் மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம். (96200)

யா/கோப்பாய் தெற்கு கந்தவேள்
த.க. பாடசாலை, கோப்பாய்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர்கள், மாணவர்கள்.

## வீடு வாடகைக்கு

யாழ்.மாநகர எல்லைக்குள் அத்தியடி புதுவீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு (கம்பனி அல்லது நிறுவனமொன்றுக்கு) வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 0779218122




**டயிடஸ் ஸ்ரோஸ்**
**2439422**

## TATA SAFARI



2003, Brand New, HD-xxxx, F/O, TV, DVD, Company Maintained, 1st Owner, Excellent condition, low mileage

ரத்னேஸ்வரன்
0777222715
பிள்ளையார் ஹோட்டல்
No:31 மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்

## விசேட விலைக்கழிவு
(ஸ்ருடியோக்களுக்கு மட்டும்)
Kodacs Express

| | |
|---|---|
| 4R | - 9.00 (தொகைப் பிரதியாக்கம்) |
| 10x15 | - 60.00 |
| 10x30 | - 180.00 |
| 10x30 | - 200.00 (சில்க் பேப்பர்) |
| 12x24 | - 230.00 |
| 12x36 | - 400.00 |

**மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்,**
ஸ்ரான்லி வீதி, யாழ். (சி/566287)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 25 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் முதுகலைமாணி, கலைமாணிப்பட்டம் பெற்ற:





செல்வி தியாகராசா தர்சினி
B.A. HNDA, M.A. in Population studies

திருமதி சுவர்ணா யசோபன்
B.A. (Hons) 2nd upper

ஆகிய இருவரையும் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை. (96213)



உ
சிவமயம்

## திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபையின் 36 ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் 09.05.2010

திருப்பணிச்சபையின் ஆண்டுப் பொதுக்கூட்டம் விகிர்தி வருடம் சித்திரை மாதம் 26 ஆம் திகதி (09.05.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி முதல் பம்பலப்பிட்டி லோரன்ஸ் வீதி 75ஆம் இலக்கத்திலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். முன் மொழிவுகள் (பிரேரணைகள்) அனுப்ப விரும்புவோர் இந்த அறிவித்தலில் இருந்து பத்து (10) நாள்களுக்குள் எங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

சரஸ்வதி மண்டபம்,
கொழும்பு - 4. (சி/566290)

அ.திருநாவுக்கரசு, செ.இராகவன்,
இணைப்பொதுச் செயலாளர்கள்.

# STUDY IN INDIA

ISO 9001 - 2000 Certified

## East West College Bangalore

AFFILIATED TO BANGALORE UNIVERSITY, VTU, RGUHS, Accredited by NBA -NewDelhi

க.பொ.த (உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியடைந்துள்ளீர்களா?
கவலை வேண்டாம்!! நீங்களும் பட்டதாரியாகலாம்!!!

**Spot Admissions & Career Guidance**

உடனடி அனுமதிகளை பெற்றுக்கொள்ள எங்கள் கல்லூரியின் அதிபர்
**Prof. B. Purusotham M.Sc, PGDBA, Mphil, Phd.**
அவர்களை எங்கள் Jaffna Admission Center இல் நேரில் சந்திக்கலாம்.
திகதி: 01-04-2010 முதல் 03-04-2010 வரை
நேரம்: 10.00AM - 6.00PM

**East West Admission Center ;**

Colombo
#67, 1/1, Galle Road, Dehiwala. 011-564 0787

Jaffna
#5, 1st Floor, New Market Building, Jaffna.
Tel: 021-3050111

**0777-168-777**

### SCHOLARSHIPS for BBM / BCA / B.Sc

COURSES OFFERED AT EAST WEST

Professional Degrees (A/L 2 Pass + English)
- Bachelor of Computer Applications (BCA)
- Bachelor of Business Management (BBM)
- B.Sc-(BioTecnogy/Gene/MicroBio/BioChe)

Bachelor of Engineering(A/L - C,2S - Maths)
- Electronics & Communications, Mechanics, Computer Sci, Information Technology, Civil.

Dip. in Engineering (O/L with Maths)
- Electronics & Communications, Mechanics, Computer Sci, Information Technology, Civil.

Paramedical
- Bachelor of Pharmacy,
- B. Sc - Nursing,
- Diploma in Medical Lab Technician,
- Diploma in Pharmacy

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## சேர்.பொன்.இராமநாதன் நினைவுப் பேருரை

**"The Vital Power of Culture Amidst the Globalization Waves"**

பேருரை வழங்குநர்: பேராசிரியர் பா.பாஸ்கரன், மெய்யியல் பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
இடம்: கைலாசபதி கலையரங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
திகதி: 31.03.2010 புதன்கிழமை
நேரம்: மு.ப. 10 மணி

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
பதிவாளர். (சி/566303)

## உபநயன பிரம்மோபதேச அழைப்பு

அன்புடையீர்!

திருவருள் துணைநிற்க, ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான விரோதி வருஷம் பங்குனி மாதம் 18 ஆம் நாள் (01.04.2010) வியாழக்கிழமை சுவாதி நட்சத்திரமும், அமிர்தசித்த யோகமும் கூடிய பகல் 8.56 மணி முதல் 10.31 மணிவரையுள்ள இடப லக்கின சுபமுகூர்த்த வேளையில்

பிரம்மஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள் - அமிர்தவல்லியம்மா தம்பதிகளின் லெளத்திரனும்
பிரம்மஸ்ரீ நடராசாக்குருக்கள் - விஜயலட்சுமி தம்பதிகளின் பௌத்திரனும் எமது சிரேஷ்ட புத்திரனுமாகிய

**செல்வன் கவிஷ்ணா சர்மா** அவர்களுக்கு

பிரம்மோபதேச யக்ஞோப வீத தாரணம் செய்ய விநாயகர், பார்வதவர்த்தனி அம்மை சமேத இராமலிங்கேஸ்வரரதும் அர்த்த நாரீஸ்வரர் திருவருள் கூட பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசமேதராக வருகை தந்து செல்வனை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுபமுகூர்த்த இடம்: சிவசக்தி மணிமண்டபம் (ஆவரங்கால்)
உபநயன குரு: சாவித்திய சிரோன்மணி ப.முத்துக்குமாரசாமிக்குருக்கள் (நயினாதீவு நாகபூஷணி அம்மன் மஹோற்சவ குரு)

சிவன் கோயிலடி,
ஆவரங்கால். (96207)

தங்கள் நல்வரவை நாடும்,
பிரம்மஸ்ரீ ஸ்ரீகரசர்மா - சியாமளா தம்பதிகள்.

## கொவிசெத
உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் **748**
சீட்டிழுப்பு திகதி **29.03.2010**

எழுத்து **B** — வெற்றி இலக்கங்கள் **18 21 45 64**

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 13,812,627.20 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 05 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 194 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 350 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 50/= | 9491 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 5450 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 134836 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 21178 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை **6,650,830.00**

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு **ரூபா. 13,901,940.00**

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**தேசிய லொத்தர் சபை**
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk

## பொருளியல் ஆசிரியர் S.வரதராஜன்

அவர்களிடம் கல்வி கற்ற பல்லாயிரக்கணக்கான பழைய மாணவர்களும் அவர்களின் குடும்பங்களும் உறவுகளும் இணைந்து கொள்கைக்காக களம் இறங்கும் எமது ஆசிரியரின் சின்னமாகிய சைக்கிளுக்கும் வெற்றி இலக்கமாகிய பத்திற்கும் (10) வாக்களிப்போம்.

எம்மை உயர்த்திய ஆசிரியரை அதிகூடிய விருப்பு வாக்குகளால் வெற்றியடையச் செய்வோம்.



பழையமாணவர்கள்
**தமிழ்க் காங்கிரஸ் கட்சி**
(தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி)

X 10

(96196)

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விரைவில் புதிய 'எக்ஸ்றே பிலிம்' கழுவும் இயந்திரங்கள்

யாழ்ப்பாணம், மார்ச்31

யாழ்.போதனா வைத்தியசாலைக்குப் புதிதாக இரண்டு ''எக்ஸ்றே பிலிம்'' கழுவும் இயந்திரங்கள் கொழும்பிலிருந்து எடுத்துவரப்படவுள்ளன.

இந்த இரண்டு புதிய இயந்திரங்களையும் விரைவில் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

போதனா வைத்தியசாலையில் ஏற்கனவே பாவனையில் இருந்த ''எக்ஸ்றே பிலிம்'' கழுவும் இயந்திரம் அண்மையில் ஏற்பட்ட மின் ஒழுக்கின் காரணமாகப் பழுதடைந்துள்ளதாகவும் இதனால் வைத்தியசாலையில் 'எக்ஸ்றே' படப்பிடிப்புக்கள் மட்டுப்படுத்திய அளவிலேயே இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது படம்பிடித்த பின்னர் 'எக்ஸ்றே பிலிம்கள்'' முற்றாக உலர்வதற்காக வெயிலில் வைக்கப்படுவதாகவும் கூறப்பட்டது.

இந்த நெருக்கடி நிலைக்கு உடனடியாகத் தீர்வுகண்டு 'எக்ஸ்றேபிலிம்' கழுவும் நடவடிக்கைகளைச் சீராக்குவதற்காக இரண்டு புதிய இயந்திரங்களை வைத்தியாசாலைக்கு எடுத்துவரும் நடவடிக்கையில் அதன் நிர்வாகம் இறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-224)

## இராணுவத்தினரின் டெங்கு ஒழிப்பு வாரம்

கொழும்புத்துறை, மார்ச் 31

பாசையூர், குருநகர், கொழும்புத்துறை பகுதிகளில் உள்ள இராணுவத் தரப்பினரால் டெங்கு ஒழிப்பு வாரமாக இந்தவாரம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக ஒலிபெருக்கிகள் மூலம் மக்களுக்கு அழைப்பும் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள், இராணுவத்தினர், பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் கூட்டாக வீதிகள், இல்லங்கள் தோறும் சுத்தம் செய்து நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாகவும் பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (50-135)

## முதலீட்டுச் சபையின் பிராந்திய அலுவலகம் நாளை யாழ்.நகரில் திறப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 31

இலங்கை முதலீட்டுச் சபையின் பிராந்திய அலுவலகம் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம்- கண்டி வீதியிலுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் முதலாம் மாடியில் அமைந்துள்ள வீடமைப்புச் செயலகக் கட்டடத்தில் -

நாளை முதலாம் திகதி வியாழக்கிழமை மு.ப.10.30 மணியளவில் இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் தம்மிக்க பெரேரா இதனைத் திறந்து வைப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-க)

## சனசமூக நிலைய நிர்வாகிகளுடன் அமைச்சர் டக்ளஸ் சந்திப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 31

சமூகசேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவுக்கும், வலி.தென். மேற்கு மானிப்பாய்ப் பிரதேசசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்களுடனான சந்திப்பு இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் மானிப்பாய் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன், மானிப்பாய்ப் பிரதேசசபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் மேற்படி பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளர் இ.கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (50-201-302)

## பிரிவுபசார விழா

நவாலி, மார்ச்31

கூழாவடி அ.மி.த.க.பாடசாலை அதிபர் சி.நாகையா இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்வதையொட்டி சுதுமலை தெற்கு அம்பாள் சனசமூக நிலையத்தினர் நடத்தும் பிரிவுபசார வைபவம் இன்று புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு நிலையத் தலைவர் இ.மனோகரன் தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினர்களாக மாகாணக் கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் சுந்தரம் டிவகலாலாவும், மானிப்பாய்ப் பிரதேச செயலாளர் திருமதி பு.சிவலிங்கமும் கலந்துகொள்வர். (ஒ-100)

## சைவசமய அறிவுப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக் கழகம் அண்மையில் நடத்திய சைவ சமய அறிவுப்பரீட்சை, நீதிநூல் மனனப் போட்டி, கோலம்போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயன்முறைப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இவற்றின் பெறுபேறுகள் பரீட்சார்த்திகள் கல்விபயிலும் பாடசாலைகளுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலமும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் பெறுபேறுகள் கிடைக்கப்பெறாதோர் நாளை வியாழக்கிழமை ''சைவசமய அபிவிருத்திக் கழக அறிவகம்'', இல.82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு சைவ சமய அபிவிருத்திக் கழகப் பரீட்சைச் செயலர் சு.சிறீகாந்தன் அறிவித்துள்ளார். (50)

## வினோத சைக்கிளில் நகரில் வீதியுலா; வியக்க வைத்த தென்னிலங்கை இரட்டையர்!



யாழ்ப்பாணம்,மார்ச்31

எல்லா உதிரிப்பாகங்களும் சரியாக இருந்தாலே சைக்கிளைச் செலுத்துவதற்குச் சிரமப்படுபவர்கள் மத்தியில் அக்கு வேறு,ஆணிவேறாக உருவாக்கப்பட்ட விநோதச் சைக்கிளில் வீதியுலா வந்து சாகசம் புரிந்து யாழ்.மக்களை வியப்படைய வைத்துள்ளனர் தென்னிலங்கையைச் சேர்ந்த இரட்டையர்கள்.

மொனராகலையைச் சேர்ந்த துஷங்க-அஷங்க என்னும் பெயர்களையுடைய இந்த இரட்டையர்கள் கடந்த திங்கட்கிழமை சனசந்தடிமிக்க யாழ்.நகரப் பகுதிக்குள் இரண்டாக வெட்டியது போன்ற- விநோத அமைப்புடைய- சைக்கிளில் சடுதியாக நுழைந்தனர். இந்தச் சைக்கிளில் செயின் கிடையாது. இரண்டு சில்லுகளும் தனித்தனியே இருந்தன. அப்படியிருந்தும் கூட அதி வேகமாகச் சைக்கிளைச் செலுத்தினர் இந்த இரட்டையர்கள்.

இவர்களின் சாகசத்தைக் கண்டு மக்கள் வியப்பும், மகிழ்வும் அடைந்தனர். தமது சாகசத்தின்போது முன்புறக் கைபிடியுடன் தனியே இருந்த சில்லை மேலே தூக்கியவாறும், முன்சில்லு ரயரை கழற்றிவிட்டு தனியே றிம் மில் மட்டும் சைக்கிளைச் செலுத்தியும் பார்ப்போரை ஆச்சரியத்தில் மூழ்க வைத்தனர்.



சாகசநிறைவில் இந்தச் சாதனை இரட்டையர்களுக்கு மக்கள் சிறுபரிசுகளையும் அன்பளிப்புகளையும் வழங்கினர். (04-224)

## கண்டெடுக்கப்பட்ட தங்க நகை

யாழ்ப்பாணம், மார்ச்31

இணுவில் -காங்கேசன்துறை வீதியில் கண்டெடுக்கப்பட்ட தங்க நகையொன்று உடுவில் பிரதேச செயலகத்தில் பொதுமகன் ஒருவரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தங்கநகையைத் தவறவிட்டவர் உடுவில் பிரதேச செயலாளருடன் தொடர்பு கொண்டு உரிய அடையாளங்களைத் தெரிவித்து பெற்றுக்கொள்ளுமாறு உடுவில் பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-86)

## ஆங்கில நாடக அரங்க இறுவட்டுகள் அறிமுகம்




யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கிலமொழி கற்பித்தல் பிரிவின் தலைவர் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் நெறிப்படுத்திய 'நான்கு ஆங்கில நாடகங்கள்' மற்றும் ஆங்கில மொழித் திறன் விருத்திக்கான வகுப்பறை அரங்கு என்னும் தலைப்புகளிலான இரு இறுவட்டுகளின் அறிமுக நிகழ்வு நாளை வியாழக்கிழமை மு.ப.9.30 மணியளவில் யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கல்லூரி ஆங்கில விரிவுரையாளர் ரி. மோகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கல்லூரியின் பீடாதிபதி எஸ். கே. யோகநாதன் பிரதமவிருந்தினராகவும், யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலமொழிக் கற்பித்தல் மையத்தின் தலைவர் எஸ். சுந்தரேஸ்வரன் விசேட விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

நாடகநெறியாளர் அறிமுகத்தை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ம.சரவணபவ ஐயரும் , ஆங்கில மொழித்திறன் விருத்தி இறுவட்டுப்பற்றி சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர் திரு.எஸ்.சுந்தரேசனும், நாடக இறுவட்டுப் பற்றி இளைப்பாறிய ஆசிரியர் கலாசாலை அதிபர் திரு.சோ.பத்மநாதன் நிகழ்த்துவார். மூன்று நாடகங்களின் தொகுப்புப் பற்றி ஆங்கில மொழிப் போதனைப் பிரிவுத் தலைவர் திரு.எஸ்.சுந்தரேஸ்வரன் உரையாற்றுவார். (50)

## சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் 56ஆவது ஆண்டு விழா வெள்ளியன்று

யாழ்ப்பாணம், மார்ச்31

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவமய அபிவிருத்திக் கழகத்தின் 56 ஆவது ஆண்டுவிழா நாளை மறுதினம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.3 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

சைவப்புலவர் ஏ.அனுசாந்தனின் ''மதமும் மனிதனும்'' எனும் பொருளிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவிலேயே சைவசமய அறிவுப் பரீட்சை, நீதிநூல் மனனப்போட்டி, கோலம் போடுதல், மாலைகட்டுதல், தோரணம்பின்னுதல் ஆகிய செயன்முறைப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (50)



யாழ்.பாதுகாப்புப் படைகளின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டம் முழுவதும் டெங்கு தடுப்பு வாரம் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஆரம்ப வைபவம் நேற்று யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சிவில் அலுவலகத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.போதனா வைத்தியசாலையின் உதவிப் பணிப்பாளர் எஸ்.பவானந்தராஜா, மேலதிக கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் ஆகியோர் உரையாற்றுவதை முறையே முதலாம் இரண்டாம்,மூன்றாம் படங்களிலும்-

படையினரால் நிகழ்த்தப்பட்ட டெங்கு விழிப்புணர்வு தொடர்பான வீதி நாடகத்தின் காட்சியை நான்காவது படத்திலும் படையினர் சிரமதான நடவடிக்கைகளுக்குத் தயாராவதை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்: சுகந்தன்)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை வங்கி
திருநெல்வேலிக்
கிளையில்
முகாமையாளராகக்
கடமையாற்றும்

**E.பிறேமராஜன்**


அவர்கள்
யாழ்.பல்கலையில்
நடைபெற்ற 25 ஆவது
பட்டமளிப்பு விழாவில்
MA IN REGIONAL
PLANNING பட்டம்
பெற்றமையையிட்டு
மனமகிழ்ச்சி
அடைவதுடன் மேலும் பல
பட்டங்கள் பெற்று
உயர்வடைய
வாழ்த்துகின்றோம்.

SIVAHAAMY STUDIO,
AMMAN ROAD,
THIRUNELVELY.

KAJHAN GROUP
76 B, ADIYAPATHAM ROAD,
THIRUNELVELY.

(S.S.SIVANANDAN)
(CHAVAKACHCHERI)

(சி/566286)




**Open new doors with the world's number one English language test IELTS exam conducted by The British Council in Jaffna on Saturday, 17th April, 2010**

Opening doors and creating opportunities around the world. Over 1.5 million test takers have realized their dreams through IELTS worldwide in the last 12 months.

The IELTS is recognized by over 6,000 global organizations, including government agencies, academic institutions and corporate bodies, as a trusted indicator of English skills. Check www.ielts.org for more details.

**Register now and share your talents with the world!**

BRITISH
COUNCIL

**For more information contact:**

**The British Council**
49 Alfred House Gardens, Colombo 00300
T : +94 11 7521521 E : info.lk@britishcouncil.org
W : www.britishcouncil.org/srilanka

**British College of English**
141 Adiyapatham Road, Thirunelveli, Jaffna
T : + 94 21 3216027
E : britishcollege141@gmail.com
**IELTS Registration Center for British Council**

## களசமூக செயற்பாட்டாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 31

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் மாணவர் வரவினை ஊக்கப்படுத்தல் தொடர்பான வேலைத்திட்டத்தை வடமராட்சி கல்வி வலயத்தில் மேற்கொள்வதற்காக கள சமூக செயற்பாட்டாளர்களாக இருவர் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படவுள்ளனர்.

எனவே மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி சமூக வியல் பட்டதாரியாக இருப்பதுடன் கணனி மற்றும் ஆங்கில அறிவுடையவராகவும் 35 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். மாதாந்த வேதனமாக 16ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனவும் மேலதிக விவரங்களை வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (50-201)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்.



யாழ் பல்கலைக்கழக பொதுப்பட்டமளிப்பு விழாவின்
அன்று (26.03.2010) கலைமாணி சிறப்புப்பட்டம் பெற்ற
செல்வன் **பாலசுப்பிரமணியம் கஜன்குமார்**
B.A.Hons (Geo)
அவர்களைப் பெருமையுடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
அப்பா, அம்மா, அக்கா சிவதர்சினி
அக்கா கஸ்தூரி இவர்களுடன் கந்தரோடையில் வசிக்கும்
அண்ணா சுரேஷ்குமார், அண்ணி தாரணி

பிளாக் வீதி
சங்கானை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த 26.03.2010,
வெள்ளிக்கிழமை நடைபெற்ற 25ஆவது
பொதுப்பட்டமளிப்பு விழாவில் சிறப்புக்
கலைமாணிப் B.A. (Hons) பட்டம் பெற்ற

செல்வன் **வ.கிருபாகரன்**

அவர்களை மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று அகிலமெங்கும் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ்கவென மனமார வாழ்த்துகின்றோம். 'தடைகள் பல கடந்து, பட்டங்கள் பல பெற்று வளமோடு வாழ்கவே'!

வாழ்த்துவோர்:
அத்தான்மார்-நிரஞ்சன், அமிர்தலிங்கம்,அக்காமார்-
யோகாம்பிகை, ஞானகி, மருமக்கள்-சபினா, சாருஜன்.

மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

(96190)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் 27.03.2010
அன்று நடைபெற்ற 25ஆவது பட்டமளிப்பு
விழாவில் வியாபார தொழில் நிர்வாக
மாணிப்பட்டம் பெற்ற எமது நண்பன்

**தங்கவேலாயுதம்**
**பிருந்தாகரன்**

அவர்களை மனமகிழ்ச்சியுடன் வாழ்த்துவதோடு, மேலும் பல பட்டங்கள் பெற்றுவாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
திருக்குமரன், முரளி, பகி, கிரி, பார்த்தீபன்,
விஜி, ராதவன், காலன், பிரதாப், மகேசன்,
ஜெயக்குமார், சுதன், கீதன், கணேசன்,
ரவீந்திரன், ராஜாஜி, திலீபன்,
கிரிஷாந், கோகுலன். (நண்பர்கள்)

நாகலிங்க சுவாமிகள் வீதி,
சங்கானை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தின் 25 ஆவது
பட்டமளிப்பு விழாவில் பிராந்தியத் திட்ட
மிடலில் முதுகலைமாணிப் (M.A-Merit)
பட்டம் பெற்ற எமது வித்தியாலய அதிபர்

**உயர்திரு. F.X. அன்ரன்**
(B.A.Dip.in.Ed, M..Phil. M.A)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பலபட்டங்கள் பெற்றுச் சிறப்புடன் பல்லாண்டுகள் வாழ இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

பிரதி அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
யா/நாவாந்துறை றோ.க.
வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

(96187)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழக 25 ஆவது
பட்டமளிப்பு விழாவில் 26.03.2010
அன்று இளநிலை வணிகமாணிப்
பட்டம் பெற்ற

**செல்வம் லக்ஸ்மன்**
(B.Com. (Hons) Spe.Accounting)

அவர்களை மனதாரப் பாராட்டி
வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்
களைப் பெற்று பல்லாண்டுகள் வாழ
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
மா.கெங்காதரன் (மாமா), கெ.நீலாவதி (அத்தை),
மச்சான்மார்- கஜன், மயூரன், தஜீவன், மா.மகேஸ்வரன் (மாமா),
ம.உமா (அத்தை), மச்சான்மார்- தனுசன், வித்தகன்,
மச்சாள்மார்- விதூர்ஷா, சாயித்தியா, மா. நிறஞ்சனா (அத்தை).

மில் ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

(96188)

# தமிழ்பேசும் மக்களின் தனித்துவத்தையும் தேவைகளையும் முன்னிறுத்தி உழைத்துவரும் கட்சிக்கே வாக்களியுங்கள்!

## மானிட விழுமிய மையம் வலியுறுத்து

கொழும்பு,மார்ச்31

''தமிழ் பேசும் மக்களின் தனித்துவத்தையும் தேவைகளையும் முன்னிறுத்தி உழைத்த தமிழ் கட்சியுடைய பிரதிநிதிகளே நாடாளுமன்ற பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட வேண்டும்''

- இவ்வாறு மனிதாபிமான பண்புகளை வலியுறுத்தி மக்கள் வாழ்வு வளம் பெற உதவும் 'மானிட விழுமிய மையம்' தமிழ் பேசும் மக்களிடம் வேண்டுகோளை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த மையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பெரியோர்களே! தாய்மார்களே! பல்கலைக்கழக மாணவர்களே! இளையோர்களே!

இத்தேர்தலில் தேசம் தேற்றுவோம்

தமிழ் பேசும் மக்களின் தலைவிதியை தீர்மானிக்கும் தலைவர்கள் யார்?

நாடாளுமன்ற பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர்களில் எங்களின் உரிமைகளையும் தனித்து வத்தையும் தேவைகளையும் உறுதியுடனும் விவேகத்துடனும் பெற்றுத்தரக் கூடியவர் யார் என்பதை அறிந்து கொண்டுள்ளோமா?

'காரியத்தை கைவிட்டு வீரியம் பேசுவோர்' பின்னால் செல்லப் போகின்றோமா? எமது மக்கள் எக்கேடு கெட்டால் என்ன! இலங்கை அரசிற்கு பாடம் புகட்டுவது மட்டும் தான் எமது குறிக்கோளா?

'ஆண்ட பரம்பரை ஆளவிரும்புகிறது; ஆணைதாருங்கள்! அனுப்பிவையுங்கள் என்று கோரும்; அதிகாரவர்க்கமே!' ஆளட்டும் என்று அடங்கிவிட்டோமா?

கடந்த கால படிப்பினைகளை எமது மனதில் நிறுத்தி பயனளிக்கும் வகையில் எமது வாக்குகளை நாம் எவ்வாறு பயன்படுத்துவது?

தமிழ்பேசும் மக்களே!

1) இதுவரை நாம் பட்ட துன்பங்கள் தொடராதிருக்கப் பயன்படுமா?

2) தமிழ் பேசும் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு கிடைக்க உதவுமா?

3) பேரிழப்புகளை சுமக்கும் நாம் கௌரவமாக வாழவும் எமது வாழ்க்கைத்தராதரம் உயரவும் உறுதுணையாகுமா?

4) பிராந்திய ரீதியாக மாறிவரும் உலக அரசியலில், எம்மை பகடைக் காய்களாக்காமல் காப்பாற்றுமா?

இத்தனை மாற்றங்களுக்கும் பங்களிப்புக்கும் காரணியான எங்கள் வாக்குகளை விவேகத்தோடு பாவிக்கும் பொறுப்பு எமதே!

கற்றது கை மண் அளவேனும் இதயம் பழுதற்று வலிமையுடையதாக இருப்பின் உண்மைகளை அறிவது கடினமல்லவே!

மாறுபட்ட கொள்கைகள் கருத்துக்கள் வேலைத்திட்டங்கள் என்பனவற்றை பிரதிபலிக்கும் சமூகமே ஆரோக்கியமானதாகும். அதுவே பல தரப்பட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் அமையும்.

இவர்களுக்கிடையிலான பல்வேறு கலந்துரையாடல்கள் மூலமே சூழலுக் கேதுவான அனைவரும் ஏற்றுக்கொள்ளும் அணுகுமுறைகள் கண்டறியப்படுகின்றன. அத்துடன், மக்களைச் சரியான முறையில் வழிநடத்தவும் முடியும். அவை நடந்தனவா.....?

எமது எதிர்காலம் ஒரு தனிப்பட்ட குழுவினரிடம் ஒப்படைக்கப்படுமாயின் ஆரோக்கியமான அரச கலந்துரையாடல்கள் தவிர்க்கப்பட்டு தொடர்ந்தும் தவறிழைக்கப்படுவதையே ஊக்குவிக்கும்.

தீர்வுகளை எட்ட முடியாத முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையிடும் அரசே தொடரும்.

எமது ஒற்றுமையை உறுதிப்படுத்த எவ்வித முயற் சியையும் இத்தகைய அரசியல்வாதிகள் மேற்கொள்ள மாட்டார்கள்.

ஜனநாயக மறுப்பு அரசியல் ஆளுமை எமது சமூகத்தில் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்த நாம் உதவுபவர்களாவே இருப்போம்.

இலங்கையில் எமது இருப்பையே கேள்விக்குறியாக்கி இருக்கும் கடந்த கால அரசியலைத் தவிர்த்து செயற்படுவது இத்தேர்தலில் அவசியமானதாகும்.

**எமது கடந்தகால அரசியலில் நாம் சாதித்தது என்ன?**

1) எமது உரிமைகளை அடைய முடியாத வகையில் செயற்பட்டோம்.

2) எமது மக்களின் பாரிய இழப்புகளுக்கும் துயரங்களுக்கும் பொறுப்பாளர்களானோம்.

3) ஜனநாயக மறுப்பும் வன்முறைகளும் சமூகத்தில் வேரூன்றியதுடன் நாம் சமூக பொறுப்புணர்வுடன் சுயமாகச் சிந்திப்பதையும் மறந்து போனோம்.

இத்தகைய அரசியல் சூழ்நிலை தொடருமாயின் எமது எதிர்காலம் இழுபறி நிலையிலேயே இருந்து மேலும் அழிவையே பெற்றுத்தரும்.

இந்த படிப்பினையை காலம் நமக்கு கற்றுத் தரவில்லையா?

முற்பகல் செய்வதுதானே பிற்பகல் விளை யும்!

ஆற்றில் போட்டாலும் அளந்துதானே போட வேண்டும்!

**இன்று நாம் செய்ய வேண்டியது என்ன?**

நடக்கவிருக்கும் தேர்தலில் எமது மக்கள் பயனடைய வேண்டுமாயின் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளையும் தனித்துவத்தையும் தேவைகளையும் முன்னிறுத்தி உழைத்த தமிழ் கட்சியினுடைய பிரதிநிதிகளே நாடாளுமன்றப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்படும் எமது பிரதிநிதிகள் பேச்சுகளை மேற்கொண்டு அனைவரும் அங்கீகரிக்கும் பொது அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும்.

மாறுபட்ட கருத்துக்கள், கொள்கைகள், வழிமுறைகள் பற்றிய ஆரோக்கியமான கலந்துரையாடல்களுக்கு வழி சமைக்கப்பட வேண்டும்.

ஜனநாயக நடைமுறைகள் வெற்றுக் கோஷங்களாக இல்லாமல் அனைத்து மக்களின் பங்களிப்புகளுக்கும் உத்தரவாதம் அளிக்கும் வகையில் ஊக்கமளிக்கப் படவேண்டும்.

தமிழ்பேசும் மக்களின் எதிர்காலம் பற்றிய முடிவுகள் தமிழ் பேசும் மக்களாலும் அவர்களது பிரதிநிதிகளினாலும் ஒன்றிணைந்தே எடுக்கப்பட வேண்டும்.

இதனை உறுதி செய்யும் வகையிலேயே தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

எங்கள் கருத்துக்களோடும் நம்பிக்கைகளோடும் ஒத்திசையக்கூடிய அரசியல் கட்சியை அடையாளம் கண்டு வாக்களிப்போம். எமது சமூகத்தின் ஆரோக்கியமான அரசியலுக்கு அத்தி வாரமிடுவோம்.

இதுவரை காலமும் இவர்கள் எமது மக்களுக்கு ஆற்றிய சேவைகளின் பட்டியலைக் கவனத்தில் கொள்ளுவோம்.

ஓரவஞ்சனையற்ற ஒற்றுமைக்கு உதவுவோம்!

பாசமுள்ள பராமரிப்பை வழங்கும் நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வோம்!

அறிவார்ந்த தைரியமான தலைமுறையாக பரிணமிப்போம்!

எங்கள் வாக்குகள் எமது மக்களின் எதிர்காலத்தை நல்வழியில் கொண்டு செல்ல உறுதி கொள்வோம்.

உண்மைகளைத் தேடுவோம்! உண்மைகளின் பின்னால் ஓரணி திரள்வோம்!!

விழித்தெழுக! விவேகம் பெறுக!! விடுதலைப் பாதையைச் செப்பனிடுக!!

இத்தேர்தலில் தேசம் தேற்றுவோம்! எம்மால் தெரிவு செய்யப்படுபவர்களின் கடமைகளைக் கட்டாயம் கண்காணிப்போம்!

இனியொரு புது விதி செய்யப் புறப்படுவோம்! - என்றுள்ளது. (ஒ-சி)

நாடாளுமன்றத் தேர்தல் - 2010
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - TNA)

எங்கள் இனத்தின் குரலாக துணிந்து குரல் கொடுக்கக்கூடிய
தொழிலதிபர் ஈ.சரவணபவனை
நாடாளுமன்றத்துக்கு அனுப்புவோம்.

குடாநாட்டின் தொழில்துறையை மேம்படுத்தக் கூடிய
ஆற்றல்படைத்த தொழிலதிபர்
சரவணபவனை வெற்றிபெறச் செய்வோம்.
வீட்டுச் சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டு உங்கள்
விருப்பு வாக்கை இலக்கம் 6க்கு வழங்குங்கள்.

அங்கத்தவர்கள், பணிப்பாளர் சபை, பணியாளர்கள்.
வடமராட்சி கிழக்கு பனை,தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
மருதங்கேணி.



X

இலங்கைத் தமிழரசுக் கட்சி

உதயன்
நிர்வாக இயக்குநர்
தொழிலதிபர்
ஈ.சரவணபவன்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | 12 | | | | | | | | |

# ஆயுதப் போராட்டத்திற்கு முடிவு கட்டிவிட்டு சமாதான வழிக்குத் திரும்புங்கள்

**வீ.ஆனந்தசங்கரி 12.03.2009 அன்று பிரபாகரனுக்கு எழுதிய கடிதம்**

அன்புள்ள பிரபாகரன்,

**எம் மக்களைக் காப்பதற்கான இறுதிச் சந்தர்ப்பம்.**

உமது கட்டுப்பாட்டின் கீழ் நீர் வைத்திருக்கும் 81,000 குடும்பங்களைச் சேர்ந்த மூன்று லட்சத்து முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட மக்களின் சாபம் உம்மை நிம்மதியாக வாழவிடாது. உம்மையும் உமது சந்ததியினரையும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். இன்றும் உம்மைத் தொடர்ந்து ஆதரிப்பவர்களையும் அவர்களின் சாபம் விட்டு வைக்காது. இப்போதாவது உமது மனதை மாற்றி நீர் தடுத்து வைத்திருப்பவர்களை விடுதலை செய்யும்படி கேட்கின்றேன். அம் மக்கள் பட்டினியால் இறக்க ஆரம்பித்து விட்டனர். அதற்கு முழுப்பொறுப்பையும் நீரே ஏற்கவேண்டும்.

என்ன செய்வது என அறியாது உமது தற்போதைய இருப்பிடம் தெரியாதமையால் இதை ஒரு பகிரங்கக் கடிதமாகவே எழுதுகின்றேன். இக்கட்டத்திலேனும் நீர் உருவாக்கி வைத்த சிலவற்றையும் மாற்றியமைக்க முடியாதாவெனக் கேட்க விரும்புகின்றேன். வழமைபோல் இதற்கும் உம்மிடமிருந்து எதுவித பதிலையும் எதிர்பார்க்கவில்லை. என்றாலும் நீர் இந்த நிலைமைக்கு ஆளாக்கிய மக்களை காப்பதற்கு உறுதியான சில நடவடிக்கைகளை எடுப்பீர் என நான் உண்மையாக நம்புகின்றேன். நல்ல எண்ணத்துடன் என்னால் எழுதப்பட்ட கடிதங்களை அவற்றில் அனேகமானவை உம்முடைய, உமது போராளிகளுடைய நடவடிக்கைகளைக் கண்டித்திருந்தும் அவற்றை நீர் பாரதூரமாக கருதாதமை துர்பாக்கியமே.

இவ்வாறு செய்வதற்கு எனக்கு எதுவித சுயநல நோக்கமும் இருக்கவில்லை. நான் எவருடைய முகவராகவும் செயற்படவில்லை. நான் என்றும் உமது ஆயுதபோராட்டதை ஆதரித்தவனுமில்லை. எப்போதும் வன்முறையற்ற போராட்டத்திலேயே நம்பிக்கை கொண்டவனாகவே வாழ்ந்தேன். எவரையும் பகைக்காதில் அகிம்சை வழியில் எமது பிரச்சினையை வெற்றிகரமாக அணுகியிருக்கலாம் என இன்றும் எண்ணுகின்றேன். நான் உம்மை கண்டித்து எழுதி வந்தமைக்கு இரு காரணங்கள் பிரதானமாக இருந்தன. அதில் ஒன்று தொடர்ந்து உமது குற்றங்களைச் சுட்டிக்காட்டி வந்தால் உம்மை அதன் மூலம் ஜனநாயக வழிக்குத் திருப்பலாம் என எண்ணினேன். எமக்கு எதுவித அந்தஸ்தும் கோராது உமக்கு முழு ஆதரவு தந்ததன் நோக்கமும் அதுவே. மறு காரணம் உமது கட்டுப்பாட்டில் கால் நூற்றாண்டுக்கு மேல் நிரந்தர பயத்துடனும், பீதியுடனும் விவரிக்க முடியாத கஷ்டங்களை அனுபவித்து வந்த மக்களை விடுதலையடையச் செய்யலாம் என கருதினேன். அம்முயற்சியில் உம்மனதை பெருமளவில் நோகடித்து உமது வெறுப்பையும் உமது போராளிகளின் கோபத்தையும் சம்பாதித்திருப்பேன். அது பற்றி நான் கவலைப்படவில்லை. என் முயற்சி சுயநலமற்ற உண்மையானதும் நேர்மையானதுமென நான் முழுக்க நம்பியதால் எனது உயிருக்கு ஏற்படக் கூடிய எந்த ஆபத்தையும் எதிர்நோக்க தயாராயிருந்தேன்.

எனது உண்மையான அக்கறை தமிழ் மக்களின் நன்மை தழுவியதையே பிரதிபலித்துக் காட்டியது என்பதை நீரும் பாராட்டுவீர் என திடமாக நம்புகின்றேன். இந்த நிலைப்பாட்டை எடுத்தமையால் உமக்கு ஆதரவான உலகம் முழுவதிலும் செயற்படும் அச்சு, மின் ஊடகங்கள் மூலமாக எற்படுத்திய அபகீர்த்தியும் மன உளைச்சலும் ஒரு மனிதனின் பொறுமையின் எல்லையை தாண்டியவையாகும். அவை மிகவும் கீழ்த் தரமானவை என்றாலும் அவற்றைத் தாங்கிக்கொண்டேன்.

அரசியல் பிரமுகர்களாகிய இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி, ஜனாதிபதி ஆர்.பிறேமதாஸா, ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸநாயக்க அவருடன் பல அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் படுகொலைகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கொலை முயற்சிகள் ஆகியவற்றில் நீர் சம்பந்தப்பட்ட காலகட்டத்திற்கு உமது சிந்தனையை பின்னோக்கி விட்டுப்பாரும். இச் செயல்களால் நீர் அடைந்தலாபம் தான் என்ன? தமிழ் நாடு உட்பட முழு இந்தியாவினதும், சிங்கள மக்களினதும் கடும் வெறுப்பைச் சம்பாதித்தீர்.

தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகம் திரு.அ.அமிர்தலிங்கம், யாழ். மாவட்ட சபைத் தலைவர் திரு.எஸ்.நடராசா, யாழ்.மேயர் திரு.பொ.சிவபாலன், அரசியல் சட்ட வல்லுநர் கலாநிதி நீலன் திருச் செல்வம், யாழ்.நகர மேயர் சறோஜினி யோகேஸ்வரன் இன்னும் பல அரச அதிகாரிகள் கல்விமான்கள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், பாராளுமன்ற உறுப்பினர் கள், உள்ளூர் அரசியல் வாதிகள் இதுபோன்று இன்னும் பல பிரமுகர்கள் உம்மால் படுகொலைசெய்யப்பட்டுள்ளனர். உமது கொலைகள் தமிழ்த் தலைமையில் பெரும் இடைவெளியை ஏற்படுத்தியது. உயர்மட்டத் தலைவர்கள்



பலர் கொலை செய்யப்பட்டமையால் தமிழர் மத்தியில் காளான்கள் போல பல புதிய தலைவர்கள் உருவானார்கள். எக்குழுவினருடனும் முரண்படாது செயற்பட்ட மிதவாதக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியைக்கூட நீர் விட்டு வைக்கவில்லை. சில கூட்டணித் தலைவர்களை கொன்றீர், ஏனையவர் சிலரை நாடாளுமன்ற பதவியைக் கொடுத்து விலைக்கே வாங்கிவிட்டீர். எந்தவொரு சிங்களவராலோ அல்லது இஸ்லாமியராலோ என்றும் எதுவித தீங்கும் விளைவிக்கப்படாத இந்த தமிழ்த் தலைவர்களை பூரணமாக அற்றுப்போகச்செய்ய அந்த தமிழ்த் தலைவர்கள் உமக்கு என்ன தீங்கு செய்தார்கள்?

இஸ்லாமியரான இந்து சமயத்தில் மிக பாண்டித்தியம் பெற்றிருந்த மன்னார் அரச அதிபராக இருந்த என் நண்பன் ஜனாப்மக்பூல் அவர்களை நினைத்து இன்னும் அழுகின்றேன். அவரைக் கொன்றதாலேயோ அல்லது ஒரு சிங்களவர், இஸ்லாமியர் எதுவித தீங்கு விளைவிக்க எண்ணாத மற்றத் தலைவர்களைக் கொன்று என்ன இலாபத்தை அடைந்தீர். படிப்படியாக உமது பெறுமதியினை இழந்ததைத்தவிர தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்ட இஸ்லாமிய சகோதரர்களைப் பத்தாம் திகதி நமிநாயகம் அவர்களின் பிறந்த தினத்தைக்கூட கொண்டாட விடாது 15 அப்பாவி மக்களைப் பலியெடுத்தும் 40இற்கும் மேற்பட்டோரை காயப்படுத்தியும் உள்ளீர். இப்போதாவது உமது இரத்த வெறி அடங்கியதா? எப்படியேனும் ஓர் இனக்கலவரத்தை ஏற்படுத்த வேண்டும் என நீர் எடுத்துவரும் முயற்சியில் இதுவும் ஒன்று. உமது பொறிக்குள் இனியும் இந்நாட்டு மக்கள் விழத்தயார் இல்லை என்பதை உணர்ந்து கொள்ளவும் எத்தனை அப்பாவிச் சிங்களவர்கள், தமிழர்கள் இஸ்லாமியர்களை நீர் இரத்தத்தால் குளிப்பாட்டியுள்ளீர்? பள்ளிவாசல்களில் தொழுகையில் ஈடுபட்டிருந்த அப்பாவி இஸ்லாமிய சகோதரர்களை ஒரு தடவைக்கு மேல் படுகொலை செய்துள்ளீர். பௌத்த மதத்தினருக்கு மிகவும் புனித நகராகிய அனுராதபுரத்தில் வைத்து பௌத்த யாத்திரிகளை படுகொலை செய்தீர். உலகப் பிரசித்திபெற்ற புத்தபெருமானின் புனித தந்தங்களைக் கொண்டுள்ள கோயிலை அழிக்க முற்பட்டீர். ஒரு பேருந்தில் நிறைந்திருந்த பௌத்த குருமாராக பிரதிக்கினை செய்யப்பட்ட சிறுவர்களைப் படுகொலை செய்ய உமது உள்ளம் எவ்வாறு இடம் கொடுத்தது. வடபகுதியில் வாழ்ந்த இஸ்லாமிய சகோதர்களை ஈவிரக்கமின்றி அவர்களின் சகல சொத்துக்களையும் பறிமுதல் செய்துவிட்டு வெறும் 500 ரூபா கொடுத்து வெளியேற்றினீர். எல்லைக்கிராமங்களில் வாழ்ந்த சிறுபாலகர்களைத்தன்னும் விட்டு வைத்தீரா? பல அப்பாவிச் சேனை விவசாயிகளை காரணமின்றிச் சுட்டுத்தள்ளினீர்.

எத்தனை கிளைமோர் பொறி, நிலப் பொறி, கைக்குண்டுத் தாக்குதல்கள் மூலம் பல்லாயிரக்கணக்கான பெருமளவு அப்பாவி சிங்கள மக்களையும் அவர்களுடன் அப்பாவித் தமிழர்களையும் இஸ்லாமியர்களையும் கொன்றுகுவிக்கக் காரணமாக இருந்திருக்கின்றீர்.

இத்தனை வாழ்விழந்த ஆண், பெண்கள் எத்தனை அநாதைகள் ஆகியோரை உருவாக்கியுள்ளீர். எத்தனை பேரைக் கால், கைகள், கண்பார்வையை இழக்கச் செய்துள்ளீர். எத்தனை பணக்கார்களை ஒரே இரவில்... அவர்களுக்கு எதைத்தான் விட்டு வைத்துள்ளீர். அவர்களின் விவசாயமும், கைத்தொழிலும் எங்கே? அவர்கள் வீடுகள், வீட்டுத்தளபாடங்கள், வாகனங்கள் எல்லாம் எங்கே? அவர்களின் கல்வி எங்கே? அத்தனையும் அழிந்துவிட்டன. இதுதான் ஊழ்வினையா? என மக்கள் கேட்கின்றார்கள்.

இவையும் இன்னும் பல விடயங்கள் நடந்துவிட்டன. உமது செயற்பாடுகள் பல தொகுப்புக்களாக எழுதலாம். அவற்றின் சுருக்கத்தின் ஒரு துளியே நான் எழுதியுள்ளவை.

நான் எழுதிய கடிதங்கள் உம்முடன் இருப்பின், அல்லது நான் எழுதியது உமக்கு ஞாபகம் இருப்பின், உமது முன்சிந்தனையற்ற செயற்பாடுகளில் விளைவுகள் புரியும். ஆயுதங்களைக் கைவிட்டு பேச்சு வார்த்தைக்கு போகுமாறு எத்தனை தடவை மன்றாடி கேட்டிருந்தேன். ஏதாவது ஒரு கட்டத்திலேயேனும் எனது புத்திமதிகளைக் கேட்டு சரியாகச் செயற்பட்டிருந்தால் எல்லாத் தமிழ் மக்களுக்கும் எதாவது மிஞ்சியிருந்திருக்கும். இப்போது கால் நூற்றாண்டுக்கு மேல் ஆயுதப் போராட்டம் நடத்தி பல்லாயிரக்கணக்கான மக்களை பலிகொடுத்து எம் அனைவரையும் ஒட்டாண்டியாக்கியதுதான் மிச்சம். வடபகுதி மக்களில் எத்தனைபேர் தம் உடைமைகள் அனைத்தையும் இழந்த நிலையில் இன்று உணவுப் பொட்டலங்களைப் பெற வரிசையில் காத்துநிற்கின்றனர். எனது ஞாபகத்திற்கு எட்டியவரையில் வன்னிப்பகுதியில் பிச்சைக்காரரை நான் சந்தித்ததேயில்லை.

உமது குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறிக்கொண்டு உமக்கு முறையான புத்திமதி கூறத் தவறியவர்களும் தமிழ் நாட்டில் சில தலைவர்களால் மிகத்தவறாக வழி நடத்தப்பட்ட மக்கள் சிலரையும் தவிர முழு உலகமும் உங்களுக்கு மாறாகத் திரும்பி விட்டது. மக்களை மிக மோசமாக நடத்துகிறீர் என சர்வதேச சமூகம் உம்மீது குற்றம் சுமத்துகிறது. உமது செயற்பாடுகளை ஐக்கிய நாடுகள் சபையும் ஐரோப்பிய ஒன்றியமும் வன்மையாக கண்டித்துள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர், மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு போன்ற பல அமைப்புகள் கூட நீங்கள் அப்பாவி மக்களை பலாத்கரமாகத் தடுத்து வைத்திருப்பதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளன. பல்வேறு நாடுகளின் தலைநகர்களில் ஒன்று கூடிய மக்கள் எம்மக்களை விடுவிக்க வேண்டும் என கேட்டார்களேயன்றி உமக்காகப் பேசவில்லை. உமக்கு அவர்கள் விடுத்த செய்தி எமது மக்களை விடுவிக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களைக் காப்பாற்றும் முழுப்பொறுப்பும் இப்போது உமது கையிலேயே அவர்களை இந்த நிலைக்கு ஆளாக்கியவர் நீரே. ஆகவே எதுவித தாமதமுமின்றி மக்கள் எங்கே போக விரும்புகிறார்களோ அங்கே போக அனுமதிக்கவும். உம்மை ஆண்டவனின் பெயரால் கேட்கின்றேன். தயவுசெய்து சுயநலத்துடன் செயற்படும் உமது இடத்தைப் பிடிக்க ஆவலுடன் காத்திருக்கும் அரசியல் கழுகுகளிடம் மக்களைப் பாரம் கொடுத்து போதிய கஷ்டங்களை அனுபவித்த மக்களின் துன்பமான வாழ்க்கையை மேலும் நீடிக்க விடாது சுதந்திரமாக வாழ விரும்பும் மக்களை அவர்கள் வழியிலேயே விட்டுவிடுங்கள். துப்பாக்கிகளை திரும்பி பார்க்கவே அவர்கள் இப்போது விரும்புகிறார்களில்லை. விளையாட்டுத் துப்பாக்கிகள் உட்பட இக்கட்டத்திலேனும் துப்பாக்கிகளை கைவிட்டு யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வரவும். சர்வதேச ஆதரவுடன் கண்ணி வெடிகளை அகற்ற அதிககாலம் எடுக்காது. விரைவில் வன்னிப் பகுதி மக்கள் தமது இல்லங்களுக்குத் திரும்பி எஞ்சியுள்ள தமது பொருள்களையும் மீட்டெடுக்க முடியும். இப்போது கூட நீர் எனது புத்தி கேட்கத்தவறின் ஏற்கனவே மக்கள் இழந்ததுபோக அவர்களின் எஞ்சியுள்ள பல்லாயிரம் கோடி பெறுமதியான சொத்துக்களை அவர்கள் இழப்பதற்கு நீரே பொறுப்பேற்க வேண்டும். அவர்கள் தமது வீடுகளுக்கு திரும்ப நீண்டகாலம் எடுக்குமாயின் அவர்களின் சொத்துக்கள் எதுவும் அவர்களுக்கு இல்லாமல் போய்விடும். இதுவே நான் உமக்கு நம்பிக்கை அத்தனையையும் இழந்த நிலையில் விடுக்கும் இறுதி வேண்டுகோளாகும். மிக தாழ்மையாக விடுக்கும் வேண்டுகோள். நாம் அனைவரும் சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர், மலாயர்கள் உடன் ஏனைய இன மக்களும் சமாதானமாகவும் அமைதியாகவும் ஒன்றுபட்ட ஐக்கிய இலங்கைக்குள் சம உரிமையுடன் வாழ வேண்டும் என்பதே. இந்த நாட்டின் அமைதியைக் குலைத்த நீரே நிரந்தர சமாதானத்தையும் தரக்கூடிய தனி நபராகும்.

## உங்களோடு நிற்கும் கழுகுக் கூட்டத்தை நம்பாதீர்கள்!

நன்றி
அன்புடன்
வீ.ஆனந்தசங்கரி
தலைவர்
தமிழர் விடுதலைக் கூட்டணி.

தமிழர் விடுதலைக் கூட்டணி

(சி/566097)

# தோல்வி மனப்பான்மையிலிருந்து விடுபட்டு அரசுக்கு எதிராக வாக்களிக்கவேண்டும்

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் கண்டியில் தெரிவிப்பு



கண்டி, மார்ச் 31

மக்கள் தோல்வி மனப்பான்மையில் இருந்து விடுபட்டு அரசுக்கு எதிராக வாக்களித்து, தமது நிலைப்பாட்டை அரசுக்கு புலப்படுத்த வேண்டும் - என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், கண்டி மாவட்ட ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டார்.

உடுநுவர நியுஎல்பிட்டியவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின் பின்பு மக்கள் மத்தியில் ஒருவித தோல்வி மனப்பான்மையும், விரக்தியும் காணப்படுகின்றது. இதிலிருந்து மக்கள் வெளியே வந்து அரசின் அராஜக செயற்பாட்டுக்கு எதிராக துணிச்சலுடன் செயற்பட்டால் ஜனநாயம் காப்பாற்றப்படும்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைமை பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் களமிறங்கினால் ஆதரவளிப்போம் என்று உரத்துக் கூறியவர்கள் இன்று ஆளும் சட்சியிடம் சரணாகதியாகி விட்டனர். எனவே, தீர்ப்பு வழங்கும் கடமையை மக்களிடம் விட்டுவிடுவோம்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைமை நேர்மையாகவே அரசியல் புரிகின்றது. இதனை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் சிறுபான்மை மக்களின் முடிவுகளை அரசு மீள்பரிசீலனை செய்யவேண்டும். அம்மக்கள் தெரிவிக்கும் செய்தியை அரசுபுரிந்து கொள்ளவேண்டும்.

கண்டி மாவட்டத்தில் இருந்து மூன்று முஸ்லிம் பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யும் வாய்ப்பு உள்ளது. எனவே, மக்கள் தமது வாக்குகளை சிந்தித்துப் பயன்படுத்தவேண்டும்.

கடந்த பொதுத்தேர்தல்களில் மூன்று பிரதிநிதிகளைத் தக்கவைத்தோம். முஸ்லிம்களின் அரசியல் தனித்துவத்தைத் தொடர்ந்தும் பேணிக்கொள்ள தனித்துவக் கட்சி இன்றியமையாததாகும். எனவே, இந்நாட்டு முஸ்லிம்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை தொடர்ந்தும் பலப்படுத்தவேண்டும்.

இப்பொதுத் தேர்தலில் மக்கள் சக்தியின் மூலம் அரசை வீட்டுக்கு அனுப்ப முடியும். இப் போது மக்கள் அமைதியாக இருக்கின்றனர். இந்த அமைதி ஏப்ரல் 8 ஆம்திகதி வரையும் தொடரும். அன்றைய தினம் மக்கள் தோல்வி மானப்பான்மையில் இருந்து வெளியேறி அரசுக்கு எதிராக வாக்களிப்பர் - என்றார்.

(சி)

# நாட்டின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்துவோம்

## பண்டாரவளை நகரசபை உறுப்பினர் ஹைதர் தெரிவிப்பு

மொனராகலை, மார்ச் 31

நாட்டின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கரங்களை வலுப்படுத்த வேண்டும் இதற்காகவே தாம் ஆளும் தரப்புடன் இணைந்தர்ர் என பண்டார வளை நகர சபை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் அல் ஹாஜ் எம். எச். ஹைதர் தெரிவித்தார்.

பண்டாரவளை மொஹிதீன் கார்டனில் இடம்பெற்ற கூட்டமொன்றில், தான் அரசுடன் இணைந்த விடயம் தொடர்பாக விளக்கமளிக்கும்போதே அவர் மேற்படி தகவலைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே இன்னும் ஏழு வருடங்கள் ஆட்சியில் இருக்கப்போகிறார். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்குவரும் என்பதெல்லாம் வெறும் கட்டுக் கதை. இதை நம்பி ஐ.தே.கட் சிக்கு வாக்களிப்பது வீண்வேலை. எனவே, ஆட்சி அமைப்பவர்களுடன் சேர்ந்தது எமது சமுதாயப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது காலத்தின் தேவையாகும்.

வெறுமனே எதிர்க்கட்சியில் உட்கார்ந்து கொண்டிருப்பதில் எமது சமூகத்திற்குப் பயனேதும் கிடைக்கப் போவதில்லை. கடந்த காலத்தில் முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து செயற்பட்டேன். அதன் தலைமைப்பீடமோ, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடமோ பண்டாரவளை மக்களுக்கு எதுவுமே செய்யவில்லை.

இந்த நிலையில் எனது நிலைப் பாட்டை மாற்றி எனக்கு வாக்களித்த மக்களுக்கு ஆளும் தரப்பிலிருந்து சேவைபுரிய முன் வந்தேன்-என்றார். (ளி)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நினைத்திருந்தால் ஜனாதிபதியுடன் சேர்ந்து யுத்தத்தைத் தவிர்த்திருக்கலாமாம்

## கூறுகிறார் மத்திய மாகாணத் தமிழ்க்கல்வி அமைச்சர்

நுவரெலியா, மார்ச் 31

''கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பெரும்பாலான தமிழர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்கவில்லை. இதற்கு யுத்தமும் ஒரு காரணமாக இருக்கலாம். எனினும் தமிழ்க் கூட்டமைப்பினர் நினைத்திருந்தால் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட்டு இந்த யுத்தத்தைத் தவிர்த்திருக்கலாம்''

- இவ்வாறு மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சரும் இந்துசமய அமைச்சருமான வே. இராதாகிருஷ்ணன் தெவித்தார்.

மஸ்கெலியா கிராப்புத் தோட்டப்பிரிவில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சினால் 35 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கலாசார மண்டபத் திறப்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த மாகாணசபைத் தேர்தலில் எனக்கு எண்ணாயிரம் வாக்குகளே கிடைத் தபோதும் நாம் அரசுடன் இணைந்து கேட்டதின் பயனாக மீண்டும் அமைச்சராகப் பதவி வகிக்கின்றேன். என்னைவிட 45 ஆயிரம் வாக்குகள் பெற்றவர்கள் எதிரணியில் அமர்ந்துகொண்டு மக்களுக்குச் சேவைபுரிய முடியாமல் உள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும்கூட நுவரெலியா மாவட்டத்தில் 29 ஆயிரம் வாக்குகளினால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளரான ஜனாதிபதி நுவரெலியா மாவட்டத்தில் தோல்வி கண்டார்.

சிறுபான்மையினர் எங்கெங்கெல்லாம் உள்ளனரோ அங்கெல்லாம் ஜனாதிபதிக்கு வாக்குகள் கிடைக்கவில்லை: ஆனால், அவர் பெரும்பான்மை மக்களது 18 லட்சம் அதிகப்படியான வாக்குகளைப்பெற்று வெற்றி பெற்று இன்னும் ஏழு ஆண்டுகள் இந் நாட்டின் நிறைவேற்று அதிகாரம்' கொண்ட ஜனாதிபதியாக இருக்கப்போகிறார்.

இதற்காக தமிழ் மக்களைக் குறை சொல்ல முடியாது. இந்த நாட்டில் 30 ஆண்டுகாலம் கொடிய யுத்தம் இடம்பெற்றது. இறுதியாக யுத்தம் முடிவுக்கு வந்தவேளையில் பல்லாயிரக்கணக்கானோர் மாண்டனர். ஏகதலைவன் என்று கூறப்பட்ட பிரபாகரன் உட்பட அனைவரும் மாண்டனர். எனவே, இவ்வாறான யுத்தத்தைக் கருத்தில்கொண்டு மக்கள் அரசுக்கு எதிராக வாக்களித்திருக்கலாம்.

எனினும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒன்றுபட்டு ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட்டிருந்தால்இந்த யுத்தத்தை தவிர்த்திருக்கலாம். புலிகள் இயக்கதினரும் இன்று அரசியலில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். பாரிய உயிரிழப்புகளையும் தவிர்த்திருக்கலாம்.

எனவே, இ.தொ.காவின் சாணக்கிய மிக்க தலைவர் முத்து சிவலிங்கமும், பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமானும் தீர்க்கமான முடிவை மேற்கொண்டு அரசுடன் இணைந்து செயற்பட்டதால் எனக்கு மத்திய மாகாணத்தில் கல்வி அமைச்சு கிடைத்தது-என்றார்.(ளி)




# கண்டியில் வெற்றியீட்டக்கூடிய தமிழ் வேட்பாளர் நான் மட்டுமே

## மனோ கணேசன் தெரிவிப்பு

கண்டி,மார்ச் 31

கண்டி மாவட்டத்தில் வெற்றியீட்டக் கூடிய ஒரே தமிழ் வேட்பாளர் என்ற தகுதி தம்க்கு மட்டுமே உள்ளதென ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

சிங்கள நாளேடு ஒன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணி மேல் மாகாண மக்களுக்கு மட்டும் சேவையாற்றிய காலம் மாறி தற்போது முழு இலங்கை வாழ் தமிழர்களுக்கும் சேவையாற்றக் கூடிய நிலை உருவாகியுள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள முஸ்லிம் மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொண்ட ஓர் வேட்பாளரால் மட்டுமே கண்டி மாவட்டத்தில் வெற்றியீட்ட முடியும் எனவும், அந்தத் தகுதி தம்மிடமே காணப்படுகின்றதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தமது கட்சிக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது எனவும், தனிப்பட்ட நபர்களின் வெற்றியைக் கருதி கட்சி செயற்படாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தம்மைப் புலி ஆதரவாளர் என சிலர் அடையாளப்படுத்த முயற்சிக்கின்றபோதிலும், அது ஓர் அப்பட்டமான பொய் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனிநாட்டுக் கோரிக்கை தொடர்பான அரசியல் ரீதியான பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை எனவும், ஆயுதப் போராட்டத்திற்கு மட்டுமே தீர்வு காணப்பட்டுள்ளதெனவும் .அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும், தற்போதைய அரசு காத்திரமான அரசியல் தீர்வுத்திட்டமொன்றை முன்வைப்பதற்குத் தவறியுள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்ட சம்பவத்தை ஓர் தனிப்பட்ட அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாகவே தாம் நோக்குகிறார் என்றும் அவர் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ளி)

# தம்புள்ளை வைத்தியசாலைக்கு இரவுநேரப் பணிக்குவரும் பெண் வைத்தியர்களை வழிமறித்து முத்தமிட்டுவந்த மர்ம ஆசாமி சிக்கினார்

கொழும்பு, மார்ச் 31

தம்புள்ளை வைத்தியசாலை விடுதியில் தங்கியிருந்து இரவுநேரங்களில் அவசரக் கடமைக்காக வரும் பெண் வைத்தியர்களை இடையில் வழிமறித்து அவர்களை பலவந்தமாகக் கட்டிப்பிடித்து முத்தமிட்டுவந்த ஆசாமி ஒருவர் மடக்கிப்பிடிக்கப்பட்ட சுவாரஸ்யமான சம்பவம் ஒன்று அந்த வைத்தியசாலையில் அண்மையில் இடம் பற்றுள்ளது.

குறித்த ஆசாமி, துணிச்சல்மிக்க வைத்தியர் ஒருவரை முத்தமிட முயன்றபோதே மடக்கிப்பிடிக்கப்பட்டார் என்றும் கூறப்படுகின்றது.

மிகநீண்ட காலமாகவே விடுதியில் தங்கியிருந்து இரவில் வைத்தியசாலைக்கு வரும் பெண்வைத்தியர்களை விடுதிக்கும் வைத்தியசாலைக்குமுள்ள இடைப்பட்ட தூரத்தில் வைத்து மர்ம ஆசாமி ஒருவர் பலவந்தமாக முத்தமிட்டுவருகின்றார் என்ற கிசுகிசு வைத்தியசாலை வட்டாரத்தில் நிலவிவந்துள்ளது.

இந்தநிலையில் அண்மையில் விடுதியில் தங்கியிருந்த சிரேஷ்ட பெண்வைத்தியர் ஒருவர் அவசர அழைப்பின்பேரில் வைத்தியசாலையை நோக்கி விரைந்துள்ளார். அப்போது குறித்த ஆசாமி இருளில் அவரை வழிமறித்துக் கட்டிப்பிடித்து முத்தமிட முயன்றுள்ளார். எனினும் துணிச்சல்மிக்க அந்த வைத்தியர் புத்திசாதுரியமாக அவரை மடக்கிப்பிடித்துக்கொண்டு கூச்சலிட்டதில் திரண்ட வைத்தியசாலை ஊழியர்களும், ஏனையவர்களும் அந்த ஆசாமியைப் பிடித்து தம்புள்ள பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என வைத்திய அதிகாரி திருமதி இரேஷா பெர்னாண்டோ தெரிவித்தார். (ளி)

# நுவரெலியாவில் கல்வி அதிகாரிகள் கடமை நேரங்களில் தேர்தல் பிரசாரம்

## இ.தொ.ஐ.மு. செயலர் கனகராஜ் மாகாணசபை அமர்வில் ஆட்சேபம்

நுவரெலியா,மார்ச் 31

தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளில் ஆசிரியர்கள் உள்ளிட்ட அரச ஊழியர்கள் ஈடுபடுகின்றமையைத் தவிர்க்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளபோதிலும் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள சில பாடசாலைகளின் கல்விசார் உத்தியோகத்தர்களும் மற்றும் கல்வி அதிகாரிகளும் கடமை நேரங்களில் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கிப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பில் தமது விசனத்தை வெளியிட்டிருக்கும் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும், மத்திய மாகாண சபை உறுப்பினருமான கணபதி கனகராஜ் இவ்விடயத்தை மத்திய மாகாண முதலமைச்சரின் கவனத்துக்கும் கொண்டுவந்துள்ளார்.

மத்திய மாகாணசபையின் மாதாந்த அமர்வின்போது தாம் இவ்விடயத்தை மத்திய மாகாணசபையின் கவனத்துக்குக் கொண்டுவந்தார் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து கடமை நேரங்களில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுகின்ற கல்விசார் உத்தியோகத்தர்கள் குறித்தும், கல்வி அபிவிருத்தி என்ற ரீதியில் அரசியல் கூட்டங்களை நடத்துகின்ற கல்வி அதிகாரிகள் குறித்தும் உரிய கவனம் செலுத்தப்படுமென மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க உறுதியளித்துள்ளர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்..(ளி)




# அசேதன இரசாயனவியல்

**2010 மாணவர்கள் இதுவரை முடிவடைந்த பாடத்திட்டங்களை அலகு ரீதியாக ஆழமாக மீட்டல் செய்வதற்கான ஒரு விசேட தொகுப்பு**

## பல்தேர்வு வினாக்கள்

01. கூட்டம்-I மூலகங்கள் பற்றிய தகவல்களில் சரியானது,
 1) எல்லா மூலகங்களும் உலோகங்கள் ஆகும்.
 2) எல்லா மூலகங்களும் அறைவெப்பநிலையில் திண்மநிலைக் காபனேற்றை உருவாக்கும்.
 3) எல்லா மூலகங்களும் அறைவெப்பநிலையில் திண்மநிலை நைத்திரேற்றை உருவாக்கும்.
 4) எல்லா மூலகங்களும் கற்றயனைத் தோற்றுவிக்கும்போது உருவாகும் கற்றயன் சடத்துவ வாயுவின் இலத்திரன் நிலையமைப்பு உடையது.
 5) எல்லா மூலகங்களும் S உபசக்திமட்டத்தில் ஒரு இலத்திரனைக் கொண்டிருக்கும்.

02. கூட்டம்-II இல் மேலிருந்து கீழாக அதிகரிக்கும் இயல்பு அற்றது எது?
 1) தாக்குதிறன். 2) உலோக இயல்பு.
 3) மின்நேரியல்பு. 4) அணு ஆரை. 5) கொதிநிலை.

03. கூட்டம்-I மூலகங்களின் இயல்புகள் மேலிருந்து கீழாகக் குறையும் இயல்புகளில் தவறானது.
 1) அயனாக்கற் சக்தி. 2) கொதிநிலை. 3) உருகுநிலை.
 4) மின்னெதிர் இயல்பு. 5) தாக்குதிறன்.

04. கூட்டம்-I, கூட்டம்-II இற்கு ஆவர்த்தனம் வழியே அதிகரிக்கும் இயல்பு அல்லாதது எது?
 1) அயனாகக்ற் சக்தி. 2) அணு ஆரை. 3) கொதிநிலை.
 4) அடர்த்தி 5) மின்எதிர் இயல்பு.

05. கூட்டம்-I, கூட்டம்-II என்ற போக்கில் ஒரே ஆவர்த்தனத்தில் குறைந்த இயல்பு அல்லாதது.
 1) அயனாரை. 2) அணு ஆரை. 3) தாக்குதிறன்.
 4) உருகுநிலை. 5) தாழ்த்தும் இயல்பு.

06. பின்வரும் ஒட்சைட்டுக்களில் நீரில் கரைதிறன் குறைந்த ஒட்சைட்டு எது?
 1) BaO 2) BeO 3) $LiO_2$ 4) $Na_2O$ 5) $Rb_2O$

07. பின்வரும் காபனேற்றுக்களில் சூடாக்கும்போது ஒன்றுக்கு மேற்பட்ட வாயுக்களைத் தரக்கூடியது,
 1) $(NH4)_2CO_3$ 2) $Li_2CO_3$ 3) $BaCO_3$ 4) $PbCO_3$ 5) $Na_2CO_3$

08. பின்வரும் காபனேற்றுக்களில் மீதியின்றி வெப்பப்பிரிகையடையும் காபனேற்று எது?
 1) $(NH4)_2CO_3$ 2) $NaCO_3$ 3) $CaCO_3$ 4) $Ag_2CO_3$ 5) $ZnCO_3$

09. பின்வரும் நைத்திரேற்றுக்களில் எது உயர் வெப்பநிலையில் செந்நிறத் திண்மத்தை மீதியாகத் தந்து பிரிகையடையும்?
 1) $NaNO_3$ 2) $NH_4NO_3$ 3) $AgNO_3$ 4) $Ca(NO_3)_2$ 5) $Cr(NO_3)_3$

10. வெப்பமேற்றும்போது எந்த நைத்திரேற்று $O_2$ வாயுவைத் தராது?
 1) $NaNO_2$ 2) $NH_4NO_3$ 3) $AgNO_3$ 4) $Ca(NO_3)_2$ 5) $Cr(NO_3)_3$

11. பின்வருவனவற்றுள் எச்சேர்வை வெப்பப்பிரிகை அடைவதில்லை?
 1) $NaNO_3$ 2) $LiNO_2$ 3) $Ag_2O$ 4) $H_2O_2$ 5) $PbO_2$

12. பின்வருவனவற்றுள் எந்த ஐதரொட்சைட்டு வெப்பப்பிரிகை அடைவதில்லை?
 1) LiOH 2) AgOH 3) $NH_4OH$ 4) NaOH 5) $Ca(OH)_2$

13. பின்வருவனவற்றுள் எந்த மூலகம் சுப்பர் ஒட்சைட்டைத் தோற்றுவிக்கக்கூடியது?
 1) H 2) K 3) Li 4) Mg 5) Be

14. கூட்டம்-II மூலகங்களின் சேர்வைகளில் கூட்டத்தின்வழியே மேலிருந்து கீழாகக் கரைதிறன் அதிகரிக்கும் போக்கைக் கொண்டது எது?
 1) சல்பேற்றுக்கள். 2) சல்பைற்றுக்கள்.
 3) காபனேற்றுக்கள். 4) பொசுபேற்றுக்கள்.
 5) ஐதரொட்சைட்டுக்கள்.

15. சுவாலைப்பரிசோதனைக்கு விடையளிக்காத மூலகம் எது?
 1) Li 2) Ba 3) Sr 4) Ca 5) Mg

16. பின்வருவனவற்றுள் ஐதரசன்கொண்ட எந்தச்சேர்வை வீறான தாழ்த்தும்கருவியாகத் தொழிற்படும்?
 1) NaH 2) $CH_4$ 3) $NH_3$ 4) HF 5) $H_2O$

17. பின்வருவனவற்றுள் எக்குளோரைட்டு நீர்ப்பகுப்பு அடைவதில்லை?
 1) $BCl_3$ 2) $CCl_4$ 3) $NCl_3$ 4) $PCl_3$ 5) $SiCl_4$

18. $Na_2{}^{16}O + C^{18}O_2 \rightarrow X \rightarrow$ விளைவுகள்
 விளைவுகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் காணக்கூடிய பொருத்தமற்ற சேர்வை எது?
 1) $C^{16}O_2$ 2) $C^{16}O^{18}{}_0$ 3) $C^{18}O_2$ 4) $H_2{}^{16}O$ 5) $H_2{}^{18}O$

19. $Ba^{16}O_2 + H_2{}^{18}O \rightarrow$ விளைவுகள்
 விளைவுகளாக வரமுடியாத சேர்வை எது?
 1) $Ba(^{16}OH)_2$ 2) $Ba(^{18}OH)_2$
 3) $Ba(^{16}OH)(^{18}OH)$ 4) $^{16}O_2$ 5) $^{18}O_2$

20. $H_2O$ திரவத்தில் DCl வாயுவைச் செலுத்திப் பெறப்பட்ட கரைசலினுள் Mg திண்மத்தைச் சேர்த்தால் பெறக்கூடிய சிறந்த தொகுதி எது?
 1) $H_2$ மட்டும். 2) $H_2$, $D_2$ மட்டும். 3) $D_2$ மட்டும்.
 4) HD மட்டும். 5) $H_2$, $D_2$, HD ஆகியவை.

21. $Mg_3N_2$ உடன் $NH_3DCl$ தாக்கம்புரியும்போது பெறக்கூடிய பொருட்தொகுதி தொடர்பாகச் சரியானது,
 1) $NH_3$ மட்டும். 2) $NH_3$, $ND_3$ மட்டும்.
 3) $NH_3$, $NHD_2$ மட்டும். 4) $NH_3$, $NH_2D$, $NHD_2$, $ND_3$ என்பவை மட்டும்.
 5) $NH_3$, $NH_2D$, $NHD_2$ மட்டும்.

22. CaHD சேர்வையானது $H_2O$ உடன் தாக்கம்புரியும்போது பெறமுடியாத வாயுவிளைவு எது?/ வாயுவிளைவுகள் எவை?
 1) $D_2$ மட்டும். 2) $H_2$ மட்டும். 3) HD மட்டும்.
 4) $H_2$, HD மட்டும். 5) $H_2$, $D_2$, HD ஆகியவை மட்டும்.

23. 2ஆம் ஆவர்த்தன மூலகங்களில் எதன் குளோரைட்டு அறைவெப்பநிலையில் மஞ்சள்நிறத் திரவமாகக் காணப்படுகிறது?
 1) Li 2) B 3) C 4) N 5) F

24. கிரபைற்று தொடர்பான கூற்றுக்களில் உண்மையற்றது எது?
 1) எல்லா காபன் அணுக்களும் $Sp^2$ ஓபிற்றல் கலப்பிற்கு உட்பட்டவையாகும்.
 2) ஓரிடப்பாடற்ற X இலத்திரன் முகிலைக்கொண்டது?
 3) படைச்சாலக அமைப்புடையது.
 4) படைகளுக்கு இடையில் வந்தர்வாலிசின் கவர்ச்சிவிசை உடையது.
 5) வைரத்திலும் உருகுநிலை குறைந்தது.

**SPECIAL GUIDE FOR 2010 A/L MATHS, SCIENCE STUDENTS**

25. டைமன் தொடர்பான கூற்றுக்களில் தவறானது எது?
 1) எல்லா காபன் அணுக்களும் $Sp^3$ ஓபிற்றல் கலப்புக்கு உட்பட்டவை.
 2) ஒரு காபன் இணைந்துள்ள காபன் அணுக்கள் நான்முகி அமைப்பு உடையன.
 3) ஒளிபுகவிடும் தன்மை உடையது.
 4) குறைந்த ஒளிமுறிவுக் குணகம் உடையது.
 5) $Sp^3$ கலப்பு ஓபிற்றல்கள் நேர்கோட்டில் மேற்பொருந்துவதன் மூலம் C-C பிணைப்பு தோற்றுவிக்கப்படுகின்றது.

26. கூட்டம்-IV குளோரைட்டுக்கள் பற்றிய தரவுகளில் தவறானது எது?
 1) எல்லா நாற்குளோரைட்டுக்களும் அறைவெப்பநிலையில் திரவங்கள் ஆகும்.
 2) எல்லா நாற்குளோரைட்டுக்களும் நீர்ப்பகுப்பு அடையும்.
 3) எல்லா நாற்குளோரைட்டுக்களும் பங்கீட்டுவலுப் பிணைப்பு உடையவை.
 4) $PbCl_2$ பளிங்கு ஊசி வடிவம் உடையது.
 5) $PbCl_2$ பளிங்கு தளவடிவம் உடையது.

27. கூட்டம்-IV ஒட்சைட்டுக்கள் பற்றிய தரவுகளில் தவறானது எது?
 1) $PbO_2$ ஒட்சியேற்றும் வலு கூடியது.
 2) SnO தாழ்த்தும் வலு கூடிய ஒட்சைட்டு.
 3) CO வன்மையான தாழ்த்தும் கருவி.
 4) வெப்பமேற்றும்போது $PbO_2$ இலிருந்து $O_2$ ஐப் பெறுதல் இலகு.
 5) செறி HCl உடன் $SnO_2$ தாக்கம்புரிந்து இலகுவாகக் குளோரினைத் தரும்.

28. பின்வரும் சேர்வைகளில் உறுதிகுறைந்த சேர்வை எது?
 1) $CCl_4$ 2) $SiCl_4$ 3) $GeCl_4$ 4) $SnCl_4$ 5) $PbCl_4$

29. பின்வருவனவற்றுள் எது தாழ்த்தும் கருவி அன்று?
 1) $HNO_3$ 2) NO 3) CO 4) $H_3PO_2$ 5) $SnCl_2$

30. பின்வருவனவற்றுள் எவ் அயன் இலகுவில் வளியில் ஒட்சியேற்றம் அடையக்கூடியது?
 1) $[Cr(H_2O)_6]^{3+}$ 2) $[Cu(NH_3)_4]^{2+}$ 3) $[CO(NH_3)_6]^{2+}$
 4) $[CO(H_2O)_6]^{2+}$ 5) $[Ni(Mi_3)_6]$

31. பின்வருவனவற்றுள் எது நிரம்பிய $CaCl_2$ கரைசலுடன் வீழ்படிவினைத் தரமாட்டாது?
 1) $Pb(NO_3)_{2(aq)}$ 2) $Na_2CO_{3(aq)}$ 3) $NO_2C_2O_{4(aq)}$
 4) $Ca(NO_3)_{2(aq)}$ 5) $C_2H_5OH$

32. $H_2O_2$ பற்றிய கூற்றுக்களுள் பொருத்தமற்ற கூற்று எது?
 1) $H_2O$ இன் கொதிநிலையும் உயர்வு.
 2) கிருமிநாசினியாகத் தொழிற்படக்கூடியது.
 3) வெளிற்றியாகத் தொழிற்படக்கூடியது.
 4) அமிலமாகத் தொழிற்படக்கூடியது.
 5) கார ஊடகத்திலும் பார்க்க அமில ஊடகத்தில் இலகுவாகப் பிரிகையடையும்.

33. $N_2$ உருவாகும் முறையாகக் கொள்ளமுடியாத தாக்கம் எது?
 1) மிகை $NH_3$ இற்குள் $Cl_2(g)$ சேர்த்தல்.
 2) செறி $NaNO_2$ இற்கு செறி $NH_4Cl$ சேர்ந்து வெப்பமேற்றல்.
 3) $(NH_4)_2Cr_2O_7$ இனை வெப்பமேற்றல்.
 4) $NaNH_2$ இற்கு $NH_4Cl$ சேர்த்தல்.
 5) $NH_3$ வாயுவை வெப்பமாக்கப்பட்ட CuO மீது செலுத்துதல்.

34. $NH_3$ வாயு உருவாகும் முறையாகக் கொள்ளமுடியாத தாக்கம் எது?
 1) $NH_4Cl$ உடன் $Mg_3N_2$ இனைச் சேர்த்து வெப்பமேற்றுதல்.
 2) $(NH_4)_2CO_3$ இனை வெப்பமேற்றுதல்.
 3) $NH_4NO_3$ இற்கு NaOH சேர்த்து வெப்பமேற்றுதல்.
 4) $Mg_3N_2$ இற்கு நீர் சேர்த்தல். 5) $NH_4NO_2$ இற்கு HCl சேர்த்தல்.

35. $HNO_3$ பற்றிய கூற்றுக்களில் தவறானது எது?
 1) அமிலமாகத் தொழிற்படக்கூடியது. 2) மூலமாகத் தொழிற்படக்கூடியது.
 3) ஒட்சியேற்றியாகத் தொழிற்படக்கூடியது.
 4) தாழ்த்தும் கருவியாகத் தொழிற்படக்கூடியது.
 5) நீரகற்றும் கருவியாகச் செயற்படுகிறது.

36. பின்வரும் தாக்கங்களுள் கலங்கல்/வீழ்படிவு தோன்றாத தாக்கம் எது?
 1) $SbCl_3$ + நீர் 2) $SnCl_2 + HgCl_2$
 3) $Na_2S_2O_3 + HCl$ 4) $Al_2(SO_4)_3 + NaHCO_3$
 5) $Na_2S_2O_2 + Cl_2$

37. X என்ற உப்புக்கு NaOH சேர்த்து வெப்பமேற்ற மூல இயல்பு உடைய வாயு வெளியேறியது. பெறப்பட்ட தொகுதிக்கு மீண்டும் Al தூள் சேர்த்து வெப்பமேற்ற மீண்டும் அதே வாயு வந்தது. X யாது?
 1) $NH_4NO_3$ 2) $(NH_4)_2SO_4$ 3) $CO(NH_2)_2$
 4) $CH_3CH_2NH_2$ 5) $Zn(NO_3)_2$

38. பின்வரும் சமமூலச் சேர்வைகளைக் குறித்த அளவு நீரில் கரைக்கும்போது கூடிய $H^+$ செறிவினைக் காட்டுவது எது?
 1) $H_4P_2O_7$ 2) $H_4P_2O_6$ 3) $H_4P_2O_5$ 4) $H_3PO_4$ 5) $H_3PO_3$

39. $H_3PO_2$ தொடர்பான தறான கூற்று எது?
 1) ஒருமூல அமிலம்.
 2) இரண்டு P - H பிணைப்புக்களை ஒரு மூலக்கூறு கொண்டிருக்கும்.
 3) தாழ்த்தும் கருவியாகத் தொழிற்படக்கூடியது.
 4) P உடன் இணைந்துள்ள அணுக்கள் நான்முகி அமைப்பில் இருக்கும்.
 5) Phosphorus (I) Acid என அழைக்கப்படும்.

40. $SO_2$, $H_2S$ ஆகிய வாயுக்களை வேறுபடுத்தி அறிவதற்கு பின்வரும் கரைசல்களுள் எதனை வடிதாள் ஒன்றில் தோய்த்துப் பயன்படுத்தலாம்?
 1) NaCl கரைசல். 2) NaOH கரைசல். 3) $H^+/KMnO_{4(aq)}$
 4) $(CH_3COO)_2Pb_{(aq)}$ 5) $H^+/K_2Cr_2O_{7(aq)}$

* 41-50 வரையான வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தரவுகளைப் பின்பற்றுக.

| கூற்றுக்கள் | விடைத்தெரிவு |
|---|---|
| a, b சரியானவை | 1 |
| b, c சரியானவை | 2 |
| c, d சரியானவை | 3 |
| a, d சரியானவை | 4 |
| வேறு சரியான தெரிவு | 5 |

41. ஒரு சரிவுக்கந்தகம், சாய்சதுரக் கந்தகம் தொடர்பான கூற்றுக்களில் சரியானது/சரியானவை,
 a) ஒரே உருகுநிலை உடையவை. b) ஒரே கொதிநிலை உடையவை.
 c) பளிங்கு உருவானவை. d) $Cs_2$ இல் கரையக்கூடியவை.

42. Sn இன் பிறதிருப்பங்கள் தொடர்பான கூற்றுக்களுள் சரியானவை,
 a) a - Tin ஆனது டைமன் வடிவம் உடையது.
 b) B - Tin உலோகப் பிணைப்பை உடையது.
 c) a - Tin, B - Tin போன்றவை ஒரே உருகுநிலை உடையவை.
 d) a - Tin, B - Tin போன்றவை ஒரே கொதிநிலை உடையவை.

43. C இன் பிறதிருப்பங்கள் தொடர்பான கூற்றுக்களில் சரியானவை எவை?
 a) கிரபைற்று டைமனிலும் உருகுநிலை கூடியது.
 b) கிரபைற்று மின்னைக் கடத்தக்கூடியது.
 c) கிரபைற்று ஒளி உட்புகவிடும் தன்மை உடையது.
 d) டைமன் உராய்வுநீக்கியாகப் பயன்படும்.

(15ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் S.தங்கராஜாவின் வழிகாட்டலில் தொகுத்து வழங்குபவர்:
S.T.ஜனார்த்தனன் (ஆசிரியர், கொழும்பு)



**2010 உயர்தர மாணவர்களுக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பெறுமதிமிக்க படைப்பு**

# 'தாயின் பேச்சு' குழந்தையின் அறிவுத் திறனை வளர்க்கும்



தாயின் பேச்சு குழந்தையின் அறிவுத் திறனை வளர்க்கும் என ஆய்வில் தெரியவந்துள்ளது.

பொதுவாகக் குழந்தைகள் விளையாடி மகிழ அழகிய பொம்மைகள், விளையாட்டு சாதனங்கள் மற்றும் வீடியோ கேம்கள் போன்றவற்றை பெற்றோர் வாங்கி கொடுக்கின்றனர். அவை அவர்களின் அறிவாற்றலை வளர்க்கும் என நம்புகின்றனர்.

ஆனால் இவற்றை விட குழந்தைகளிடம் தாய் தொடர்ந்து பேச்சுக் கொடுத்தாலே போதும், குழந்தையின் மூளை வளர்ச்சி அடைந்து அறிவுத்திறனும் வளரும் எனப் புதிய ஆய்வு தெரிவிக்கிறது.

லண்டனிலுள்ள வடமேற்குப் பல்கலைகழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இதுபற்றி ஒரு ஆய்வை மேற்கொண்டனர். அவர்கள் பிறந்த 3 மாதமே ஆன 50 குழந்தைகளிடம் இந்த ஆய்வு நடத்தினார்கள்.

அந்தக் குழந்தைகளிடம் அவர்களின் தாய்மார்களை அடிக்கடிப் பேச்சுக் கொடுக்கும் படி தெரிவித்தனர். மேலும், மீன், மாடு போன்றவற்றின் படங்களைக் காட்டி அவற்றின், பெயர்களைக் கற்றுக் கொடுக்கும்படியும் வலியுறுத்தப்பட்டது.



அவர்கள் கொடுத்த பயிற்சியின் படி 3மாதக் குழந்தைகள் படங்களைப் பார்த்து அவற்றின் பெயர்களை உச்சரிக்கத் தொடங்கினர். மேலும் பல படங்களின் மூலம் அவற்றின் பெயர்களைத் தெரிவித்தனர்.

இந்த ஆய்வின் மூலம் குழந்தைகளிடம் தாய்மார்கள் பேச்சுக் கொடுத்தாலே போதும், குழந்தையின் அறிவுத்திறன் வளரும் என விஞ்ஞானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.★★★★★★★★★★★★★

# எயிட்ஸ் நோயைத் தடுக்கும் வாழைப்பழம்



வாழைப்பழத்தில் உள்ள இரசாயனம் மூலம் எயிட்ஸ் நோய் வராமல் தடுக்கலாம் என அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்,

எயிட்ஸ் நோய்க்கு இதுவரை மருந்து கண்டுபிடிக்கவில்லை. நோய்வரும் முன் தடுப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பாதுகாப்பு உறையைப் பயன்படுத்தினால் எயிட்ஸ் வராமல் தடுக்கலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது அமெரிக்க விஞ்ஞானிகள் இது தொடர்பாக மேற்கொண்ட ஆய்வில் புதிய தகவலைக் கண்டுபிடித்துள்ளனர்.

வாழைப்பழத்திலுள்ள இரசாயனம் மூலம் எயிட்ஸ் வராமல் தடுக்கலாம் என்பது தான் அது. வாஷிங்டன் நகரில் உள்ள மிச்சிகன் பல்கலைகழக விஞ்ஞானிகள் இந்த ஆய்வில் ஈடுபட்டனர். பொதுவாகத் தாவரங்களில் இருக்கும் இரசாயனம், நோய் தொற்றுக்களை எதிர்த்துப் போராடும் தன்மை கொண்டவை.

வாழைப்பழத்தில் இருக்கும் லேக்டின் என்ற இரசாயனம் எயிட்ஸ் வராமல் தடுக்கிறது என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இதை உறுதிப்படுத்தும் ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.★★

# ஆஸ்துமா நோயை நாவல் பழம் கட்டுப்படுத்தும்



ஒவ்வாமை காரணமாக ஏற்படும் ஆஸ்துமா பிரச்சினையை நாவல் கட்டுப்படுத்தும் என்று நியூசிலாந்து ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

நியூசிலாந்தைச் சேர்ந்த தாவரம் மற்றும் உணவு ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியர் ரோஜனர் ஹர்ட்ஸ். அவர் தலைமையில் நடந்த ஆராய்ச்சியின் முடிவுகள் மாலிக்யூலார் நியூட்ரிஷன் அண்ட் புட் ரிசர்ச் என்ற அறிவியல் பத்திரிக்கையில் வெளியாகியுள்ளது. நாவல் பழத்தில் இடம்பெற்றுள்ள எபிகாலோகாடெசின் என்ற வேதிப்பொருள், நுரையீரலில் ஏற்படும் எரிச்சலைக் கட்டுப்படுத்தும் என்று அதில் கூறப்பட்டுள்ளது. ஒவ்வாமையால் ஏற்படும் ஆஸ்துமாவுக்கு நுரையீரலில் ஏற்படும் எரிச்சல் முக்கிய காரணம். அதை நாவற்பழம் கட்டுப்படுத்தும் என்பதால் ஒவ்வாமை நோயாளிகளைத் தவிக்க வைக்கும் ஆஸ்துமா கட்டுப்படும்.

மேலும் நுரையீரல் எரிச்சலைக் குறைக்கும் ஆன்தோசைனின்ஸ் என்ற பொருளும் நாவற்பழத்தில் அதிகளவில் உள்ளது. அதுவும் ஆஸ்துமா நோயாளிக்கு மிகவும் பயனளிக்கும் என்று தி டெலிகிராப் பத்திரிக்கையின் இணைய தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடலில் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க உதவும் ஆன்ட்டிஆக்சிடன்ட் மூலம் பழுத்த நாவல் பழம் உடலின் இயற்கையான எதிர்ப்புச் சக்தியைத் தூண்டுவதில் சிறந்து விளங்குவதாக ரோஜர் ஹர்ட்ஸ் தலைமையிலான ஆராய்ச்சிக்குழு தெரிவித்துள்ளது. எனவே, நாவற்பழத்தை அடிக்கடி சாப்பிடுவதன் மூலம் ஆஸ்துமா நோயாளிகளின் உடலில் நோய் எதிர்ப்பு செயற்பாடு அதிகரிப்பதுடன் நுரையீரல் எரிச்சலை நீண்டகால அடிப்படையில் குறைக்க முடியும் என்று ஆராய்ச்சியில் கூறப்பட்டுள்ளது.★★★




# நவீன செல்போன்: இனி மெளன மொழியில் பேசலாம்

பொது இடங்களில் செல்போனில் பேசுபவர்களில் சிலர் உரக்க பேசி ஊரைக் கூட்டி விடுவார்கள்.அவர்களின் அந்தரங்க தகவல்களை பிறர் கேட்டுக் கொண்டு இருக்கிறார்களே என்ற கவலையின்றி சத்தம் போட்டு பேசுவார்கள்.

இப்போது இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண புதிய தொழில்நுட்பத்தை ஜேர்மனியில் உள்ள காரல் ஸ்ருகி தொழில்நுட்ப நிலையம் கண்டுபிடித்துள்ளது. இதன்படி உங்கள் உதடு அசைவை வைத்தே நீங்கள் என்ன பேசப்போகிறீர்கள் என்பதைக் கண்டுபிடித்து எதிர்முனைக்கு உங்கள் குரலில் தெரிவிக்கும் மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. எலக்ட்ரோ மையோகிராபி எனப்படும் தொழில்நுட்பம்மூலம் இது இயங்குகிறது.

முகத்தில் உதடு மற்றும் தாடைப் பகுதியில் பொருத்தப்படும் சென்சார் கருவிகள் உதடு மற்றும் முக அசைவை வார்த்தையாக மொழிமாற்றம் செய்கிறது. இந்தப் பணியை செய்யச் சிறப்பு மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. பின்னர் இந்த வார்த்தைகள் தொலைபேசி இணைப்பு வழியாக எதிர் முனையில் உள்ளவர்களுக்கு அனுப்பப்படுகிறது. இது தவிர ஸ்பீக்கர் மூலமும் இந்தப் பேச்சைக் கேட்கலாம். இந்த நவீன கண்டுபிடிப்பின் மூலம் வாய்பேச இயலாதவர்கள் மற்றும் பக்கவாத நோய்த் தாக்கத்தால் பேச முடியாதவர்கள் பலன்பெறலாம். இவர்களின் உதட்டு அசைவின் மூலம் இவர்கள் என்ன பேசுகின்றார்கள் என்பதை மற்றவர்கள் புரிந்து கொள்ளமுடியும்.★★






# அன்பான

## விவசாயிகளே,

CONCEPT STUDIO 2433

**நீங்களும் நாடும் வளமடைய**
**மாற்றுவோம் ஆட்சியை!**

உங்கள் விளைச்சலுக்கு அதிக விலையை வழங்கும்*

**ஐக்கிய தேசிய முன்னணியை**


X

**ஆட்சியில் ஏற்றுவோம்.**

*எமது கொள்கைப் பிரகடனத்தை வாசிக்கவும் அல்லது www.unfmanifesto.com ஐப் பார்வையிடவும்.




# புத்திசாலிகள் ஏமாறுவதில்லை...!



இங்கிலாந்துப் பல்கலைக்கழகம் மனிதர்களின் மூளைத்திறன் (நுண்ணறி வுத்திறன்) குறித்த ஆய்வில் ஈடுபட்டது. அப்போது பழக்க வழக்கங் களுக்கும், நுண்ணறிவுத் திறனுக்கும் உள்ள தொடர்பை சோதித்தபோது புத்திசாலிகள் ஏமாற்றுவதை விரும்புவதில்லை என்று தெரியவந்தது.

ஆயிரக்கணக்கான இளவயது மற்றும் வயது முதிர்ந்தவர்கள் ஆய்வின்போது அனுபவ அடிப்படையில் சோதிக்கப்பட் டனர். அப்போது புத்திசாலிகள் (அதிகமான நுண்ணறிவுத் திறன் பெற்றிருந்தவர்கள்) பிறரை ஏமாற்றும் எண்ணம் இல்லாதவர்களாக இருந்தனர். அவர்கள் திறந்த மனதுடன் எண்ணங்களை வெளிப் படுத்துபவர்களாகவும், மற்றவர்களில் இருந்து விதிவிலக்காக அவசியமற்றவற்றை ஒதுக்குபவர்களாகவும் இருந்தனர். பாலியல் ரீதியிலும் விதிவிலக்காகவே உள்ளனர். இந்த விடயங்களில் புத்திக்கூர்மையுள்ள பெண்களுக்கு சம்பந்தமில்லை. அவர்களிடம் இருந்து சாதகமான எந்த தடயங்களும் கிடைக்கவில்லை.

புத்திக்கூர்மை உடையவர்களின் எண்ணங்கள் பரிணாம வளர்ச்சி பெற்று புதுமையான சிந்தனை உடையவர்களாக இருந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் திறந்த மனப்பான்மை உடையவர்கள் மற்றும் நாத்திகவாதிகளாக இருந்தது குறிப்பிடத்தக்கது. ★★★★★

யாழ்ப்பாணத்தில் முகவர் தேவை

தேசிய உரத்திணைக்களத்தினால் அனுமதி பெற்று ஸ்ரீலங் உரக்கம்பனியினால் இறக்குமதி செய்யப்பட்ட UREA, MOP, T.S.P. மற்றும் கலவை உரவகைகளை யாழ்ப்பாணம், வவுனியா, வன்னிப் பிரதேசங்களில் விற்பனை செய்வதற்கு முகவர்கள் தேவை.

தொடர்புகளுக்கு
Kumar : 0755 123472
Mrs. V. Pushpa : 011 - 2981908
No. 125, Nagalagam Street,
Colombo 14.

SRILAK FERTILIZERS (PVT) LTD.




இலங்கை வங்கியில் கணக்கு வைத்திருப்போருக்கு விசேட விலைக் கழிவு. மேலதிக விபரங்கள் அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில். சேர்ட் பெக்கிங் உள்ளே இருக்கும் இரகசிய இலக்கத்தை 0773402446 க்கு SMS செய்து பெறுமதியான சேர்ட்டை வெல்லுங்கள்.

நல்ல நல்ல கடைகளில் கிடைக்கும்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



புத்துணர்ச்சியுடன் செயற்படும் நாள். மலைபோல நினைத்த பிரச்சினை ஒன்று சுமூகமாக முடிவுக்கு வரும். வெளியுலகத் தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்வீர்கள். உங்களுக்குத் தெரியாத விடயம் ஒன்றை அனுபவம் வாய்ந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வீர்கள். கைமாத்தாக கொடுத்த பணம் ஒன்று திரும்ப வரும்.

### இடபம்



தண்டச் செலவுகளை எதிர்கொள்ளலாம். பிள்ளைகளின் செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் அடையலாம். தொழில் ரீதியாக சிலர் சொல்வதை நிறைவேற்ற முடியாமல் அவர்களின் கோபத்திற்கு ஆளாகலாம். கனவுத் தொல்லையுண்டு. வெளியில் செல்லும் போது சில பொருள்களை எடுத்துச் செல்ல மறப்பதால் அவதிப்படலாம்.

### மிதுனம்



குடும்பத்திற்கு தேவையான பொருள்களை வாங்கலாம். சக ஊழியர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். நீங்கள் செய்த வேலை ஒன்றை மற்றவர்கள் தாங்கள் செய்ததாகக் காட்டிக் கொள்ளலாம். பொலிஸ் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம் ஆதாயமில்லாத அலைச்சல் உண்டு.

### கடகம்



பழைய அனுபவங்களை புதிய திட்டங்களில் செயற்படுத்தி ஆதாயம் பார்ப்பீர்கள். மற்றவர்கள் பெரிதாக நினைக்கும் வேலை ஒன்றை நீங்கள் எளிதாக செய்து முடிப்பீர்கள். பெண்கள் வழியில் சிறு உதவிகள் கிடைக்கலாம். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். கொடுக்கல் வாங்கல்கள் சீராகும்.

### சிங்கம்



அவசரப்பட்டு சில வேலைகளைச் செய்து கையைச் சுட்டுக் கொள்ளலாம். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறுவது தள்ளிப் போகலாம். உறவினர்கள் சிலரின் வீடுகளுக்கு ஏதாவது ஒரு வேலையாக செல்லும் சூழ்நிலை உருவாகலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும்.

### கன்னி



எதிர்பாராமல் சில பொருள்கள் அல்லது உதவிகள் கிடைக்கலாம். வியாபாரிகள் கடன் மிகுதிகள் வசூலாவதன் மூலம் திருப்தி காண்பர். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள். பொறுப்பில்லாமல் செயற்படும் பிள்ளைகளுக்கு, குடும்ப உறுப்பனர்களுக்கு அறிவுரை சொல்வீர்கள். நல்ல காரியம் நடக்கும் நாள்.

### துலாம்



பல நாள்களாக நிறுத்தி வைத்த வேலைகளை அவசரமாக முடிக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை உருவாகும். அயலாரிடம் அனுசரித்துச் செல்லவும். பற்றுதல், ஆர்வம் இல்லாமல் சில விடயங்களில் ஈடுபடலாம். நேரத்திற்கு எதையும் செய்ய முடியாமல் சாக்குப் போக்கு சொல்லி சமாளிக்கலாம். செலவுகள் கூடும் நாள்.

### விருச்சிகம்



தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். நீங்கள் எதிர்பார்த்த ஒருவர் சரியான நேரத்தில் கை கொடுத்து உதவலாம். பிள்ளைகளின் கல்வி விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். சிலர் மீது கோபம் கொண்டாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்வீர்கள். நட்பு வட்டம் விரிவடையும்.

### தனுசு



நீண்ட நாள் கனவுகள் நனவாகும். கடந்த காலத்தில் உங்களை காலைவாரி விட்ட சிலர் இப்போது கை கொடுத்து உதவலாம். கடனாக கொடுத்த பணம் திரும்ப வரும். இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். வீடு, இடமாற்றம் தொடர்பான விவகாரங்களில் முன்னேற்றங்களைச் சந்திக்கலாம்.

### மகரம்



தொடங்கிய சில வேலைகளை முடிக்க முடியாமல் இடையூறுகளைச் சந்திக்கலாம். ஏதோ ஒரு வகையில் விமர்சனத்தையும், மற்றொரு வகையில் பாராட்டுக்களையும் சந்திக்கலாம். உடல் ரீதியான உபாதைகளை தவிர்க்க கண்ட இடங்களில் சாப்பிட வேண்டாம். எதிர்ப்புகள், போட்டிகளால் சிறு மனசங்கடங்களுக்கு ஆள்படலாம்.

### கும்பம்



பெரிய மனிதர்கள் சிலரால் உங்களின் முயற்சிகளில் தடை ஏற்படலாம். பஸ் பயணங்களுக்காக நீண்ட நேரம் காத்திருக்க நேரிடலாம். திட்டமிட்ட காரியம் ஒன்றில் மாற்றம் செய்யலாம். கணவன் மனைவி இடையே வாக்குவாதங்கள் ஏற்படலாம். நோய் உபாதைகளால் உற்சாகம் தெம்பு குறையலாம்.

### மீனம்



சோர்வு, சோம்பல் நீங்கி புத்துணர்ச்சியுடன் செயற்படுவீர்கள். நண்பர்கள் சிலர் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். அடமானமாக வைத்த பொருள் ஒன்றை மீட்கலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரை, மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டியது அவசியம்.


**பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010 யாழ் மாவட்டம்**

உங்களோடு ஒருவராய், உங்களோடு உடனிருந்து.
உங்களுக்கு உதவிட ....

**அப்பாத்துரை விநாயகமூர்த்தி** LL.B
(சிரேஷ்ட சட்டத்தரணி,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)






தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு
(இலங்கை தமிழரசுக்கட்சி)


## தேர்தல் பிரசாரத்தை இலக்குவைத்து எவ்.எம். வானொலிச் சேவைகள் ஆரம்பம்

### கபே அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 31

தேர்தல் பிரசாரத்தை இலக்கு வைத்து எவ்.எம். வானொலி அலைவரிசைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என கபே தேர்தல் கண்காணிப்புக் குழு குற்றம் சுமத்தியுள்ளது.


இது தேர்தல் சட்டங்களை பாரியளவில் மீறும் ஓர் செயற்பாடகுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.சில வேட்பாளர்கள் தங்களது பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் தன்னிச்சையாக வானொலி அலைவரிசைகளை ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைத் தொலைதொடர்பு ஆணையகத்தின் அனுமதியின்றியே இந்த வானொலி அலைவரிசைகள் இயங்கி வருகின்றன எனக் குறிப்பிடப்படுகிறது.கல்குடா, பட்டிருப்பு மற்றும் மட்டக்களப்பு ஆகிய நகரங்களை உள்ளடக்கும் வகையில் ஒலிபரப்புச் சேவைகள் நடைபெற்று வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## இதய மாற்றத்திற்காக ஜெபிப்போம்

இவ்வாரம் ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் புனித வாரமாக அமைகின்றது. இந்தக் காலத்தில் நாம் ஒவ்வொருவரும் இதயமாற்றம் பெற்றவர்களாக வாழவேண்டும் என்பதைப் பற்றித் தியானிக்கவேண்டும்.

ஒருவர் பேருந்தில் நீண்ட பயணம் செய்யவேண்டும். அவர் பேருந்து நிலையத்துக்குச் செல்ல சற்று தாமதமானது. அதனால் இருக்கைகள் அனைத்தும் நிரம்பிவிட்டன. இனி நின்றுகொண்டுதான் பேருந்தில் பயணிக்க முடியும். என்ன செய்வதென்று சிந்தித்துக்கொண்டிருந்தபோது ஒரு முதியவர் சற்று ஒதுங்கி அவரை தமக்கு அருகில் அமருமாறு கூறினார். ஆனால் முதியவருக்கு அருகில் அமர்ந்திருந்தவர் அவரை அதில் அமர்வதற்கு அனுமதிக்கவில்லை. மாறாக அவரை இருப்பதற்கு இடமளிக்கமுற்பட்ட அந்த முதியவரைச் சத்தமிட்டு தரக்குறைவாகப் பேசினார். பேருந்தில் இருந்த பயணிகள் அனைவரும் என்ன ஆயிற்று என்று பார்த்தனர். அப்பொழுது அந்த முதியவர் 'இதயத்தில் இடமிருந்தால் போதும் இருக்கையில் தானாக இடம்வரும்' என்று அமைதியாகக் கூறினார். எவ்வளவு அர்த்தமுள்ள வார்த்தை. இதயத்தில் இடம் இருக்குமானால் எண்ணங்கள் மாறும். பார்வையும் கண்ணோட்டமும் மாறும். அன்பு தானாகவே தோன்றும். அனைத்தையும் ஏற்றுக்கொள்ள இயலும்.




அன்று இயேசு தமது கடைசி இராவுணவின்போது தம்மைக் காட்டிக் கொடுக்கப்போகும் யூதாசின் ஆன்ம அழிவை எண்ணி மனம் வருந்தியதும் (யோவா 13:21-25) தம்மை கைது செய்ய வந்த காவல்வீரனை நலமடைய வைத்ததும் (லூக் 22:52) சமூகத்தால் புறக்கணிக்கப் பட்ட பாவிகள், வரி தண்டுபவர்கள் இயேசுவிடம் சென்றதற்குக் காரணமாக இருந்ததும் அவரது திரு இருதயம் அனைவரையும் பரிபூரணமாக ஏற்றுக்கொள்ளுகின்ற, மன்னிக்கின்ற, அன்பு செய்கின்ற இதயமாக இருப்பதனால்தான்.

நம்மிடம் எவ்வளவு குற்றம், குறைகள் இருந்தாலும் நமக்கு இயேசுவின் இதயத்தில் இடமுண்டு என்பதை எண்ணும்போது எவ்வளவு ஆறுதலாக உள்ளது. ஆகவே நமது உள்ளத்தையும் இயேசுவின் இதயத்தைப் போலாக்கவேண்டும். நன்மை செய்பவர்களையும் செல்வாக்கு உடையவர்களையும் மட்டுமன்றி ஏழை எழியோரையும் தீங்கிழைப்போரையும் நம் இதயத்தில் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஒருவருக்கு நம் இதயத்தில் இடமில்லை என்றால் அவரை நாம் வெறுக்கின்றோம் என்றுதான் அர்த்தம் . ஊதாரியின் மகன் உவமையில் அவனுடைய மூத்த சகோதரன் மனநிலை யும் அதுதான் (லூக்15:25:-32).

நான் உங்களுக்குப் புதிய இதயத்தை அருள்வேன். புதிய ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன். உங்கள் உடலிலிருந்து கல்லான இயத்தை எடுத்துவிட்டு சதையாலான இதயத்தைப் பொருத்துவேன் (எசா 36:20)என்று கூறுகின்றார். ஆண்டவர் அன்று கிறிஸ்தவர்களை அழிப்பதற்காக தமஸ்கு நகரை நோக்கிப் பயணித்த சவுலைத் சந்தித்த ஆண்டவர் 'சவுலே! சவுலே!!' ஏன் என்னைத் துன்புறுத்துகின்றாய் (திப 9:4) என்று கூறி அவனது கல்லா லான இதயத்தை எடுத்துவிட்டு சதையாலான புதிய இயத்தைப் பொருத்தி தமது பணிக்காக அனுப்பி வைக்கின்றார். இன்று நாமும் கல்லாலான இயத்கை தாங்கியவர்களாக வாழ்ந்து வருகின்றோம். அத்தகைய எமது இதயத்தை மாற்றி சதையாலான அன்பை உணர்ந்து கொள்கின்ற ஒரு புதிய இதயத்தை தரும்படி இயேசுவிடம் ஜெபிப்போமாக.

க.அருள்நேசன், குருநகர்.


**31ஆம் நாள் நினைவஞ்சலி**



**திருமதி இரத்தினசிங்கம் கனகாம்பிகை**

அன்னையின் மடியில்: 12.03.1932 ஆண்டவன் அவணைப்பில்: 01.03.2010

மாதமொன்று போனதம்மா!
ஆறவில்லை எம் துயரம்
அவனியில் உன் அரவணைப்பின்றி
அல்லற்படுகின்றோம் அறியாயோ -நீ,
ஆண்டவன் பாதம் சேர்ந்த- உன்
ஆத்மா சாந்தி பெறத் தினம் தினம்
வேண்டுகின்றோம் சுதுமலை
புவனேஸ்வரி அம்பாளை.....

மலைவேம்படி லேன்,
சுதுமலை கிழக்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

(95776)

# அசேதன இரசாயனவியல் : தொடர்ச்சி....

44. பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?/சரியானவை எவை?
   a) $NF_3$ நீர்ப்பகுப்பு அடைந்து $NH_3$ ஐயும், HF ஐயும் தரும்.
   b) $PCl_3$ நீர்ப்பகுப்பு அடைந்து $PH_3$ ஐயும், HOCl ஐயும் தரும்.
   c) $BCl_3$ நீர்ப்பகுப்பு அடைந்து $H_3BO_3$ ஐயும், HCl ஐயும் தரும்.
   d) $PCl_5$ முற்றாக நீர்ப்பகுப்பு அடைந்து $H_3PO_4$ ஐயும், HCl ஐயும் தருக.

45. நீர்க்கரைசல்களில் மிகவும் உறுதி குறைந்த சேர்வைகள் எவை?
   a) AgOH b) $Mn(OH)_2$ c) $Fe(OH)_2$ d) $Ni(OH)_2$

46. வளியில் நிறமாற்றத்தைக் காட்டும் கரைசல்கள் எவை?
   a) $[Ag(NH_3)_2]^+$ b) $[Cu(NH_3)_2]^+$
   c) $[CO(NH_3)_6]^{2+}$ d) $[Ni(NH)_6]^{2+}$

47. நீர் சேர்க்கும்போது வீழ்படிவைத் தரும் கரைசல்கள் எவை?
   a) $BiCl_3$ நீர்க்கரைசல். b) $SbCl_3$ நீர்க்கரைசல்.
   c) அமில CdS நீர்க்கரைசல். d) அமில $PbSO_4$ நீர்க்கரைசல்.

48. நீரில் கரையாத $NH_4OH$ கரைசலில் கரையக்கூடிய ஒட்சைட்டுக்கள் எவை?
   a) $Ag_2O$ b) CuO c) ZnO d) MgO

49. ஊதாநிறச் சிக்கலயனை உடையவை எவை?
   a) $[CoCl(NH_3)_5]^{2+}$ b) $[CoCl_2(NH_3)_4]+$
   c) $[Cr(H_2O_6]^{3+}$ d) $[Mn(H_2O)_6]^{2+}$

50. KI நீர்க்கரைசலுடன் தாக்கத்தில் ஈடுபடும் நீர்க்கரைசல்கள் எவை?
   a) $Na_2S_2O_{3(aq)}$ b) $I_{2(aq)}$
   c) $CuSO_{4(aq)}$ d) $FeCl_{3(aq)}$

* 51-60 வரையான வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் அறிவுறுத்தல்களைப் பயன்படுத்துக.

| | கூற்று - 1 | கூற்று - 11 |
|---|---|---|
| 1) | உண்மை | உண்மை, கூற்று-1 இற்கான விளக்கம். |
| 2) | உண்மை | உண்மை, கூற்று-1 இற்கான விளக்கம் அல்ல. |
| 3) | உண்மை | பொய். |
| 4) | பொய். | உண்மை. |
| 5) | பொய். | பொய். |

| | கூற்று - 1 | கூற்று - 11 |
|---|---|---|
| 51. | $NF_3$ நீர்ப்பகுப்பு அடைவதில்லை. | F - மிக மின்னெதிரான மூலகம் ஆகும். |
| 52. | $CF_4$ நீர்ப்பகுப்பு அடைவதில்லை. | F - மிக மின்னெதிரான மூலகம் ஆகும். |
| 53. | $NCl_3$ நீர்ப்பகுப்பு அடையாது. | $NCl_3$ இலுள்ள N அணுவில் வெற்று ஓபிற்றல் இல்லை. |
| 54. | $BCl_3$ நீர்ப்பு அடையும். | வெற்று P ஓபிற்றல் உண்டு. |
| 55. | $N_2$ ஒட்சியேற்றியாகத் தொழிற்படாது. | $N_2$ மும்மைப் பிணைப்பை உடையது. பிணைப்பை உடைக்க அதிக சக்தி தேவை. |
| 56. | $Na_2ZnO_2$ ஐயும், $Na_2PbO_2$ ஐயும் இனங்காண $A_2SO_4$ ஐப் பயன்படுத்த முடியாது. | இரண்டுக்கும் $H_2SO_4$ சேர்த்து வெண்ணிற வீழ்படிவைப் பெறலாம். |
| 57. | AgCl இற்கும், AgBr இற்கும் இடையே வேறுபடுத்தி இனங்காண சூடான செறிந்த $NaSO_4$ ஐப் பயன்படுத்த முடியாது. | $SO_4^{2-}$ செறிவான நீர்க்கரைசலில் $Ag_2SO_4$ வீழ்படிவாகும். |
| 58. | குறித்த கனவளவு $SO_2$ நீர்க்கரைசலினுள் தாக்கம்புரியத் தேவையான அளவு $NO_2$ வாயுவையும், $Cl_2$ வாயுவையும் தனித்தனியாகச் செலுத்திப் பெறப்படும் கரைசலில் $H_3O^+$ செறிவு சமனாகும். | $SO_2$ நீர்க்கரைசலுடன் $NO_2$, $Cl_2$ வாயுக்கள் தனித் தனியாகத் தாக்கம்புரியக்கூடியவை. |
| 59. | சமமூல் $Fe_3O_4$ இனையும், FeO ஐயும் முற்றாக ஒட்சியேற்றத் தேவையான $O_2$ இன் அளவு FeO இற்குக் கூடுதலாகத் தேவையாகும். | $Fe_3O_4$, FeO இல், Fe:O மூல்விகிதம் முறையே 3:4 ஆகவும், 1:1 ஆகவும் காணப்படுகிறது. |
| 60. | செறி $H_2SO_4$ இற்கு தூய $H_2C_2O_4$ ஐச் சேர்க்க CO, $CO_2$ வாயுக்கள் வெளியேறும். | $H_2SO_4$ ஒட்சியேற்றும் கருவியாகத் தொழிற்படக்கூடியது. |

61. வெப்பமாக்கும்போது இலகுவில் பிரிகை அடைய முடியாது.
   1) $SnO_2$ 2) $PbO_2$ 3) $Ba(NO_3)_2$ 4) $BaCO_3$ 5) $MgCO_3$

62. பின்வருவனவற்றுள் எது கூடிய முனைந்த தன்மை உடையது,
   1) $B_2O_3$ 2) BeO 3) $Li_2O$ 4) $P_2O_3$ 5) NO

63. LiHஇற்கும் $D_2O$இற்கும் இடையே உள்ள தாக்கத்திலிருந்து கிடைப்பதில்லை,
   1) $H_2$ உம் LiOD உம். 2) $H_2$ உம் HD உம்.
   3) LiOH உம் $H_2$ உம். 4) LiOD உம் $D_2$ உம்.
   5) LiOD உம் HD உம்.

64. S - தொகுப்பு மூலகங்களின் காபனேற்றுகளின் பிரிகை அடையக்கூடியன/ கூடியது,
   a- $MgCO_3$ b- $K_2CO_3$ c- $Li_2CO_3$ d- $MnCO_3$
   1) a, b 2) a,c 3) c, d 4) a, d 5) b, c

65. பின்வரும் நைத்திரேற்றுக்களில் வெப்பப் பிரிகையின்போது ஒட்சிசனை ஒரு விளைபொருளாகத் தரமாட்டாதது எது?
   1) $KNO_3$ 2) $AgNO_3$ 3) $NH_4NO_3$ 4) $Pb(NO_3)_2$ 5) $Mg(NO_3)_2$

66. சோடியம் +2 ஒட்சியேற்ற நிலையை காட்டுவதில்லை,
   1) இழிவான முதலாவது அயனாக்கற் சக்தி உண்டு.
   2) உயர்வான இரண்டாவது அயனாக்கற் சக்தி உண்டு.
   3) உயர்வான் இலத்திரன் நாட்டம் உண்டு.
   4) உயர்வான கருவேற்றம் உண்டு. 5) உயர்வான அணு ஆரை உண்டு.

67. Mg, Ca, Sr, Ba உப்புக்களைப்பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எது உண்மை அற்றது,
   1) உலோகத்தின் அணுவெண் கூட நீரில் குரோமேற்றுக்களின் கரைதிறன் அதிகரிக்கின்றது.
   2) உலோகத்தின் அணுவெண் கூடும்போது நீரில் சல்பேற்றின் கரைதிறன் குறைகின்றது.
   3) உலோகத்தின் அணுவெண் கூட நீரில் ஐதரொக்சைட்டுக்களின் கரைதிறன் அதிகரிக்கிறது.
   4) உலோகத்தின் அணுவெண் காபனேற்றுக்களின் வெப்ப உறுதி அதிகரிக்கின்றது.
   5) உலோகத்தின் அணுவெண் கூட Ca, Sr, Baஇன் ஒட்சபேற்றுக்களின் கரைதிறன் அதிகரிக்கின்றது.

68. பின்வருவனவற்றில் எது நீர் $BaCl_2$ உடன் வீழ்படிவு விளைத் தரும்,
   1) நீர் $NH_3$ 2) நீரில் கரைந்த $CO_2$
   3) நீர் $(NH_4)_2CrO_4$ 4) புரோமின் நீர்.
   5) மேலுள்ளவற்றில் எதுவும் வீழ்படிவைத் தரமாட்டாது.

69. பின்வரும் எது மக்னீசியத்தின் முதலாகும்?
   1) மக்னற்றைற்று. 2) அப்றைற்று. 3) தொலமைற்று.
   4) இல்மனைற்று. 5) உருத்தைல்.

70. Mg, Ca, Sr, Ba ஆகிய மூலகங்களைப் பொறுத்த வரையில் எது/ எவை உண்மை,
   a- மின்னோர்த்தன்மை அணுவெண் அதிகரிப்புடன்.
   b- அயனாரை அணுவெண் அதிகரிப்புடன் அதிகரிக்கின்றது.
   c- மூலத்தன்மை சார் அணுத்திணிவின் அதிகரிப்புடன் அதிகரிக்கின்றது.
   d- நீரில் சல்பேற்றுக்களின் கரைதிறன் அணுவெண் அதிகரிப்புடன் அதிகரிக்கின்றது.
   1) a, b 2) a, c 3) c, d 4) b, d 5) b, c

-நிறைவுற்றது-

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை - ஓகஸ்ட், 2010.
General Certificate of Education (Advance Level) Model Examination - August, 2010.

# பௌதிகவியல்: புலங்கள்

கடந்தவார (24.03.2010) தொடர்ச்சி...

21. 50cm ஆரையுடைய உலோகத்திண்மக் கோளமானது $25 \times 10^{10}C$ ஏற்றத்தைக் கொண்டுள்ளது. மையத்திலிருந்து 20cm தூரத்திலுள்ள புள்ளியில் மின்னழுத்தமானது,
   1) 15V 2) 25V 3) 35V 4) 45V

22. தெளிவான காலநிலை உள்ள ஒரு நாளில் மின்புலச் செறிவானது நிலைக்குத்தாக கீழ்நோக்கி $120Vm^{-1}$ ஆகும். 1.6m உயரமான மனிதனின் தலைக்கும் காலிற்கும் இடையிலான அழுத்த வித்தியாசம்,
   1) 160V 2) 120V 3) 140V 4) 192V


23. இரு உலோகத்தட்டுகளானது 400V அழுத்தத்தின் கீழ் 1cm தூரத்தில் வைக்கப்பட்டுள்ளன. $1.96 \times 10^{-15}kg$ திணிவுடைய ஏற்றப்பட்ட துணிக்கை ஆனது சமநிலையில் உள்ளது எனின், இரு தட்டுகளுக்குமிடைப்பட்ட மின்புலச் செறிவானது,
   1) $400Vm^{-1}$ 2) $4000Vm^{-1}$ 3) $40,000Vm^{-1}$ 4) $40Vm^{-1}$

24. மேற்கூறிய வினாவில் துணிக்கையின் ஏற்றம்,
   1) $4.8 \times 10^{-19}C$ 2) $2.4 \times 10^{-19}C$
   3) $7.2 \times 10^{-19}C$ 4) $9.6 \times 10^{-19}C$

25. 0.2m இடைத்தூரத்திலுள்ள புள்ளி A இலிருந்து புள்ளி B இற்கு 20C ஏற்றத்தை அசைக்க செய்யப்பட்ட வேலை 2J எனின், ABஇற்கிடையிலான அழுத்த வித்தியாசம்,
   1) $2 \times 10^{-2}V$ 2) $4 \times 10^{-1}V$
   3) $1 \times 10^{-1}V$ 4) 8V

26. V மின்னழுத்தத்திற்கு மின்னேற்றப்பட்ட N எண்ணிக்கையான சர்வசமனான கோளத்துளிகள் ஒன்றுசேர்ந்து பெரிய துளியொன்றாக மாறுகின்றன. பெரிய துளியின் மின்னழுத்தம்,
   1) V 2) V.N 3) V/N 4) $V.N^{2/3}$

27. புள்ளி C இலிருந்து மூலைவிட்டம் வழியே x தூரத்தில் உள்ள புள்ளி Pஇல் மின் புலச்செறிவானது,




   1) $qd / \sqrt{2}\pi\varepsilon o (d^2 + x^2)^{3/2}$
   2) $2qd / \pi\varepsilon o (d^2 + x^2)^2$
   3) $qd / \sqrt{4}\pi\varepsilon o (x^2 + d^2)^2$
   4) $4qd / 2\pi\varepsilon o (x^2 + d^2)^{1/2}$

28. 0.5m ஆரையுடைய அரைவட்ட வளையமானது $1.4 \times 10^{-19}C$இற்கு ஏற்றப்பட்டு உள்ளது. வளையத்தின் மையத்தில் மின்புல செறிவானது,
   1) $100Vm^{-1}$ 2) $320Vm^{-1}$ 3) $64Vm^{-1}$ 4) $32Vm^{-1}$


29. 2a நீளமுடைய மெல்லிய சீரான கோலில் ஏற்றம் Q ஆனது சீராகப் பரம்பியுள்ளது. கோலின் மையத்திலிருந்து r தூரத்திலுள்ள புள்ளியில் மின்புலச்செறிவின் பருமன்,
   1) $Q/ 4\pi\varepsilon o (r^2 - a^2)2$ 2) $Q/ 2\pi\varepsilon o (r^2 - a^2)^2$
   3) $Q/4\pi\varepsilon o (r^2 - a^2)$ 4) $2Q/ \pi\varepsilon o (r^2 - a^2)$

30. 0003g திணிவுடைய ஏற்றப்பட்ட துணிக்கை ஆனது நிலைக்குத்தாக கீழ்நோக்கி $48 \times 10^4 Nc^{-1}$ பருமனுடைய மின்புலச் செறிவு உடைய பிரதேசத்தில் சமநிலையில் உள்ளது. துணிக்கையின் ஏற்றமானது µC இல்,
   1) $-6.13 \times 10^{-5}$ 2) $-3.6 \times 10^{-5}$
   3) $-12.26 \times 10^{-4}$ 4) $-6.13 \times 10^{-4}$

31. q பருமனும் மறையேற்றமுடையதுமான ஏற்றமொன்று y அச்சின் வழியே y = a ஆகவுள்ள புள்ளியிலும், q பருமனும் ஆனால் நேரேற்றமுடையதுமான ஏற்றமொன்று y அச்சின் வழியே y = (-a) ஆகவுள்ள புள்ளியிலும் வைக்கப்படுகிறது. மூன்றாவது அதே பருமனுடைய நேரேற்றமுடைய ஏற்றமானது உற்பத்தியிலிருந்து x தூரத்தில் வைக்கப்பட்டுள்ளது. மூன்றாவது ஏற்றத்தில் தொழிற்படும் விசை,
   1) $q^2a/ 2\pi\varepsilon o (a^2 + x^2)^{3/2}$ 2) $q^2a/ 4\pi\varepsilon o (a^2 + x^2)^{1/2}$
   3) $q^2a^2/ 2\pi\varepsilon o (a^2 + x^2)^{3/2}$ 4) $q^2/ 4\pi\varepsilon o (a^2 + x^2)_{1/2}$

32. 2cm விட்டமுடைய செப்புக்கோளமொன்று மின்னுழைய அனுமதித்திறன் 5உம் $800kgm^{-3}$ அடர்த்தியுமுடைய திரவத்தினுள் நிலைக்குத்தாக கீழ்நோக்கி $400Vm^{-1}$ பருமனுடைய மின்புலத்தின் கீழ், அமிழ்ந்து சமநிலையில் உள்ளது. கோளமானது கொண்டுள்ள ஏற்றம் Q ($Pcu = 8600kgm^{-3}$)
   1) $8 \times 10^{-6}C$ 2) $4 \times 10^{-6}C$
   3) $4 \times 10^{-3}C$ 4) $4 \times 10^{-4}C$

33. மூன்று சமச்சீரான கடத்தும் கோளங்கள் படத்தில் காட்டியவாறு வைக்கப்பட்டு உள்ளன. ஆகவும் உள்ளேயுள்ள கோளமும், ஆகவும் வெளியே உள்ள கோளமும் புவித்தொடுப்பிடப்பட்டுள்ளன. நடுக்கோளமானது $q_o$ ஏற்றம் கொடுக்கப்பட்டால் உட்கோளத்திலும் வெளிக்கோளத்திலும் உள்ள ஏற்றங்கள் முறையே,
   1) $-q_o/4$, $-3q_o/4$
   2) $-3q_o/4$, $-q_o/4$
   3) $-q_o/3$, $-2q_o/3$
   4) $-2q_o/3$, $-q_o/3$




34. மேற்கூறிய வினாவில் உட்கோளத்தினதும் வெளிக்கோளத்தினதும் ஏற்ற அடர்த்திகள் முறையே,
   1) $-q_o/16\pi a^2, -q_o/48\pi a^2$ 2) $-3q_o/16\pi a^2, -q_o/16\pi a^2$
   3) $-q_o/8\pi a^2, -q_o/4\pi a^2$ 4) $-q_o/4\pi a^2, -q_o/8\pi a^2$

(வளரும்)

ஆசிரியர்:- சி.சிந்தனைச்செல்வன் (B.Sc) Dip.in.Edu, Dip.in.IT
கொ/விவேகானந்தா கல்லூரி,
கொழும்பு-13. T.P:077-7550332



# நம்பகத் தன்மைமிக்க புதிய தலைமையை தமிழர் தரப்பில் அரசு எதிர்பார்க்கிறதாம்!

## 'த ஹிந்து' நாளிதழ் செய்தியில் விவரிப்பு

சென்னை,மார்ச் 31

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியேற்றுவதற்கும் அதிகாரப் பகிர்வை நடைமுறைப்படுத்துவதற்கும் மேலும் கால அவகாசத்தைக் கோரியுள்ள இலங்கை, இந்தப் பொதுத் தேர்தலுக்குப் பின்னர், முன்பு விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்த விநாயகமூர்த்தி முரளிதரன் போன்றவர்களுக்கு மாற்றீடாகப் புதிய - நம்பகத்தன்மை மிக்க - தலைமை வருவதை விரும்புகின்றது என இந்தியாவின் 'த ஹிந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இலங்கையின் இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்தச் செய்தியை வெளியிட்டுள்ள 'த ஹிந்து', இலங்கையின் தேசிய நல்லிணக்க நடைமுறைக்குள் புலம்பெயர்ந்த தமிழர்கள் உள்வாங்கு வது குறித்த விருப்பத்தை இராஜதந்திர வட்டாரங்கள் வெளியிடவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக "தஹிந்து" பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

உட்கட்டுமான வசதிகள் இன்மை காரணமாகவும், கண்ணிவெடிகள் அபாயம் காரணமாகவும் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு மேலும் காலம் எடுக்கலாம் என்கிறது இலங்கை. "எம்மிடம் காலக்கெடு எதனையும் கோராதீர்கள். மீள்குடியேற்றம் விரைவில் பூர்த்தியாகும். நாங்கள் பெரும் எண்ணிக்கையான மக்களை மிகக் குறுகிய காலத்திற்குள் குடியேற்றியுள்ளோம். நாளாந்தம் ஆயிரம் பேர் தற்காலிக முகாமிலிருந்து செல்கின்றனர்" - என அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், அந்த மக்களுக்கு உட்கட்டுமான வசதிகளை வழங்கவேண்டும், கண்ணிவெடிகளை அகற்றவேண்டும்.

மக்கள் கண்ணிவெடிகளில் அகப்பட்டு வெடித்துச் சிதறுவதற்கு அனுமதிக்க முடியாது எனவும் அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டன.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் கைது மற்றும் இராணுவ நீதிமன்றம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் அவருக்குத் தன்னை நிரூபிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படும் என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் அவருக்குப் பொது மன்னிப்பு வழங்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகளை நிராகரித் துள்ள அந்த வட்டாரங்கள், இந்தியாவின் பாரம்பரியத்தைப் பின்பற்றி, இலங்கையும் இராணுவத்திற்கும் அரசியலிற்கும் இடையில் இடைவெளியைப் பேண விரும்புவதாகவும் குறிப்பிட்டன.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள இராஜதந்திர வட்டாரங்கள், விடுதலைப்புலிகளின் முன்னாள் உறுப்பினர்களான கருணா போன்றவர்களுக்கு மாற்றீடான - புதிய - நம்பகத்தன்மை மிக்க - தலைமையொன்று உருவாகுவதை விரும்புவதாகக் குறிப்பிட்டன.சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் பரந்துபட்ட ஆலோசனைகளை மேற்கொண்ட பின்னரே அரசமைப்புச் சீர்திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை இலங்கை முன்னெடுக்கவுள்ளது. இதனால் இவற்றை நடை முறைப்படுத்துவதற்கு சிறிது காலம் எடுக்கும் என்றும் அவை தெரிவித்தன.

இரு விடயங்கள் குறித்தும் முக்கியமாகக் கவனம் செலுத்த விரும்புகிறோம். எதனை நடைமுறைப்படுத்தினாலும் அது சகல மக்களும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக அமையவேண்டும். மேலும் அது நிரந்தரமானதாக அமையவேண்டும். - என அவை சுட்டிக்காட்டின.

இலங்கையின் இந்த நடிவடிக்கைகளுக்குள் புலம் பெயர்ந்த தமிழர்களை உள்வாங்குவதற்கான ஆர்வத்தை அவை வெளிப்படுத்தவில்லை.

'அவர்கள் எவரும் இங்கு வரப்போவதில்லை. ஆனால் இலங்கையில் செயற்படுத்த முடியாத யோசனைகளை அத் தரப்புகள் முன்வைக்கின்றன' - என அந்த இராஜதந்திர வட்டாரங்கள் குறிப்பிட்டன.

- இப்படி 'த ஹிந்து' மேலும் தெரிவித்துள்ளது.

(அ-சி)

# ராணுவச் சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்த - பரிசீலிக்க முடியாதாம்

## பதில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 31

இராணுவச் சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்த முடியாது என பதில் நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷவால் இந்தச் சட்டத்திருத்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

எனினும், எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் திகதி அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்காகவே நாடாளுமன்றம் கூடுகிறது எனவும், அந்தச் சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட நபர்களின் சட்டத் திருத்தப் பிரேரணைகளைப் பரிசீலனை செய்ய முடியாது எனவும் பதில் செயலாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய பாதுகாப்பு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு 155 ஆவது அரசசாசனச் சட்டத்தின் அடிப்படையிலேயே நாடாளுமன்றம் கூட்டப்படுகிறது என அவர், விஜயதாஸ ராஜபக்ஷவிற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

எனவே, குறித்த சட்டத் திருத்தங்களை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள சட்டத்தில் இடமில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, குறித்த சட்டங்களை ஆராய்ந்து அதன் பின்னர் இந்தக் கடிதத்திற்கு பதில் அனுப்பிவைக்க உள்ளார் என விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

ஓய்வு பெற்ற இராணுவ உயரதிகாரிகள் மற்றும் படையினருக்கு இராணுவச் சட்டத்தை அமுல்படுத்தக் கூடாது என சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வருவதே தமது முயற்சி என்றும் விஜயதாஸ தெரிவித்துள்ளார்.

1949 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க இராணுவச் சட்டத்தின் 34 ஆம் சரத்தில் ஓய்வு பெற்ற படை அதிகாரிகள் மற்றும் படையினருக்கு இராணுவச்சட்டம் பொருந்தாதென சுட்டிக் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சி)

### வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்து வழங்கல்

நவாலி, மார்ச் 31

மானிப்பாய் சுகாதாரப் பிரிவினரால் மானிப்பாய் பிரதேசத்திலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி மருந்துகள் கடந்த சில தினங்களாகக் குறிப்பிட்ட இடங்களில் வைத்து ஏற்றி வருகின்றனர்.

பொது மக்கள் பலரும் இவ்வறிவித்தலை ஏற்று தமது நாய்களுக்கு தடுப்பூசியேற்றி வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

(50-100)


**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள CENTURY, FUJI CENTRAL வகை சினிமா புரொஜக்டர்கள், அவற்றின் உதிரிப் பாகங்கள், LENSES, ரெக்டிபயர், ரபர் ஸ்கிறீன் என்பனவும் திரேட்டர்களுக்குரிய கதிரைகளும் உடன் விற்பனைக்குண்டு.

தொ.பே: 0776173835



உ

ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நமக

**திருமண அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விரோதி வருஷம் பங்குனி மாதம் 18ஆம் நாள் (01.04.2010) வியாழக்கிழமை பகல் 10.57 மணி முதல் 12.33 மணிவரையுள்ள சுவாதி நட்சத்திரமும், அமிர்த சித்தயோகமும் கூடிய மிதுனலக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**கஜீபன்**
அவர்களுக்கும்



எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**ஹெளசிகா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு மீனாட்சி அம்மன் கோயில் (கோயில் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி) மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

இவ்வழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரும் வருகை தரவும்.

க.மாணிக்கம் குடும்பம்,
இல. 320/2, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

திருமதி அ.கந்தசாமி குடும்பம்,
மீனாட்சி அம்மன் கோயில் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

தொடர்பு: கோமகன். 0773049893

(95758) (இரு வீட்டார் அழைப்பு)



**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



**முத்துலிங்கம் செல்லம்மா**

திதி: 31.03.2010

பாசத்தின் ஒளி விளக்கே!
பண்பின் திருவிளக்கே - எங்கள்
குடும்பத்தின் குல விளக்கே - உம் பிரிவால்
குமுறுதம்மா எம் மனம் இங்கே
ஆறாத்துயருடன் - உங்கள்
ஆத்ம சாந்திக்காய் வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி!! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 04.11.1939
மறைவு 11.04.2009

169, நாவலர் றோட்,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(C/566267)

தகவல்:
பஞ்சலிங்கம்
(மருமகன்).



**விண்ணக வாழ்வின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**

பிறப்பு 21 ★ 06 ★ 1938



இறப்பு 31 ★ 03 ★ 2008

**அமரர் சு.யோ.பூராசா**

(ஓய்வுபெற்ற அதிபர்)

"இறைவா உன்மேல் நம்பிக்கை வைப்பவர்களுக்கு வாழ்வு மாறுபடுவதே அன்றி அழிக்கப்படுவதில்லை"

அன்னாரின் ஆன்மா இறைவனின் நித்திய பேரின்ப ஒளியில் வாழ்ந்திட இறைவனை வேண்டுகின்றோம்.

02ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(95846)

என்றும் நீங்கா நினைவுடன்:
குடும்பத்தினர்.



**10ஆம் ஆண்டு நினைவு நாள்**

தோற்றம் 10 ★ 09 ★ 1936



மறைவு 21 ★ 03 ★ 2000

**திருமதி மகேஸ்வரி பரராஜசிங்கம்**

திதி: 31.03.2010

பத்து மாதம் சுமந்து பெற்று
பாசமுடன் எமை வளர்த்து
பாதியிலே பிரிந்து சென்று
பத்து ஆண்டுகள் ஆனதம்மா'
பெற்ற தாயின் பிரிவினாலே
பிள்ளைகள் நாம் ஏங்குகின்றோம்
உற்ற கணவர் மனதிலும் தான்
உங்கள் பிரிவு வாட்டுதம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இ.பரராஜசிங்கம்,
82/1, செட்டித்தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(96069)

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# சிங்கள பௌத்த வரலாற்றுச் சின்னங்களுக்கு புலிகள் ஒருபோதும் சேதங்களை ஏற்படுத்தவில்லை

### நல்லூர் பிரசாரக் கூட்டத்தில் சி.வி.கே.சிவஞானம்



யாழ்ப்பாணம்,மார்ச்31

வரலாற்று நிகழ்வுகளின் பதிவுகளை அழிப்பது நாகரிகமான செயல் அல்ல. விடுதலைப் புலிகள் யாழ். குடாநாட்டைத் தமது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருந்த காலத்தில் கூட அவர்கள் சிங்கள பௌத்த வரலாற்றுச் சின்னங்களுக்கோ பதிவுகளுக்கோ எதுவித சேதமோ பாதிப்போ ஏற்படுத்தவில்லை என்பதை இந்த நடவடிக்கையில் ஈடுபட்டோர் புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் சி.வீ.கே.சிவஞானம் கூறினார். நல்லூர் கொண்டலடி வைரவர் கோவில் முன்றலில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது, தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனம் சமாதானத்திற்கு சாதகமானது அல்ல என்று தென்னிலங்கை கூறுகிறது. ஆனால் அதுவல்ல உண்மை. தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள விஞ்ஞாபனம்தான் ஆக்கபூர்வமான சமாதானத்தை நோக்கியதாகும். தமிழ் பேசும் மக்களது அடிப்படைக் கோரிக்கைகளான வடக்கு - கிழக்கு இணைந்த தன்னாட்சிக் கட்டமைப்பு, சுயநிர்ணய உரிமை அங்கீகாரம் ஆகியவற்றை உள்ளடக்கிய தீர்வு ஒன்று எட்டப்படுமானால் அதுவே சமாதானத்திற்கான திறவுகோலாக இருக்கும்.

தியாகி திலீபனின் நினைவுத்தூபி உடைக்கப்பட்டமை பற்றி இங்கே குறிப்பிடப்பட்டது. தான் வரித்துக் கொண்ட இலட்சியத்தின் ஒரு பகுதிக்காக சாத்வீக வழியில் உண்ணாநோன்பிருந்து தன்னுயிர் நீத்த அறவழிப் போராளியின் நினைவுத் தூபியின் அநாகரிகமான சிதைப்பு முதலில் அதை நிர்மாணிப்பித்தவன் என்ற முறையிலும் அது சேதமாக்கப்பட்டதற்கு பின்பும் அதை மீண்டும் புதுப்பித்தவன் என்ற முறையிலும் நான் மிகவும் வேதனைப்படுகின்றேன். வரலாற்று நிகழ்வுகளின் பதிவுகளை அழிப்பது நாகரிகமான செயல் அல்ல.

ஐக்கிய தேசிக் கட்சி, நம்மவர்களில் சிலர், ஏற்க மறுத்து வரும் ஒஸ்லோ அறிக்கையின் ஏற்பாடுகளையும் தாங்கள் கைவிடுவதாக் கூறிவிட்டு சமஷ்டிக் கட்டமைப்பு அடிப்படையிலான ஒரு தீர்வு பற்றி குறிப்பிடும் இந்த இருபக்க உடன்பாட்டை புலிகள் உடைத்தால் தமது பொறுப்பு முடிந்துவிட்டது என அக்கட்சி கூறுகிறது. இந்த ஆலோசனையிலிருந்து அக்கட்சியும் நழுவுகிறது என்பது தெளிவு. இது தமிழர்களுக்கான தீர்வு நோக்கிய நகர்வு என்பதைக் கூட அக்கட்சி மறுதலிக்கின்றது.

எம் இனத்தின் மீதான சகல அட்டூழியங்களையும் நிறைவேற்ற உதவிய அவசரகால சட்டத்தை ஒருபோதும் எதிர்க்காமல் இருந்த வகையில் இவற்றுக்கெல்லாமான பொறுப்பு இந்தக் கட்சிக்கு உண்டு. ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் பொன்சேகாவுக்கு தமிழ் மக்கள் அளித்த ஆதரவு ஐக்கிய தேசியக் கட்சிக்கான ஆதரவு என அக்கட்சி நினைப்பது மிகவும் தவறானது. அது ஆட்சி மாற்றத்திற்கும் தமிழ் மக்களின் உணர்வுகளை அரசுக்கு எடுத்துச் சொல்லும் செய்தியே என்பதை இக்கட்சியினர் புரிந்துகொள்ள வேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், இராசேந்திரன் மற்றும் ஐங்கரநேசன் ஆகியோரும் உரையாற்றினர். (ஒ)

# தமிழரின் அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண தமிழ்க் கூட்டமைப்பின் பின்னால் அணி திரள்க!

### திகாமடுல்ல வேட்பாளர் இராசையா துரைரவல்

அம்பாறை,மார்ச்31

''தமிழ்மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது உட்பட, எமது மக்களின் நீண்டகால அபிலாஷைகளையும் நிறைவேற்றி வைப்பதற்கான பல திட்டங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வகுத்துச் செயற்பட்டு வருகின்றது. எனவே, பேதங்கள் எதுவுமின்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பின்னால் சகலரும் அணி திரளவேண்டும்.''

- இவ்வாறு திகாமடுல்ல தேர்தல் மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் செல்லையா இராசையா கூறினார்.

காரைதீவு சக்தி சமூக முன்னேற்றச்சங்க உறுப்பினர்களுடனான தேர்தல் சந் திப்பு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். சங்கத் தலைவர் க.சண்முகம் தலைமையில், காரைதீவில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை, எமது மக்களுக்கு மறுக்கப்பட்டு வந்த உரிமைகளையும், அபிலாஷைகளையும் பெற்றுக் கொடுப்பதற்கும், நமது தேசியம், தனித்துவத்தை மேலோங்கச் செய்யவும் பல வியூகங்களை வகுத்துச் செயற்பட்டு வருவதை நாமறிவோம்.

அம்பாறை மாவட்டத் தமிழ் மக்கள் இந்தப் பொதுத் தேர்தலை தமிழினத்தின் முக்கியமான திருப்புமுனையாகக் கருதி, தமிழர் பிரதிநிதித்துவத்தைக் காக்க வேண்டும். அதேபோல் நமது தமிழர் பிரதிநிதித்துவங்களை அதிகரித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தை மேலும் அதிகரிக்கச் செய்ய தமிழ் மக்கள் விழிப்புடன் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலம் தான் தமிழ் மக்களின் பலமாகும். ஆளும் தரப்புடன் ஒட்டிக்கொள்வதால் தான் நம் எதிர்காலம் சிறக்குமென சில சுயநலமிக்கவர்கள், கூப்பாடு போட்டுத் திரிகின்றனர். இவர்களது நடவடிக்கை தமிழினத்தைக் காட்டிக் கொடுப்பதாகவும், பேரினவாதிகள் நம் இனத்தைக் காவுகொள்ள வழி வகுப்பதாகவுமே அமையுமென்பதைத் தமிழ் மக்கள் இன்று நன்கு உணர்ந்து கொண்டுள்ளனர்'' - என்றார்.

# மட்டு. மாநகரசபையின் உறுப்பினர்கள் நான்கு பேர் அரச வேட்பாளருக்கு ஆதரவு

ஏறாவூர்,மார்.31

மட்டக்களப்பு மாநகரசபைக்கு சுயேச்சைக் குழு மூலம் உறுப்பினர்கள் தெரிவாகியிருந்த நான்கு பேர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து கொண்டதுடன், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டமைப்புச் சார்பாகப் போட்டியிடும் அலிஸாஹிர் மௌலானாவை ஆதரிப்பதற்கும் தீர்மானித்துள்ளனர்.

இவர்களது இந்தத் தீர்மானம் தொடர்பாக அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை மாலை அலிஸாஹிர் மௌலானாவின் இல்லத்தில் நடைபெற்றது. மாநகரசபை உறுப்பினர்களான கந்தையா அருமைலிங்கம், வெலிங்ரன் ராஜேந்திர பிரசாந்த், செல்வராசா சசிகுமார் மற்றும் மகேந்திரமூர்த்தி சுரேந்திரன் ஆகியோர் இந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, தமது முடிவுகளை வெளியிட்டனர்.

அங்கு உரையாற்றிய உறுப்பினர் அருமைலிங்கம் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக எமது பிரதேசத்தில் நிலவிய பயங்கரவாதத்தை முடி வுக்குக் கொண்டு வந்து தற்போது பிரதேச அபிவிருத்தி தொடர்பாக, அதிக அக்கறை காட்டிவரும் ஜனாதிபதியின் கரத்தைப் பலப் படுத்தும் வகையில் நாம் செயற்படவுள்ளோம்.


இதற்கு முன்னோடியாகத் தமிழ், முஸ்லிம் மக்களின் உறவுப்பாலமாகவும் இன ஐக்கியத்தின் சின்னமாகவும் செயற்பட்டு வரும் அலி ஸாஹிர் மௌலானாவை தேர்தலில் ஆதரிப்பதற்கும் நாம் தீர்மானித்துள்ளோம்.

எமக்கு வாக்களித்து, எம்மை மாநகர சபைக்கு அனுப்பிவைத்த மக்களின் வேண்டுகோளுக் கிணங்கவே, தாம் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளோம். அலிஸாஹிர் மௌலானாவை நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்வதன் மூலமாக அவரை அமைச்சராகவும் ஆக்கி, இம் மாவட்டத்தின் அபிவிருத்தியை முன்னெடுக்கும் வகையில் நாம் அயராது பாடுபடுவோம்.

எமது மக்களின் அமோக ஆதரவுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெறும் - என்றார்.

# உரிமைகள் பெற்றுத்தருவோம் என்று சொல்லிச் சொல்லியே 60ஆண்டுகளைக் கழித்தவர்கள் மீண்டும் உங்கள் முன்!

### ஏமாந்துவிடாதீர்கள் என்கிறார் ஈ.பி.டி.பி. வேட்பாளர் சந்திரகுமார்



யாழ்ப்பாணம்,மார்ச் 31

கடந்த சுமார் அறுபது வருடங்களாக உரிமை வாங்கித் தருவோம் என்று சொல்லிச் சொல்லியே காலத்தைக் கழித்துவிட்டவர்கள், மீண்டும் உங்கள் முன்னால் வருகிறார்கள். மீண்டும் ஆசை வார்த்தைகள் இவற்றிற்கெல்லாம் மக்கள் ஏமாந்து விடமாட்டார்கள்.

இவ்வாறு ஈ.பி.டி.யின் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளருமான முருகேசு சந்திரகுமார் கூறினார்.

கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலயத்தில் மீளக்குடியமர்ந்த மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு-

இழந்துபோன வாழ்க்கையை மீண்டும் மக்கள் பெறவேண்டும் என்றும் தங்கள் மண்ணிலேயே அவர்கள் மகிழ்ச்சியாக வாழவேண்டும்.

கிளிநொச்சி மாவட்ட மக்களின் நிலைமைகளை நான் நன்றாக அறிவேன். நானும் இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற வகையில் எனக்கு இங்குள்ள மக்களின் பிரச்சினைகள் நன்றாகத் தெரியும். இந்த மாவட்டம் மிகவும் வளமானது. ஆனால் இன்று அது மற்ற எல்லா மாவட்டங்களையும் விட அதிகளவில் அழிவுகளைச் சந்தித்த நிலையில் இருக்கின்றது.

யாரிடமும் கையேந்தாமல் சுயகௌரவத்துடன் உழைத்து வாழ்ந்த மக்கள் இன்று துக்கத்தையே வாழ்நாளில் கண்டவர்களாக சுமை தாங்கிகளாக இருக்கின்றார்கள். யாருமே விரும்பாத வாழ்க்கையை வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இந்த வாழ்க்கையை இப்படியே தொடர்ந்து வாழ முடியாது.

**துயரங்களுக்கு முற்றுப்புள்ளி**

துயரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இனியும் அவல வாழ்க்கைக்குத் திருப்பக்கூடாது. 60 ஆண்டுகளாக ஒரேமாதிரி அரசியல் உரிமையைப் பற்றிப் பேசிப் பேசி மக்களை அனாதைகளாக ஆக்குவதற்கு சிலர் இன்னும் முயற்சிக்கின்றார்கள். முள்ளிவாய்க்கால் வரை சென்ற அனுபவமுள்ள மக்களுக்கு நாம் அதிகம் எதையும் விளக்கத் தேவையில்லை.

ஆனால் நொந்துபோயுள்ள மக்களுக்கு இன்று ஆறுதல் அளிக்கும் நடவடிக்கையே தேவை. அதைச் செய்யவே நாம் விரும்புகின்றோம்.

சில காலங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் எங்களுடைய செயற்பாடுகளை மேற்கொள்ளமுடியாத ஒரு சூழல் இருந்தது. ஆனால் இன்று அப்படியல்ல. நாம் மக்களுடனே நிற்பவர்கள் என்பதால் மக்களே எங்களுக்குப் பலம். அதாவது மக்களுக்கும் எங்களுக்கும் உள்ள உறவே தமிழினத்தின் எதிர்காலமாகும். ஆகவே மக்கள் தெளிவாகத் தீர்மானத்தை எடுக்கவேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வு முழங்காவில் மகாவித்தியாலயத்தில் இரணைதீவு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அதிபர் ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது. இதில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முழங்காவில் மகாவித்தியாலய அதிபர் கல்வியாளர்கள், கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், விவசாயிகள் பொதுமக்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பிரதேச மக்களுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டன.(ஒ)




# சிங்கள சமூகத்துக்குப் பிரிவினை என்றால் 'அலர்ஜிக்' அதனால் நாங்கள் புதிய பாதையில் பயணிக்கிறோம்

### தொல்புரம், மூளாய்ப் பகுதிகளில் பத்மினி சிதம்பரநாதன் பிரசாரம்



யாழ்ப்பாணம்,மார்ச்31

சிங்கள மக்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் பிரிவினை என்பதுதான் பிரச்சினை - ஒவ்வாமை(அலர்ஜிக்).

அதனால் நாம் வன்முறையற்ற வழியில் இவர்கள் சமாதானமாக வாழ்வதற்குச் சாத்தியமான - இருதேசம் ஒரு நாடு என்பதை நோக்கிப் பயணிக்கின்றோம். இது சாத்தியமானதே.

இவ்வாறு கூறினார் தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணியின் வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பத்மினி சிதம்பரநாதன்.

தொல்புரம், மூளாய் பகுதிகளில் கிராம மக்களுடனான சந்திப்புக்களின் போது மேற்கண்டவாறு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது-

சிலர் தங்களைக் கடுங்கோட்பாட்டாளர்கள் என்று காட்டிக் கொடுக்க முயல்கின்றனர். ஆனால் உண்மை அப்படியில்லை. நாங்கள் புதிய பாதையில் பயணிக்கின்றோம்.

நாம் மக்களோடு சேர்ந்தியங்கி மக்களைப் பலம் பெறவைத்துத் தமிழரின் நியாயமான அபிலாஷைகளை தமிழ் மக்களே எடுத்துக் கூறுமளவுக்கு மக்கள் அரசியலைக் கட்டி வளர்ப்போம். மக்கள் அரசியல் மூலம் தமிழ்மக்களின் நியாயங்களை -

✱ சிங்கள மக்களோடு பகிர்ந்து கொண்டு அவர்களினூடு சிறிலங்கா அரசிற்கு எடுத்துரைப்பதும்,

✱ தமிழ்நாட்டு உறவுகளோடு பகிர்ந்து கொண்டு அவர்களினூடாக இந்திய மக்களுக்கும் மத்திய அரசுக்கும் எடுத்துரைப்பதும்,

✱ புலம்பெயர்ந்த உறவுகளோடு பகிர்ந்துகொண்டு அவர்களினூடு மேற்கு நாட்டு மக்களுக்கும் அரசுகளுக்கும் எடுத்துரைப்பதும் எமது உபாயமாக இருக்கும்.

இவ்வாறு மக்களை அணிதிரட்டிச் சகல தரப்புகளோடும் ஈடுபட்டு வேலை செய்யும்போது புதிய அரசியல் பண்பாடு உருவாகும். மக்கள் முன்னணிக்கு வருகின்ற மக்கள் அரசியல் பரிணமிக்கும். தமிழ்மக்கள் சுதந்திரம் பெற்ற மக்களாக வாழ்வது இதன் மூலம் சாத்தியமாகும். தமிழர்களின் சுதந்திரத்தைக் காணும் முயற்சியில் தமிழ்த்தேசியத்திற்கான மக்கள் முன்னணியை பலம்பெற வைப்பதற்கு இத்தேர்தலில் சைக்கிள் சின்னத்திற்கு வாக்களித்து அனைவரும் கரம் கோர்ப்போம். - என்றார். (ஒ)

## கோழிக்குஞ்சு விநியோகம்

ஒறியிளல் பகிரா புறொய்லர்க் குஞ்சுகள் 07.04.2010 இல் விநியோகிக்கப்படும். முற்பதிவு செய்யவும்.

**நல்லூர் பாம் செவிரர்**
19, முருகேசர் லேன், நல்லூர், யாழ்ப்பாணம்.



## தவறிவிட்டது

மின்சாரநிலைய வீதி, சுன்னாகம் தெற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த கலாதேவன் கபில்ராஜ் என்பவரது தே.அ.அ (891493398V) யாழ். நகருக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். தொ.பே: 0778171781



## நாடாளுமன்றத் தேர்தல் - 2010

இனி ஒரு விதி செய்வோம்
திட்டத்தில் புதுமை, கருத்தில் துணிச்சல்
செயலில் தீரமுடன் செயற்பட்டு
மறுமலர்ச்சி காண்போம்

X 11

சைக்கிளுக்கே வாக்களிப்போம்

அகில இலங்கை
தமிழ்க் காங்கிரஸ்
(தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி)



செல்லத்துரை
சுப்பிரமணியம்
(ஓய்வு பெற்ற அதிபர்)
B.A (Cey), Dip. in Edu.SLPS Grade-I
(சமூக, ஆன்மீக சேவையாளன்)

(96035)


## அதிபர்களுக்கான மாதாந்தக் கூட்டம்

தீவக வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான மாதாந்தக் கூட்டம் எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

(209-267)





## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 601361393 முதல் 601373314 வரை. சீட்டிழுப்பு இல. 635 திகதி 29-03-2010

வெற்றி எண்கள்
05 19 35 52 J

ஜக்பொட் பரிசு ரூ. 14,210,860/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 14,210,860/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 14 | 2,000/= | 28,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 234 | 1,000/= | 234,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 395 | 1,000/= | 395,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 9621 | 60/= | 577,260/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 4439 | 40/= | 177,560/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 112192 | 20/= | 2,243,840/= |
| | | மொத்தம் ரூ. | 4,055,660/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - ஷிரான் காரியவசம் - பதுள்ளை
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - A.M. தினூஷா பிரசாதினி அழுவத்த - பலாங்கொடை

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வென்றெடுத்த டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மொணராகலை | 601363700-7-38 |
| இரத்தினபுரி | 601362107-9-03 |
| கேகாலை | 601369660-2-05 |
| பதுளை | 601363488-2-30 |
| வவுனியா | 601370134-3-44 |
| மாத்தறை | 601371979-8-41 |
| புத்தளம் | 601362618-2-18 |
| நுவரேலியா | 601363506-2-20 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,455,660/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட
ரூ. 14,515,120/=

தொடர் இல. 701331842 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 ஏப்ரல் 01 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2335467

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்



## நன்றி உபகாரம்




### ஆகக்கூடிய அடகுக் கடன் கைநிறைய வெகுமதிகள்

HNB அடகுச் சேவையுடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் வாடிக்கையாளர்களுக்கு உன்னத சேவையுடன் அழகிய பிரயாண பேகுகள் கவர்ச்சிகரமான தொப்பிகள் வண்ண வண்ண பேனாக்கள் போன்ற பெறுமதியான வெகுமதிகளும் தற்போது வழங்கப்படுகின்றன.

HNB
அடகு வைக்கும் வசதி




வழங்கும் நன்மைகள்
- ஆகக்கூடிய கடன், ஆகக் குறைந்த வட்டி
- விரைவான சேவை
- முற்றிலும் அந்தரங்கமான கொடுக்கல் வாங்கல்
- அடகு நகைகளுக்கு பலம்வாய்ந்த HNBயின் பூரண பாதுகாப்பு.
- இனிய சூழலில், அனுபவம் வாய்ந்த அலுவலர்களின் உதவியுடன் அடகுச் சேவையை வழங்க விசேடமாக ஒதுக்கப்பட்ட இடம்

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 011 266 1966

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

HNB



LISTER PETTER

## 5KVA
### சவுண்ட் புறூப் ஜெனரேட்டர்



- அகன்ற சேவை இலங்கை முழுவதும் கையிருப்பிலிருந்து கிடைக்கும்
- பயிற்சி பெற்ற நபர்களால் இயக்கப்படுகிறது
- துணையுறுப்புகள் தாராளமாக கிடைக்கும்

The World Of Hayleys
World of Hayleys
47, Stanly Road, Jaffna.
Tel: 021-2221292
E-Mail – powersales@industrial.hayleys.com

கொழும்பு காரியாலயம் – 0112674576


சிவமயம்

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு 01.06.1964 — உதிர்வு 01.03.2010

### திருமதி ஜெயாதரன் குகனேஸ்வரி

கடந்த 01.03.2010 திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (31.03.2010) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன வைபவத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஞானசம்பந்தர் லேன்,
வட்டுதெற்கு, வட்டுக்கோட்டை.

எஸ்.ஜெயாதரன் (கணவர்)
பிள்ளைகள்.

# தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பெரும்பான்மைக் கட்சி ஒன்றின் ஆதரவு அவசியம்

**யாழ்.மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் தி.துவாரகேஸ்வரன் உதயனுக்கு வழங்கிய நேர்காணல் இது:**

**கேள்வி :** உங்களுடைய அரசியல் பிரவேசத்திற்கான காரணம் என்ன?

**பதில் :** என்னுடைய சகோதரர் மகேஸ்வரன் இருக்கும் வரை எமக்கு அரசியலுக்கு வரவேண்டும் என்ற எண்ணம் இருக்கவில்லை. அவரின் மறைவுக்குப் பின்னர் அவரின் ஆதரவாளர்களின் ஏகோபித்த அழைப்பாலேயே வந்தேன். இலங்கை அரசின் அராஜக நடவடிக்கைகளும் மக்கள் படும் கஷ்டமும் நீங்க வேண்டும். இன்று மகேஸ்வரன் இருந்திருந்தால் இவை நிகழாது.

அவர் முழுமையாக நேசித்த மக்களுக்காக, அவரின் சேவைகளைத் தொடரவே நாம் அரசியலுக்குள் நுழைந்துள்ளோம். அவரின் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுப்போம்.

**கேள்வி :** நீங்கள் தமிழ்க் கட்சி ஒன்றில் இடம்பெறாது பெரும்பான்மைக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கான காரணம் என்ன?

**பதில்:** எமது பிரவேசம் பெரும்பான்மைக் கட்சியினூடாக இருந்தாலும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறை வேற்ற நாம் உண்மையாக உழைப்போம். எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க பெரும்பான்மைக் கட்சி ஒன்றின் ஆதரவு அவசியம்.

## ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளர் துவாரகேஸ்வரன் அடித்துக் கூறுகிறார்

எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை நியாயபூர்வமாகத் தீர்க்க ஐக்கிய தேசியக் கட்சியாலேயே முடியும். இன்று தமிழ் அரசியல் கட்சிகள் கை, கால்கள் கழற்றப்பட்டு தனித்தனியாக சிதறிக் கிடக்கின்றன.

எமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்னைக் கொழும்பில் போட்டியிடுமாறு கேட்டிருந்தார். ஆனால் நான் அதனை மறுத்து விட்டேன். எனது சகோதரர் 2 தடவைகள் யாழ்ப்பாணத்திலேயே வெற்றிபெற்றார். 3ஆவது தடவை அவர் கொழும்பில் போட்டியிட நேர்ந்தது. இன்று அச்சூழ்நிலை மாறிவிட்டது. எனவே நாம் இங்கேயே போட்டியிட விரும்பினோம்.

**கேள்வி:** ஒஸ்லோ பிரகடனம் ஊடாகவே தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என மகேஸ்வரன் அணியினராகிய நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் உங்கள் கட்சியின் தலைவர்,விடுதலைப் புலிகளே ஒஸ்லோ அறிக்கையை முதலில் கைவிட்டனர் என்றும், ஐ.தே.க. அதனை மதித்து செயற்படவேண்டிய கடப்பாடு ஏதும் கிடையாது என்றும் கூறியிருந்தாரே? என்றும் அதனைப் பற்றிய பேச்சுக்கும் இடமில்லை என்றும் கூறியுள்ளாரே....?

**பதில்:**கடந்த காலத்தில் நடந்தவைகள் கசப்பானவை. விடுதலைப் புலிகள் ஏற்காமல் விட்டதற்கு ஏதுவான காரணங்கள் இருக்கலாம். மே18 இன் பின்னர் தமிழ் மக்கள் புதிய களத்துக்குள் உள்ளனர். புதிய முகங்கள் மக்கள் பிரதிநிதிகளாக வரவுள்ளனர். நாம் இலங்கை முழுவதும் உள்ள தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளை ஒன்றிணைத்து நியாயபூர்வமான அனைவரதும் ஏகோபித்த ஆதரவையும் பெற்று எமது மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்போம். ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அழுத்தம் கொடுப்போம்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூட இனி நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகும் புதிய தலைமைகளுடனேயே பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகத் தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**கேள்வி:** நீங்கள் அண்மையில் கிளிநொச்சிக்குச் சென்றிருந்தீர்கள். அங்கு மீள் குடியேற்றம் என்ன நிலையில் உள்ளது? அங்குள்ள மக்கள் என்ன கூறுகிறார்கள்?

**பதில்:** நான் கிளிநொச்சியில் 3 தினங்கள் நின்றிருந்தேன். அங்கு கிளிநொச்சிக் கட்டளைத் தளபதி சந்தன ராஜகுரு உள்ளிட்ட பல அதிகாரிகளையும் சந்தித்து 2½ மணித்தியாலங்கள் கதைத்தேன். நான் அவர்களிடம் வினயமாகக் கேட்டிருந்தேன். பரந்தன் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரை அம்மக்கள் தமது இரத்தம் சிந்தி சதம் சதமாகச் சேர்த்து வாங்கிய பொருள்களை மீட்டுக்கொடுக்க வேண்டும் என்று. அதற்கு அவர்கள் சாதகமான பதிலை அளித்ததுடன் தற்போது அந்த செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளனர் என அறிய முடிகிறது.

அம்மக்களுக்கு நிவாரணம் இல்லை. ஆனால் இராணுவத்தினர் மக்களுக்குப் பல வழிகளிலும் உதவி வருவதைக் காண முடிந்தது. அம்மக்கள் கண்ணீர் மல்க சில விடயங்களை என்னிடம் கூறியிருந்தனர். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரை உணவு இல்லாமல் நீண்டநேரம் காத்திருந்து அவர்களுக்கு வாக்களித்து நாடாளுமன்றம் அனுப்பினோம். ஆனால் அவர்களில் ஒருவர் கூட எம்மை வந்து பார்க்கவில்லை என்றனர்.

இன்னொரு விடயத்தையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கூட்டமைப்பில் 22 உறுப்பினர்கள் இருந்த போதும் அவர்களால் வன்னியில் நடந்த போரைத் தடுக்க முடியவில்லை. அகதி முகாம்களில் தங்கியிருந்தவர்களைச் சந்தித்து ஒரு ஆறுதல் வார்த்தைதானும் கூறவில்லை. எனவே மக்கள் இம்முறை எக்கட்சிக்கு வாக்களித்தாலும் புதுமுகங்களுக்கு வாக்களிக்க வேண்டும். இப்போது தேர்தல் என்றவுடன் அம்மக்களைச் சந்திக்கச் சென்றனர். மக்களைப் பார்க்க தங்களை அரசு விடவில்லை எனக் கூறுவதற்கு அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும். தற்போது மக்கள் தேர்தலை எதிர்கொள்ளும் மனநிலையில் இல்லை. நான்கு தகரங்களால் அமைக்கப்பட்ட வீடுகளில் வாழ்கின்றனர். உணவுக்குப் பெரி




தும் கஷ்டப்படுகின்றனர்.

**கேள்வி:** வன்னியில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறதே?

**பதில்:** இதுவரை 11 தடவைகள் கிளிநொச்சிக்குச் சென்றுள்ளேன். அவ்வாறான குடியேற்றங்கள் அமைக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றபோதும் அதனை நான் காணவில்லை. சிங்கள மக்கள் பெருமளவிலானோர் அப்பகுதிகளைச் சென்று பார்வையிடுகின்றனர்.

மிகப்பெரிய இராணுவ முகாம்கள் அமைக்கும் முயற்சிகள் நடைபெறுவதைக் காணமுடிந்தது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் நல்லூர் மாநகர சபைப் பகுதியில் இவ்வளவு காலமும் வியாபாரம் செய்த தமிழ் வர்த்தகர்களின் இடங்கள் பறிபோயுள்ளன. இதனை எதிர்க்க கூட்டமைப்புக் கூட முயலவில்லை. வெறுமனே தேசியம், சுயநிர்ணயம் எனப் பேசாது மக்களுக்கு உதவ இவர்கள் முன்வரவேண்டும்.

இன்று புனித பிரதேசமான நல்லூர் புதிய சவாலை எதிர்கொள்ள வேண்டிய சூழலில் உள்ளது. ஆசாரமுறைப்படி வாழும் இம் மக்கள் இன்று பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர் என்பதே யதார்த்தம்.

எமது மண்ணில் திட்டமிட்ட குடியேற்றங்கள் நடத்தப்பட்டால் - எமது மக்களின் கௌரவத்துக்கு சவால் விடுக்கப்பட்டால் நாம் செல்லவுள்ள நாடாளுமன்றம் கௌரவமான நாடாளுமன்றமாக இருக்காது என்பதையும் நான் கூறவிரும்புகிறேன்.

வன்னி மக்களின் துன்ப, துயரங்களை இன்றுவரை நாடாளுமன்றம் உணரவில்லை. நான் எம்.பியாகத் தெரிவு செய்யப்பட்டால் வன்னி மக்கள் உடுத்த உடையுடனேயே நாடாளுமன்றம் செல்வேன்.

**கேள்வி:** இன்று யாழ்ப்பாணம் ஒரு பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளது. (ஒரு தியாகியின் தூபி உடைத்தெறியப்பட்டுள்ளது, மாணவனொருவன் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்) இந் நிலைமை தொடர்பாக என்ன கூறுகிறீர்கள்?

**பதில்:** யாழ்ப்பாணத்தில் இன்று நடக்கும் சம்பவங்கள் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை என்பது உண்மையே. அஹிம்சை வழியில் தன் இனத்தின் உரிமைக்காகப் போராடிய வீரனின் தூபி உடைப்பு ஏற்றுக் கொள்ள முடியாததே. அந்த ஈனச் செயலை யார் செய்தார்களோ அவர்கள் மனிதராக வாழத் தகுதியற்றவர்கள்.

யாழ்ப்பாணத்தில் 2006ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டுவரை இருந்த கடத்தல்,கொலை,கப்பம் கோரல் போன்ற சம்பவங்களுடன் தொடர்புடையவர்களே மாணவனின் கொலைக்கும் காரணமாயுள்ளனர்.

அன்று இருந்த சூழலில் இனந் தெரியாதோராகத் தமது செயல்களை மூடி மறைத்துள்ளனர். இவர்கள் ஜனநாயகம் எனும் பெயரில் காட்டாட்சி நடத்த முற்படுகின்றனர்.

தமிழ்மக்கள் ஒரு விடயத்தைச் சிந்திக்க வேண்டும்.சிவனே என்று கையெடுத்துக் கும்பிட்டவனை சுட்டுக்கொன்ற இவர்கள் தான் இக்கொலைக்கும் காரணம். இவர்களை இம்முறை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். இல்லையேல் 2006 ஆம் ஆண்டுகளில் என்ன நடந்ததோ அந்நிலை தான் அடுத்த 5 ஆண்டுகள் தொடரும்.

**கேள்வி:** இன்று தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் வகையில் தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டு வரப்படவுள்ளதாகக் கூறப்படுகிறதே...?

**பதில்:** அவ்வாறான முறைமையை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம்; நடைமுறைப் படுத்தவும் விடமாட்டோம். இதற்கு தமிழ் மக்கள் செய்யவேண்டிய கடமையாதெனில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் புதுமுகங்களுக்கு தங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும்.

அப்போதுதான் அனைவரும் ஒன்றிணைந்து இவ்விடயங்களை ஆராய்ந்து எமக்குச் சாதகமான முறைகளை நடைமுறைப்படுத்த முடியும்.

**கேள்வி:** சில அரசியல் கட்சிகள் இந்தியாவின் தலையீடு இன்றி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு இல்லை என்கின்றன. ஆனால் வேறு சில கட்சிகள் இந்தியாவை நட்பு சக்தியாகவே பார்க்கலாம் என்கின்றன. ஆனால் அரசு இந்தியாவையும் சீனாவையும் பயன்படுத்தி தமிழ் மக்களை அடக்க முற்படுகிறது. ஐ.தே.க. உறுப்பினர் என்றவகையில் என்ன கூறுகிறீர்கள்?

**பதில்:** இந்தியாவை நம்பி அவர்களினால் தான் எமது பிரச்சினையைத் தீர்க்க முடியும் எனக் கூறுபவர்கள் முதுகெலும்பு இல்லாதவர்கள். எமது மக்களை இலங்கை, இந்திய அரசுக்குக் காட்டிக் கொடுத்தவர்கள்தான் இன்று இந்தியாதான் பிரச்சினையைத் தீர்க்கும் என்கிறார்கள்.

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ இந்தியாவையும் சீனாவையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தமிழ் மக்களை அடக்கியாள முற்படுவது உண்மையே. எமது கட்சி அந் நாடுகளை நட்பு சக்தியாகவே நோக்கும்.

தமிழ்பேசும் மக்கள் ஒன்றிணைந்தால் அரசின் அடக்குமுறையை இல்லாது செய்து விடலாம். எமது இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்து வளர்த்ததும் தன்னுடைய நலனுக்காகவே, பின்னர் அதனை அழிக்க முன்னின்றதும் இந்தியாவே. தமிழ் மக்கள் இந்தியாவை ஒட்டு மொத்தமாகப் புறக்கணிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

**கேள்வி:** தமிழ்ப் பிரதிநிதிகள் சிலர் கடந்த அரசுகளில் அங்கம் வகித்து இருந்தாலும் அவர்களால் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சைப் பெற முடியவில்லையே....?

**பதில்:** எமது கட்சி வெற்றி பெறும் பட்சத்தில் நாம் அமைச்சரவை அந்தஸ்து உள்ள பதவிகளை மட்டுமே பெறுவோம். அப்போதுதான் உண்மையாகப் பாதிக்கப்பட்ட வடக்கு,கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த



மக்களுக்கு நாம் ஆக்கபூர்வமான நிரந்தரமான சேவைகளைச் செய்ய முடியும்.

நாம் ஏமாளிகளாக இருந்து அமைச்சுப் பதவிகளை வகிக்க வேண்டும் என்பதற்காக ஏற்கமாட்டோம். எமக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகளை தர எமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சம்மதித்துள்ளார்.

அதற்கு எமது மக்கள் எங்களைப் பலமான முறையில் நாடாளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். அப்போதுதான் நாம் சிறப்பாகச் செயற்படவும் அரசுக்கு அழுத்தம் கொடுக்கவும் முடியும்.

**நேர்காணல் : தமிழரசன்**

**கேள்வி:** உதயன் ஊடாக என்ன கூற விரும்புகிறீர்கள்?

**பதில்:** 25 வருடங்களாக தமிழ் மக்களின் நன்மைக்காக உழைத்த உதயன் என்றும் நன்றி கூறப்பட வேண்டியவன். எம் மக்களுக்காக உதயன் பல தியாகங்களைச் செய்துள்ளான். தமிழ் மக்களும் பல துன்பங்களைச் சந்தித்து வருகின்றனர். மக்கள் பணிபுரியும் உதயனுக்கு தொடர்ந்தும் மக்கள் ஆதரவு வழங்க வேண்டும்.

கடந்த காலத்தில் நாம் விட்ட தவறால் இன்று எமது சமூகம் பல சிக்கல்களை எதிர் கொண்டுள்ளது.

இன்று பாரவூர்தி சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட 956 லொறிகள் உள்ளன. அவை ஏ- 9 வீதி மூடப்பட்ட காலத்தில் மக்களுக்குச் செய்த உதவிகள் அளப்பரியன. அவை கொழும்பு சென்று பொருள்களை ஏற்றிவரக்கூடிய தகுதி குறைந்தவை. ஆனால் அவற்றுக்கு மணல் ஏற்றும் அதிகாரம் வழங்கப்படாது தனி வர்த்தகர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள் ளது. இதனால் 9,500 ரூபாவுக்கு விற்கப் படவேண்டிய மண் 39,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. கடத்தல், கப்பம் கோரல் என்பவை அதிகரித்துள்ளன. இன்று சில வர்த்தகர்களும் தங்களுடைய சுயலாபங்களை விட்டு மக்களுக்குச் சேவையாற்ற முன்வரவேண்டும். வர்த்தகப் பெருமக்கள் இந்நிலைமைகள் குறித்து தெளிவாக விளங்கி எமக்கு ஆதரவு அளிக்க வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலரை நாட்டிலோ தொகுதியிலோ காண முடியவில்லை. அவர்களை மக்கள் தொடர்பு கொள்ளக் கூட வசதிகள் இல்லை. மக்களின் உழைப்பு உறிஞ்சப்படுகின்றது. எனவே இன்று அரசியலில் புதிய மாற்றம் தேவை.இன்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்களால் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.

எனவே புது முகங்களைத் தெரிவு செய்யுங்கள்.அவர்களின் நேர்மையை எடைபோட்டு நன்கு சிந்தித்து தங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும். ✱



கனடா வாழ் பச்சிலைப்பள்ளி மக்கள் பொது நல அமைப்பு
சேவைநலன் பாராட்டுவிழா
Canadian Pachchlaipali Community Association
மணிவிழா நாயகன் சின்னத்துரை இராமலிங்கம் JP, BA, Dip in Ed.

பல்வளம் நிறைந்த பளையூரில் பிறந்தவர்,
தன்நலம் கருதா உன்னத கல்விச் சேவையாளர்
திறனமகள் பல பக்குவமாய் பெற்றவர்
கல்வியில் யாவரும் போற்ற காவியம் படைத்தவர்
ஆசிரியராய், அதிபராய், கோட்டக்கல்வி அதிகாரியாய்,
மாணவர் உயர் எதிர்காலமே இலட்சியமாய் கொண்ட பெருந்தகை

1977 இல் கோட்டை கட்டிய குளத்தில் ஆசிரிய நியமனம் பெற்று,
1979 இல் கோப்பாய் ஆசிரியர்கலாசாலையில் பயிற்றப்பட்டு,
1982 இல் மாசார் தமிழ் வித்தியாலத்தில் ஆசிரிய பணியைத் தொடர்ந்து,
1993 இல் அதிபர் பதவியை ஏற்று சாதனையாளனாக மிளிர்ந்து,
1998 இல் வேம்பொடு கேணி தமிழ் வித்தியாலத்தில் அதிபர் பதவியை மேம்படுத்தி,
2003 இல் மக்களின் சேவையைப்பாராட்டி சமாதான நீதிவான் பட்டம் பெற்று,
2004 இல் பளை கோட்டக்கல்வி அதிகாரியாக பதவியுர்வு பெற்று,
2009 இல் யாழ் பெரியபுலம் மகாவித்தியாலத்தின் அதிபர் வரிசையில் இணைந்து,
பாடசாலையின் வளர்ச்சியிலும் மாணவர் உயர்ச்சியிலும் இமயமென உயர்ந்து நின்றார்.

பளையூர் இராம்

மணிவிழாக் காணும் இந்நாளில் அன்புமனையாள் அறிவுசால்
மகன்மார் குடும்பத்தினருடன் அவர்தம் ஓய்வுகாலம் இன்பமாய்
சிறப்பாய் பேரானந்த வாழ்வு வாழ்ந்திட வாழ்த்துகின்றோம்
வாழ்க வாழ்க மணிவிழா நாயகனே நீடூழி வாழ்க
கனடா வாழ் பச்சிலைப்பள்ளி மக்கள் பொது நல அமைப்பின் சார்பில்

கனடா



LG

Abans Vaasi Raashi Sale
UPTO 40% OFF

அபான்ஸ் ஆதரவில்
உங்கள் புதுவருடத்தை
அமோகமாகக் கொண்டாடுங்கள்



இது ஒரு புரட்சி
Green ion
தொழில்நுட்பத்தில்
ஆரோக்கியத்தைப் பாதுகாத்து-
மின்சாரத்தைச்
சேமிக்கின்றது.

புதிய

உயர் புதுமைகொண்ட
கிறீன் இயோன் டோர் கூலிங் தொழில்நுட்ப மானது LG குளிர்சாதனத்தைக் குளிரூட்டும் செயற்பாட்டில் ஓர் இணையற்ற உயர் மட்டத்துக்குக் கொண்டு செல்கின்றது. ஒரு "கொட்டசின் டியடோ ரைஸர்" மூலம் வெளியிடப்படுகின்ற கிறீன் இயோன்ஸ் கிருமிகளை அழிக்கின்றது. துர்நாற்றத்தை நீக்குகிறது. உணவு பழுதடையும் செயற்பாட்டை 2½ மடங்கு தாமதமடையச் செய்கின்றது.

டோர் கூலிங், குளிரடையச் செய்வதை விரைவுபடுத்தி கொம்ப்ரேஸர் கருவியை வேகமாக நிறுத்தி விடுவதன் மூலம் மின்சாரத்தைப் பெருமளவு சேமிக்கின்றது.

மாதாந்தத் தவணைக் கொடுப்பனவு
ரூ.4,181/=

Caring for your
health in every way

Pay your phone bills, credit card bills and even reload your mobile phone at any Abans Showroom, Abans Elite Showrooms, JVC/Haier Showrooms and A-Z Electronics Showrooms islandwide.

Abans



SLIM
Sri Lanka Institute of Marketing



THE MOST
RECOGNISED
MARKETING CERTFICATE
IN THE ISLAND

When you walk into an interview, you need to make an impact. And what your qualification is makes a big difference. Brought to you by The National body for Marketing, The Sri Lanka Institute of Marketing - "The Preliminary Certificate in Marketing" (PCM) delivers a thorough foundation for students and working executives taking their first steps into marketing careers.

Duration : 40 Hrs of sessions over a 3 Month Period

PCM 3 Months ▶ PG DipM (SL) 18 Months + Dissertation ▶ MBA Buckinghamshire New University (UK)

புதிய பிரிவு ஆரம்பம் : 25-04-2010
பரீட்சை : September 2010
தகைமை : க.பொ.த உயர்தரம்

மேலதிக விபரங்களுக்கு:-0214900900

IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 021 222 8060 Fax: 021 222 6933 Web: www.iis.edu.lk



பாராட்டி வாழ்த்துகின்றோம்



தங்கவேலாயுதம்
பிருந்தாகரன்
அவர்கள்
யாழ்.பல்கலைக்கழகத்தில்
27.03.2010 ஆம் திகதி
வியாபார தொழில்
நிர்வாகமாணி (B.B.A.) பட்டம்
பெறுவதையிட்டு
மனமகிழ்ச்சியுடன் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

பா.ஜெயபாலன்
மேனகா குடும்பத்தினர்.
சங்கானை. (96176)



யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியம்
JAFFNA CHRISTIAN UNION

தந்தை சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை
செல்வநாயகம் பிறந்தநாள் நினைவு வழிபாடு
S.J.V. Chelvanayagam Birthday Memorial Service

தந்தை செல்வாவின் வாழ்க்கைக்கும் சேவைக்கும் இறைவனுக்கு நன்றி செலுத்தும் வழிபாடு அவரது பிறந்தநாளாகிய 31.03.2010 (புதன்கிழமை) மாலை 5 மணிக்கு சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஸ்நானகன் ஆலயத்தில் நடைபெறும்.

அருளுரை: பேரருட் கலாநிதி ட.எஸ்.தியாகராஜா
பேராயர், தென்னிந்தியத் திருச்சபை - யாழ்.பேராயம்
தலைவர், தேசிய கிறிஸ்தவ சங்கம்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம்.



மாபெரும் மலிவு விற்பனை

தரமான மாபிள்கள், குளியலறைச் சாதனங்கள், பிளாஸ்ரிக் கதவுகள் போன்றவற்றை 40% இற்கும் மேற்பட்ட விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ள இன்றே விரையுங்கள். இச்சலுகை 01.04.2010 தொடக்கம் 10.04.2010 வரை மட்டுமே.

TPS சர்வதேச தனியார் நிறுவனம்
481, காலி வீதி,
மொறட்டுவ.

TPS சர்வதேச தனியார் நிறுவனம்
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(பஸ் நிலையம் முன்பாக)
T.P: 0777578277, 0775702253.
(96182)

### தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த்தேசியத்துக்கான மக்கள் முன்னணி ஆகிய

# இரு தமிழ்க் கட்சிகளின் வேட்பாளர்களுடன் யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியத்தினர் சந்திப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப்பிரதி நிதிகளுக்கும் தமிழ்த்தேசி யக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த்தே சியத்துக் கான மக்கள் முன்னணி (தமிழ்க் காங்கிரஸ்) யாழ். மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளர்களுக்கு இடையிலான தனித்தனியான சந்திப்புக்கள் நேற்றுமுன்தினம் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் நடைபெற்றன.

கூட்டமைப்பின் வேட்பாளர்களை முற்பகல் 10 மணிக்கும் த.தே.ம.முன்னணியின் வேட்பாளர்களை பிற்பகல் ஒரு மணிக்கும் மாணவர் ஒன்றியத்தினர் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது பிரஸ்தாப இரு கட்சிகளினதும் தேர்தல் தொடர்பான நிலைப் பாடுகளும் நாடாளுமன்ற தேர்தலின் பின்னர் அவை முன்னெடுக்கவிருக்கும் செயற்றிட்டங்கள் பற்றியும் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள சந்தேகங்கள் கேள்விகள் குறித்து மாணவர் ஒன்றியத்தினர் வினவினர்.

கூட்டமைப்பு வேட்பாளர்களுடன்.....




இந்த சந்திப்பில் ஆராயப்பட்ட விடயங்கள் தொடர்பாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலானது தமிழ் மக்களின் தலை விதியை தீர்மானிக்கப் போகும் தேர்தலாகவும் அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு தமிழ் மக்களின் வாழ்வியல் விதியை நிர்ணயிக்கப் போகின்றவர்களை தீர்மானிப்பதாகவும் உள்ளதால் அங்கு பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. அவை நடுநிலையுடன் இங்கு தரப்படுகின்றன.

✱ பொருளாதார, வாழ்வாதார, அபிவிருத்தி தொடர்பாக இரு தரப்பினரும் ஒருமித்த நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர். அதாவது அரச துறையில் மட்டும் தங்கியிராது தனியார் துறையின் விரிவாக்கம் மூலம் பொருளாதார அபிவிருத்தியையும் மக்களின் அன்றாட வாழ்வாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பது என்பதிலும் இரு தரப்பும் ஒருமித்துள்ளனர்.

✱ அரசியல் கொள்கை நிலையில் இரு தரப்புக்களும் வேறுபட்ட நிலையில் கருத் துக்களை கொண்டுள்ளன.

இறைமையுள்ள இலங்கை அரசு என்பதையோ, ஒற்றையாட்சி என்பதையோ ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூறும் த.மே.த. முன்னணி ஒரு நாட்டில் இரு வேறுபட்ட அடையாளங்களைக் கொண்ட இனங்களின் இரு தேசம் என்பது - அங்கீகரிக்கப்பட்டு தமிழர்கள் இலங்கை அரசுடன் சம தரப்பு என்ற நிலையில் அரசியல் கருத்தாடல் செய்யவேண்டும் என்கின்றது. மேலும் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக எதிர்க்கிறது.

✱தமிழ் தேசியக் கூட்டமைப்பும் பதின்மூன்றாவது சீர்திருத்தச் சட்டம் ஒற்றையாட்சி என்பதை எதிர்பார்ப்பதாகவே கூறும் அதேவேளை, ஒரு நாடு இரு தேசம் என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் ஆனால் இரு தேசிய இனங்களைக் கொண்ட ஒரு நாடு என்பதை வலியுறுத்துவதாகவும் கூறுகின்றது.

✱இரு தேசம் ஒரு நாடு என்பதில் தேசம் என்பதற்கே சட்டத்தில் இடம் உண்டு என்றும், தேசத்திற்கே இறைமை உள்ளதாகவும் தேசிய இனம் என்பதற்கு இறைமை இல்லை எனவும், நிலப்பிர தேச ங்களுடன் கூடிய தேசம் என்ற நிலைக்கு தேசிய இனம்வரும் போதே இறைமை கிடைக்கும் என்றும் த.தே.ம. முன்னணி கூறுகின்றது.

✱கூட்டமைப்பின் வேட்பாளர்களின் தெரிவு தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு, அவர்கள் எதிர்வரும் காலங்களில் தவறாக செயற்படமாட்டார்கள் எனவும் அவ்வாறு கட்சியை மீறாமல் இருக்க சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளபட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. இதை த.தே.ம. முன்னணியிடம் கேட்ட போது தமது உறு பினர்கள் கொள்கைக்காக எதையும் தியாகம் செய்வார்கள் என்று கூறினர்.

✱ மக்கள் நலனின் உடனடி அபிவிருத்தி தொடர்பாக த.தே.ம. முன்னணியின் முதன்மை வேட்பாளர் தனது பிரத்தியேக அறிக்கையில் பொருளாதார எண்ணக்கருக்களுடன் வள ஒதுக்கீடு, வளக் கையாடல் தொடர்பாகத் தெரிவித்துள்ளார்.

✱இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரிப்பதாகவும், இருப்பினும் அது முழுமையான அரசியல் தீர்வுக்கு போதாது எனவும் தெரிவித்தது. அதேவேளை, அந்த ஒப்பந்தத்தை தான் ஏற்கவில்லை எனவும் ஒப்பந்தத்தில் உள்ள வடக்கு - கிழக்கு இணைப்பை மட்டுமே தாம் ஆதரிப்பதாகவும் அந்த ஒப்பந்தத்தின் பின் இணைப்பு இந்திய அரசின் பிராந்திய ஆதிக்கம் மற்றும் பொருளாதார நலனுக்கே முன்னுரிமை கொடுப்பதாகவும் தமிழ்தேசியத்துக்கான மக்கள் முன்னணி கருத்துத் தெரிவித்தது -என்று (ஒ-10)

த.தே.ம. முன்னணி வேட்பாளர்களுடன்.....




# நளினியை விடுவிக்க முடியாதமை ஏன்? தமிழக அரசு உத்தரவில் விளக்கமளிப்பு

நளினியை முன்கூட்டியே விடுதலை செய்ய மறுப்பதற்கான காரணங்கள் பற்றி தமிழக அரசின் உத்தரவில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு நேற்று முன்தினம் தாக்கல் செய்த அரசாணையின் முழு விவரம் வருமாறு -

நளினியை விடுதலை செய்வது தொடர்பாக சிறை ஆலோசனைக் குழு வேலூர் சிறையில் ஜனவரி 20 ஆம் திகதி கூடி பரிசீலித்தது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் 18 பேர் கொலையுண்ட சம்பவத்தில், கொலையாளிகளுடன் நளினியும் இணைந்து சதியில் ஈடுபட்டுள்ளார்.

ராஜீவ் கொலை தொடர்பாக அவருக்கு முன்கூட்டியே தெரிந்திருந்தும், கொலையாளிகளுடன் முழுமையாக ஒத்துழைத்துள்ளார். இதன் மூலம் அவர் கொடூரமான குற்றத்தைப் புரிந்துள்ளார்.

சிறையில் அவர் பட்ட மேற்படிப்பும், பட்டயப் படிப்பும் பெற்றுள்ளார். இதன் மூலம் அவரது மனப்போக்கு மாறியுள்ளதாகக் கருத முடியாது. இதுவரை அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. தனது செயல்களுக்காக வருத்தமும் தெரிவிக்க வில்லை.

சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டால், அவரை தன்னுடைய பாதுகாப்பில் வைத்துக்கொள்வதாக நளினியின் தாயார் உத்தரவாதம் அளித்துள்ளார். ஆனால், இது தொடர்பான வழக்கில் நளினியின் தாயா ரும், சகோதரரும் கூட சிறையில் அடைக் கப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நளினியின் தாயார் சென்னையிலுள்ள ராயப்பேட்டையில் வசிக்கிறார். நளினி விடுதலை செய்யப்பட்டால் அவரது தாயாருடன் அந்தப் பகுதியிலேயே வசிப்பார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. அந்தப் பகுதி அதி முக்கியப் பிரமுகர்கள் மற்றும் முக்கியப் பிர முகர்கள் வசிக்கும் பகுதி. அமெரிக்கத் தூதரகமும் அருகிலேயே உள்ளது.



விடுதலைக்குப் பிறகு நளினி இந்தப் பகுதி யில் தனது தாயாரு டன் வசித்தால் அங்கு சட்டம் - ஒழுங் குப் பிரச்சினை ஏற்படும் என்று ராயப் பேட்டை பொலிஸ் இன்ஸ்பெக்டர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஒரு குழந்தைக்கு தாயாக உள்ளதால் தம்மை விடுவிக்க வேண்டும் என்ற மனுதாரரின் கோரிக்கையை ஏற்க முடியாது.

அவர் இந்திய தேசத்துக்கு எதிரான குற்றத்தைச் செய்துள்ளார். எனவே, 18 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்துள்ளதால் தம்மை விடுவிக்குமாறு அவர் கோருவதையும் ஏற்க முடியாது.

குற்றச் சூழல், குற்றத்தின் தன்மை ஆகியவற்றைப் பார்க்கும்போது, முன்கூட்டியே விடுதலை செய்யுமாறு பரிந்துரைக்க இது சரியான வழக்கல்ல என்று ஆய்வுக் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஏன் விடுதலை இல்லை? சிறை ஆலோசனைக் குழுவின் பரிந்துரையை தமிழக அரசு கவனமாகப் பரிசீலித்தது. நளினியை முன் கூட்டியே விடுதலை செய்வதாலும், ராயப்பேட்டை பகுதியில் அவர் வசிப்பதாலும் சட்டம் - ஒழுங்குப் பிரச்சினை ஏற்படாது என்று நளினியின் உறவினர்கள் தெரி வித்துள்ளனர். அதனடிப்படையிலேயே அவரை விடுதலை செய்ய நன்னடத்தை அதிகாரி பரிந்துரைத்துள்ளார்.

ஆனால், சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலைய ஆய்வாளர் சட்டம் - ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும் என்று அறிக்கை சமர்ப்பித்துள்ளார். மண்டல நன்னடத்தை அதிகாரி இந்த இரு அறிக்கைகளையும் ஆராய்ந்து முன்கூட்டியே விடுதலைக்குப் பரிந்துரைக்க இது சரியான வழக்கு இல்லை என்று கூறி யுள்ளார்.

இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு நளினியை முன்கூட்டியே விடு தலை செய்யக் கூடாது என்ற ஆலோ சனைக் குழுவின் பரிந்துரை ஏற்கப்ப டுகிறது. நளினியின் மனுவை நிராகரிக் கவும் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது - என்றுள்ளது.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 13 - 03 - 1958



ஆண்டவன் அடியில் 28 - 02 - 2010

### திருமதி சந்திரகாந்தன் தவமணிதேவி

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று( 31.03.2010) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.


# ஈழத் தமிழர் தமிழகத்திற்கு கடல்வழியாக வரக்கூடாது

### கரையோரக் காவல்படை அறிவிப்பு

சென்னை, மார்ச் 31

ஈழத்தமிழ் மக்கள் கடல்வழியாக தமிழகத்திற்கு அகதிகளாக வரக்கூடாது என்றும், அத்துமீறி வருபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் தமிழகக் கரையோர காவல்படையினர் அறிவித்துள்ளார்கள்.

கடந்த காலங்களில் இலங்கை இராணுவத்தினரின் அச்சுறுத்தல் காரணமாக கடல் வழியாக இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட ஈழத் தமிழ் மக்கள் அகதிகளாக தமிழகம் வந்துள்ளார்கள்.

இதேவேளை, தற்போதும் இலங்கை இராணுவத்தினரின் தாக்குதல் காரணமாகவும், அச்சம் காரணமாகவும் தொடர்ந்தும் ஈழத்தில் இருந்து தமிழ்மக்கள் தமிழகத்திற்கு வருகை தருகின்றார்கள்.

இந்நிலையில் ஈழத்தில் போர் முடிவடைந்துள்ளது எனவும், இனிமேல் அங்கிருந்து தமிழர்கள் எவரும் கடல்வழியாக தமிழகத்திற்கு வரக்கூடாது என்றும் தமிழக கரையோர காவல்படையினர் அறிவித்துள்ளார்கள்.

அத்துமீறி வருபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று தமிழகக் கரையோரக் காவல்படை அதிகாரி அறிவித்துள்ளார்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 - 09 - 1926



உதிர்வு 31 - 03 - 2009

### அமரர் சொபஸ்ரி ஆசீர்வாதம்

அன்பாலும் பண்பாலும் எம் எல்லோரையும்
அரவணைத்த எம் அன்புத் தெய்வமே!
மீளாத்துயில் கொண்டு ஓராண்டு கடந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்முடன் வாழும்.

*எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

21, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### முத்தையா சிவசுப்பிரமணியம் (பௌன்றி மணியம்)



சட்டநாதர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட முத்தையா சிவசுப்பிரமணியம் (பௌன்றி மணியம்) நேற்று (30.03.2010) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*74/1, சட்டநாதர் றோட்,*
*நல்லூர்.*

தகவல்:
குடும்பத்தினர்.

# நாடாளுமன்ற பொதுத் தேர்தல் - 2010 யாழ்.மாவட்டம்

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு
## இலங்கை தமிழரசுக் கட்சி






எங்கள் குரல்களையும்
ஆதாரமான வாக்குகளையும்
நிரந்தரமான உரிமைகளையும்
போராடிய வாழ்வையும்
இழக்கமுடியாத பூர்வீக தாயகத்தையும்
எங்களுடையவை என்பதை
எங்களது வாக்குகளால் நிரூபிப்போம்!



## சிவஞானம் சிறீதரன்

அதிபர், கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம் (கனிஸ்ரா)

**எமது உரிமைக்காக குரல் கொடுப்போம்**

(56091)


# மரண அறிவித்தல்

## நன்னியன் செல்லையா



(சண்டிலிப்பாய் எரிபொருள் வழங்கும் நிலைய உரிமையாளர் - உதயகுமாரின் தந்தை)

சண்டிலிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நன்னியன் செல்லையா 29.03.2010 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னியன் பார்வதி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், விஜயசந்திரிகா, சந்திரவதனி (ஜேர்மனி), உதயகுமார் (நியூசிலாந்து), ஜெயவதனி (நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவீந்திரன், ஜெயக்குமார் (ஜேர்மனி), தர்சினி (நியூசிலாந்து), அன்ரன் (நியூசிலாந்து) ஆகியோரின் மாமனாரும், கேன்சிகா, விதுஷா, அர்ச்சனா (ஜேர்மனி), அபிநயா (ஜேர்மனி), உதர்மிஷா (நியூசிலாந்து), துலக்ஷா (நியூசிலாந்து), ஜெயவதனி (நியூசிலாந்து), ரொஜெஸ் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2010) புதன்கிழமை பி.ப. 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7 ஆம் கட்டை,
சண்டிலிப்பாய்.

(96183)

தகவல்:
மனைவி
இராஜேஸ்வரி

உரும்பிராயில் உதித்து பிரான்ஸ் நாட்டில் இறைவனடி சேர்ந்த

# திருமதி சோதிராணி சதானந்தராஜ்
## அவர்கள் நினைவில் ஓர் ஆண்டில்

மலர்வு
16
★
05
★
1954



உதிர்வு
11
★
04
★
2009

## திருமதி சோதிராணி சதானந்தராஜ்

மண்ணில் பிறந்த பெரும் பயன் அனைத்தும் மாண்புறப் பெற்று மகிழ்ந்திருந்து
மாசறுவிண்ணின் விளக்காய் சென்றின்று ஓராண்டு கண்ணின் ஒளியே
ஆண்டு ஒன்று அகன்று போனதே அழுகை இன்னும் மாறவில்லையே!
என்றும் எங்கள்நெஞ்சில் நீங்காது வாழ்கின்றீர்களே
நித்தமும் நிஜமாய் என் அருகில் உலவிவந்த என்னருமை துணைவியே!
மணவறையில் கைப்பிடித்த நாள் முதல் வாழ்விலும், தாழ்விலும்,
இன்பத்திலும் துன்பத்திலும் இணைபிரியாது வாழ்ந்தோம்.
என் மீது அன்பைச் சொரிந்தீர்கள், பிள்ளைகள் மீது பாசத்தை வளர்த்தீர்கள்.
ஏன் எம்மைவிட்டு சென்றீர்கள் தீராத கவலையுடன் வாழ்கிறோம்.
சொந்த இனம் சுற்றம் குடும்பம் எல்லோரையும் விட்டு எங்கு சென்றீர்கள்.
உங்கள் உடலின் வேதனை இனியும் தாங்க முடியாதென்று எண்ணித் தரணியில்
வாழ்வினைப் போதுமென்று எங்கு சென்றீர்கள் ?
நாம் எல்லோரும் கதறுகின்றோம்.
அன்புத் தெய்வமே நாம் உங்களை இனி காணமுடியாதா ?
அன்பான அம்மாவே எம் அருமைத்தெய்வமே அம்மா எங்களை பரிதவிக்கவிட்டு
இறையடி சேர்ந்தீர்களே,
நாம் கதறுகின்றோம் உங்களுக்குக் கேட்கவில்லையோ ?
சோதிராணி என்றும் சோதிவடிவில் தேற்றிடம்மா வைரவப் பெருமாள்
வரமருள்வார் வானிருந் தெம்மை வழிகாட்டும் - எம் நினை வெல்லாம் நின்
நிழலுருவாய் நீக்கமற விருந்தருள்வீரம்மா.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

tel : 00 33 1 46 77 56 42
00 33 6 13 89 88 38
Villejuif (FRANCE)

(565872)

தகவல்:,
கணவன் சதானந்தராஜ் (சதா),
பிள்ளைகள் ஜிந்துயா, ஆதவன்
பேரன் லூக்கா
உற்றார், உறவினர்.

# மணிவிழா சிறப்புமலர் - 31.03.2010

## உயர்திரு. சின்னத்துரை இராமலிங்கம் B.A. Dip. in Edu., J.P.

### அருளாசிச் செய்தி



அன்புள்ள பெருந்தகையீர்!

யாழ்ப்பாணம் பெரிய புலம் மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றும் இராமலிங்கம் அவர்கள் இன்று மணி விழா காண்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். கல்விப் பணியை நீண்ட காலமாக பணியாற்றி இன்று யா/பெரியபுலம் மகா விததியாலயத்தின் அதிபராக பணியாற்றி பாடசாலையின் வளர்ச்சிக்கும் மாணவரின் ஒழுக்கத்திற்கும் செயற்பட்டமை எல்லோருக்கும் மகிழ்ச்சியைத்தந்தது. எல்லாருடனும் இனிமையாக பழகுவதும் எடுத்தவிடயுத்தை செவ்வனை ஆற்றும் திறனும் கொண்டவர் இராமலிங்கம். இவர் இப்பதவியில் இருந்து ஓய்வு பெற்றாலும் சமுதாயப் பணியிலும் சமயப்பணியிலும் தன்னை ஈடுபடுத்தி அனைவருக்கும் வழிகாட்டியாக வாழ இறைவனை பிரார்த்திதிக்கின்றோம். இவருடைய பணிகளை வாழ்த்தி பராட்டும் நலன்புரிச் சங்க அனைத்து அன்புள்ளங்களையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.

*'என்றும் வேண்டும் இன்ப அன்பு'*

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள்



### வாழ்வு வளம்பெற வாழ்த்துகின்றேன்.



அகவை 60இல் அகமகிழ்ந்து பிரியாவிடை பெறும் எமது முதல்வரை வாழ்த்துவதில் மகிழ்ச்சிடைகின் றேன். ஒரு சில ஆண்டுகள் கல்லூரிப் பொறுப்பை ஏற்று சிறப்புடனே பௌதீக வளப் பெருக்கத்திலும், கல்வி அபிவிருத்தியிலும் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றவர். மனையியல் கூடம், சைக்களில் தரிப்பிடம், கணனிக் கூடம், சமையல் கூடம், வகுப்பறைத் தொகுதி, சரஸ்வதி சிலைஎன வளப் பெருக்கத்தினை தந்தவர். ஓய்வுக் காலம் சிறப் புறவும் சமய சமூகப்பணிகளில் மிளிரவும் உற்ற நட்பால் 'வாயே சீ வாழ்த்துக் கண்டாய்' என்ற நாவுக்கரசரின் அடிகளுடன் விழா சிறப்புறவும் வாழ்வு வளம்பெறவும் வாழ்த்துவதில் மகிழ்வடை கின்றேன்.

சின்னத்தம்பி பத்மராசா J.P. B.A.
PG. Dip. in Edu. M.Phil, தலைவர்,
ஆசிரியர் உத்தியோகத்தர், நலன்புரிச் சங்கம்

### சேவை விவரம்

முகவரி: புலோப்பளை வீதி, பளை.
முதல் நியமனத்திகதி: 16.05.1977
முதல் நியமனக்கடித இலக்கமும் திதியும்: யா/ஈரிஏ/521 - 16.05.1977
ஆசிரிய இலக்கம்: 27/723942

| கடமையாற்றிய பாடசாலைகள் | மாவட்டம் | தொடக்கம் | வரை |
|---|---|---|---|
| மு/கோட்டைகட்டியகுளம் அ.த.க.பாடசாலை | முல்லைத்தீவு | 16.05.1977 | 14.02.1979 |
| யா/கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை | யாழ்ப்பாணம் | 15.02.1979 | 31.12.1981 |
| கிளி/மாசார் அ.த.க.பாடசாலை | கிளிநொச்சி | 01.01.1982 | 31.03.1983 |
| கிளி/இயக்கச்சி அ.த.க.பாடசாலை | கிளிநொச்சி | 01.04.1983 | 31.05.1989 |
| | அதிபர் சேவை | | |
| கிளி/இயக்கச்சி அ.த.க.பாடசாலை | கிளிநொச்சி | 01.06.1989 | 31.12.1997 |
| கிளி/வேம்போடுகேணி சி.சி.த.க. பாடசாலை | கிளிநொச்சி | 01.01.1998 | 10.08.2004 |
| பளை கோட்டக்கல்வி அதிகாரி | கிளிநொச்சி | 11.08.2004 | 23.07.2007 |
| யா/பெரியபுலம் ம.வி | யாழ்ப்பாணம் | 24.07.2007 | 22.04.2010 |

### வாழ்த்துச் செய்தி



திருவாளர் சி.இராமலிங்கம் அவர்கள் பளைக்கோட்டக் கல்வி அதிகாரியாக இருந்து யா/பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் அதிபராக பொறுப்பேற்றார். பாடசாலையில் பௌதீக, மனித,கல்வி வளங்களை மிகச் சிறப்பாக வளர்த்தெடுத்து பாடசாலைச் சமூகத்தினதும் கல்வித்திணைக்களத்தினதும் பாராட்டுக்களைப் பெற்றக்கொண்டார்.

இவரது மணிவிழா நாளில் இவர்தம் ஓய்வுக் காலம் சிறக்கவும் இவரது மக்கள் சேவை உயரவும் வாழ்த்துகின்றேன்.

வி.ரி.செல்வரட்ணம்
மேலதிக கல்விப் பணிப்பாளர், யாழ்.வலயம்.

### பல்வளமும் பல நலமும் பெற்று பல்லாண்டு வாழ்க



பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் பெருமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய சின்னத்துரை இராமலிங்கம் அவர்கள் 31.03. 2010 ஆம்திகதி தமது ஆறுபதாவது அகவையை பூர்த்தி செய்த நிலையில் ஓய்வு பெறுவது குறித்து வெளியிடப்படும்மலருக்கு நல்வாழ்த்து செய்தியோன்றை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

பளையில் கோட்டக்கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய இவர் அதற்கு முன் பல கல்லூரிகளின் ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றிய போதிலும் பெரியபுலம் மகாவித்தியாலயததின் முன்னேற்றத்துக்கு மிகக் குறுகிய காலத்தில் அதாவது அதிபராக கடமையாற்றிய இரண்டாண்டு காலத்தில் இவர் செய்த சேவைகள் மறப்பதற்கரியன. இன்று மணிவிழாக் கண்டு ஓய்வு பெறும் அதிபரை மனதார வாழ்துகின்றேன்.

திருமதி யோ.பற்குணராஜா
மாநகர முதல்வர், யாழ்ப்பாணம்.

### மற்றவர் மகிழ்வில் தான் மகிழும் மாமனிதர் மணிவிழா நாயகன்



யா/பெரியபுலம் மகாவித்தியாலய அதிபர் சி.இராலிங்கம் பளைக்கோட்டக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய யாழ். பெரியபுலம் மகாவிததியாலயத்துக்கு 24.07. 2007இல் கடமை ஏற்றார். ஏழை மாணவர்களையும் வாழ்வாதாரம் குறைந்த மாணவர்களையும் கண்டால் இயல்பாகவே இரக்கப்படுவார். இம் மாணவர்களை மேல்நிலைக்கு கொண்டுவருவதற்கு அரும்பாடுபட்டு வெற்றியும் கண்டார். பாட சாலையின் அனைத்து வளங்களையும் மிக குறுகிய காலத்தில் பெற்றோர், நலன்விரும்பிகள், வர்த்தகர்கள் போன்றோரின் உதவி பெற்று மற்றோர் அதிசயிக்கும் வகையில் செய்து காட்டினார். பல கல்விப் பணிப்பாளர்களுடன் கடமையாற்றி நன் மதிப்பைப் பெற்றவர். சேவையின் ஓய்வின் பின்னரும் கல்விப் பணிக்கே தன்னை அர்ப்பணிக்க இருக்கும் அதிபரை நீடூழி வாழ்க வாழ்த்துகின்றேன்.

திரு.வி.எஸ்.மாணிக்கராசா,
DEO நல்லூர்

### வாழ்த்துரை



அகவை அறுபதில் ஓய்வுபெறும் யா/பெரியபுலம் மகாவித்தியாலய அதிபர் மதிப்புக்குரிய சி.இராமலிங்கம் அவர்கள் தனது சேவையின் மகிமையால் ஆசிரியர், அதிபர், கோட்டக்கல்வி அதிகாரி எனப் பதவி நிலையில் உயர் நிலை கண்டவர். இவர் முன்னர் பளைப் பிரதேசத்தில் பணியாற்றிய காலப் பகுதியில் கல்வி வளர்ச்சிக்காகவும் சமூக மேம்பாட்டுக்காகவும் பல கருமங்களை ஆற்றியமை பற்றி நான் அறிவேன். பின்னர் மாற்றலாகி தற்போதைய பாடசாலையில் அதிபராகக் பொறுப்பேற்ற காலப்பகுதியில் சில இடர்பாடுகளை எதிர்கொண்ட போதிலும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளையும் தனது மேற்பார்வையுடனும் வினைத்திறனுடன் முன்னெடுத் தமை குறிப்பிடத் தக்கது.

மகிழ்ச்சிகரமான ஆரோக்கியமான வாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

திரு.த.இராசலிங்கம்
பிரதிக்கல்விப்பணிப்பாளர்.

### அருஞ்சேவைக்கோர் பெருந்தகை



யா/பெரியபுலம் மகாவித்தியாலய அதிபராகக் கடமை யாற்றி இன்று அகவை அறுபதை அடைந்து மணிவிழாக் காணும் உயர் சின்னத்துரை இராமலிங்கம் அவர்களின் அர்ப்பணிப்பான சேவையை நயந்து பாராட்டுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். நிதானம் அவரது அணிகலம். சிந்தித்துச் செயலாற்றுவதில் வல்லவர். இவர் தலைமைத்துவமும் ஆளுமையும் மிக்க உன்னத கல்வியாளர்.

எடுத்த விடயத்தை செவ்வனே பரிபூரணமாக ஆற்றுகின்ற செயற்திறன் மிக்கவர். திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், செயற்படுத்தல் ஆகியவற்றை முறைப்படி நிறைவேற்றி முடிப்பதில் இவருக்கு நிகர் இவரே. பளைக் கோட்டக்கல்வி அதிகாரியாக கடமையாற்றிய காலத்தில் பெற்றுக்கொண்ட அனு பவங்களைச் சாதகமாக்கி பாடசாலையை திறம்பட நிர்வகித்தவர். கூடப்பணியாற்றியவர்களை அன்பான கண்டிப்புடன் அரவணைத்து அவரவர் தமது பணிகளை ஆற்ற வழி காட்டும் பாங்கு சிறப்பானது. இவர் தொடர்ந்தும் கல்விக்கான சேவையை தொடரவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

திருமதி அ.வேதநாயகம்
கல்விப்பணிப்பாளர்.

### சிறந்த நிர்வாகி

பளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளராக மிகவும் சிறப்பாகக் கடமை புரிந்து இடம்மாற்றம் பெற்று யா/ பெரியபுலம் மகாவித்தியாலய அதிபராகப் பொறுப் பேற்று இன்று மணிவிழாக் காணும் சி. இராமலிங்கம் அவர்களைப் பாராட்டுவதிலும் வாழ்த்துவதிலும் பெருமை கொள்கின்றேன். அதிபர் அவர்கள் பாடசாலையைப் பெறுப்பேற்று சிறிது காலத்துள் மாற்றங்கள் பல செய்து வளர்ச்சி அடைய வைத்துள்ளார். சேவைக் காலத்தில் அவரது அர்ப்பணிப்பான செயற்பாட்டால் பாடசாலை மிகப் பெரிய வளர்ச் சிக்கு உள்ளாகி சலக துறைகளிலும் உன்னத நிலையை அடைய வைத்த உதாரண புருஷராக மிளிர்த்தவர் சி.இராமலிங்கம் அதிபர் அவர்கள். இன்னும் சில காலம் அவரது சேவை தொடர்ந்திருந்தால் மேலும் பல வளர்ச்சிகளை பெற்றிருக்கும் பெரியபுலம் மகாவித்தி யாலயம். ஒப்பற்ற சேவையாற்றி ஓய்வு பெறும் அதிபர் சகல சௌபாக் கியங்களையும் பெற்று வாழ வாழ்த்துகின்றேன்.

கே.வி.குணசேகரம்
ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப்பணிப்பாளர்.

### மணிவிழாக் காணும் மாண்பாளன்

இன்று மணிவிழாக் காணும் சின்னத்துரை இராமலிங்கம் அவர்கள் எமது பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலே பிறந்து வளர்ந்தவர். இப்பிரதேசத்தி லேயே கல்வி கற்று ஆசிரியராக, அதிபராக, கோட்டக் கல்வி அதிகாரியாக பணியாற்றியவர். தன்னுடைய சேவைக்காலத்தில் மாணவர்களின் கல்வி வளர்ச்சி யில் அதீத அக்கறையுடன் செயற்பட்டு அவர்களின் முன் னேற்றத்திற்காக உழைத்தவர்.

தான் சார்ந்த கல்விப்புலத்தோடு மட்டுமல்லாது எமது பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் சகல அபிவிருத்திப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்தி சமூக முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருபவர். தற்போதும் எமது பிரதேசத்தில் மீளக்குடியேற்ற நடவடிக்கைகளின் போதும் எம்முடன் உடன் இருந்து வழிகாட்டுவதோடு அல்லாமல் பாதிக்கப்பட்ட மக்கள் பலருக்கும் பல்வேறு வகைப்பட்ட உதவிகளையும் தனியொருவனாக முன்னின்று வழங்கிவருவ தனைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இத்தகைய உயர்பண்புகள் இயல்பாகவே அமையப்பெற்ற சின்னத்துரை இராமலிங்கம் அவர்கள் இன்று மணிவிழாக் கண்டு தன் அரச சேவையிலிருந்த ஓய்வு பெற்றாலும் பச்சிலைப் பள்ளி பிரதேசத்திற்கான அவரது மக்கள் சேவைகள்மேலும் பல்லாண்டுகள் தொடர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

த.முகுந்தன்
பிரதேச செயலர், பச்சிலைப்பள்ளி.

### வாழ்த்துச் செய்தி



யா/பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் அதிபர் ச.இராமங்கம் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன். கற்றுக்கொடுக்கும் உன்னதபணியாம் ஆசிரிய சேவையில் தொடங்கி பல்வேறு பாடசாலைகளில் ஆசிரியராக, அதிபராக, கோட்டக் கல்வி அதிகாரியாக பதவிகள் வகித்த சி. இராமலிங்கம் அவர்களை அவரது சொந்த ஊரான பளையில் நான் கடமையாற்றிய காலத்தில் இருந்து நன்கறிவேன்.

மலர்ச்சியான முகம், தெளிவான பேச்சு, எடுத்த காரியத்தை முடிக்கும் விடாமுயற்சி, சேவை மனப்பான்மை என்பன இராமலிங்கம் அவர்களிடத்தில் காணக்கூடிய அடையாளங்களாகும். தான் கற்பிக்கும் பாடசாலயின் வளர்ச்சி மட்டுமன்றி தனது ஊரிலுள்ள பாடசாலைகளின் முன்னேற்றத்திலும் இவர் அதீதமான அக்கறை கொண்டு செயற்படுவதனைக்காணலாம். அந்த வகையிலே 2007ஆம் ஆண்டு யா/பெரியபுலம் மகாவித்தியாலயத்திற்கு அதிபராகப் பொறுப்பேற்றது முதல் இவர் இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்கு ஆத்மார்த்தமாக தன்னை ஈடுபடுத்தி நேரம், காலம் பார்க்காது பணியாற்றி வந்துள்ளார். இவரது முயற்சியின் பயனாக இப்பாடசாலையில் பல கட்டடங்கள் தோற்றம் பெற்றுள்ளன. கணனி அறை போன்ற மாணாக்கருக்கு பயன்மிக்கவற்றை இவரது பெரு முயற்சியால் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

தமிழ் கல்விச் சமூகத்திற்கு பல்வேறு வழிகளில் உதவி வரும் சான்றோர்கள் மத்தியில் தமது அரச கடமையின் மூலமாக கல்விப் பணியாற்றி உதவி புரிபவர்களுள் இராமலிங்கமும் ஒருவர். இவ்வாறு தனது சேவைக்காலத்தில் அர்த்தமிக்க பணியாற்றிய இவருக்கு மணிவிழா எடுப்பது சாலச்சிறந்ததே. மணிவிழா நாயகன் தனது ஓய்வு காலத்தில் தன் குடும்பத்தாருடன் தனது கிராமத்திற்கும் சேவையாற்றி எல்லாச் சிறப்பும் பெற்று நீடூழி காலம் வாழ எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்பத்தில் மட்டற்ற மகிழ்வடைவதோடு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பா.செந்தில்நந்தனன், பிரதேச செயலர், நல்லூர்.

### அர்ப்பணிப்பான சேவையாளர்



சமூக மேம்பாட்டிற்காக சமூகத்தின் மத்தியில் தொழிற்படுகின்ற உயிர்ப்புடைய நிறுவனங்களாகப் பாடசாலைகள் மிளிர்கின்றன. சிறந்த கல்விப் புலத்தில் மலர்ந்து மாணவர் பரம்பரையை நெறிப்படுத்தி ஆசிரியப் பணியை அப்பழுக்கில்லாது நிலவ வைத்தவர்.

உலகில் பிறக்கும் ஓர் மனிதன் தனது சமூகத்திற்கு வழங்கும் சேவையைப் பொறுத்தே வரலாற்றில் பதிக்கப்படுகின்றான். உயர் திரு சின்னத்துரை இராமலிங்கம் அவர்கள் கல்விப் புலத்தில் ஆசிரியராக, அதிபராக, கோட்டக் கல்விப் பணிப்பாளராக பல முனைகளில் ஆழத் தடம் பதித்தவர். இறை பக்தியும் தலைமைத்துவ ஆளுமையும் கொண்ட உன்னத அதிபர். இடப்பெயர்வுகள், அனர்த்தங்கள் நிகழ்ந்த காலப்பகுதியில் பொறுமையுடனும் நிதானத்துடனும் கடமையாற்றி கல்வி இழப்புக்கள் ஏற்படாது கடமையாற்றியவர்களில் இவரும் ஒருவர்.

இவர் மிக அமைதியானவர். ஆனால் ஆழமானவர். ஆசிரியர்களை அன்பான கண்டிப்புடன் வழி நடத்திச் செல்பவர். கல்விப் புலம், சேவைப்புலம், ஆன்மீகம், மனிதநேயம் ஆகிய பன்முகப்பட்ட ஆளுமைப் பண்புகள் கொண்டவர். உறுதியான மனத்துடனும் தொலைநோக்குடனும் இவர் தனது பணிகளைக் கடந்து சென்றுள்ளார். சிறந்த அறிவும் ஆற்றலும் கொண்ட இவரது சேவையைப் போற்றுவதுடன் இவரது பணி சிறக்க பக்கத்துணை நின்ற குடும்பத்தினரும் பாராட்டுக்குரியவர்கள். இவரது ஓய்வுக்காலம் நோய் நொடியின்றி சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திருமதி ஜெயலக்ஷ்மி உதயகுமார். சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசியக் கல்வியற்கல்லூரி, யாழ்ப்பாணம்.

# மணிவிழா சிறப்புமலர் - 31.03.2010

## உயர்திரு-சின்னத்துரை இராமலிங்கம் B.A. Dip. in Edu., J.P.



### வாழ்த்துச் செய்தி

கோட்டக்கல்வி அதிகாரியாகவும் பாடசாலை முதல்வராகவும் கல்வித் துறைக்கு பெரிதும் பங்காற்றி தனது சேவையால் பெரிதும் உயர்ந்து நிற்கும் சி.இராமலிங்கம் அவர்கள் மணி விழாக் கண்டு அகவை 60தில் ஓய்வு பெறு வதை யிட்டு அவரது சிறப்பினை நயப்பதில் மகிழ்வடைகிறேன். கடமை உணர்வும் ஆளுமைப் பண்பும் துணிச்சலும் உடைய ஒரு முதல்வராக பணியாற்றி ஓய்வு பெறுகின்றார். அவரது ஓய்வுக்காலம் சிறப்புறவும் மணிவிழா சிறப்புறவும் உளமார வாழ்த்துகின்றேன்.

க.சிவகரன், உதவிச் செயலாளர்,
வடமாகாண கல்வி அமைச்சு, திருகோணமலை.

### பச்சிலைநகர் மைந்தன்
### திரு.சின்னத்துரை இராமலிங்கம்

பச்சிலைப்பள்ளி, புலோப்பளை என்னும் பிரதேசத்தில் பிறந்த சின்னத்துரை இராமலிங் கம் எனது பெருமதிப்பிற்குரிய ஆசிரியராவார். இவர் தனத 27ஆவது வயது முதல் 60வயது வரையான 33வருட காலம் கல்வித்துறைக்கு ஆற்றிய சேவை அளப்பரியவை. இவர் தனது சேவயில் கூடிய காலத்தை வறுமையான மாணவர்கள் கற்கும் வசதி குறைந்த பாடசாலைகளில் கல்வி கற்பித்து இப்பகுதியின் கல்வித்தரத்தை வளமாக்கி அறிவுசார் சமுதாயத்தை உருவாக்கிய கல்விமான். மாணவர்களின் நிலையறிந்து அதற்கேற்ற வகையில் இலகு வழி கற்பித்தல் நுட்பங்களைப் புகுத்தி அவர்களை உயர்வடைச் செய்த பெரு மையும் அவரையே சாரும். இதனால் இப் பிரதேச மாண வலர்களாலும் பெற்றோர்களாலும் பெரிதும் மதிக்கப்பட்டவர். இவரது மணிவிழா சிறக்க என் வாழ்த்துக்கள்.

திரு.க.தெய்வேந்திரம் (SLAS-1)
பிரதித்திட்டப் பணிப்பாளர் தெக்டொப்

### வாழ்த்துச்செய்தி

மணிவிழாக் காணும் பெரியபுலம் மகாவித்தியாலய அதிபர் சி.இராமலிங்கம் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். எவ் வகையான இடர்கள் வந்தாலும் எல்லாவற்றிற்கும் முகம் கொடுத்து சுமுகமான சூழலில் பாடசாலைச் செயற்பாடுகளை மிகச்சிறப்பாக செய்படுத்தியவர் என்றால் அது மிகையன்று. இவர் ஓய்வுக்காலத்திலும் எல்லாச்சிறப்புக்களும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

திரு.யோ.ரவீந்திரன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்.

### அர்ப்பணிப்புள்ள கல்வியியலாளர்



யாழ்ப்பாணம்பெரியபுலம் மகாவித்தியாலய அதிபர் சி.இராமலிங்கம் அவர்கள் தனது தன்நலமற்ற சேவையில் 60 வயதைப் பூர்த்தி செய்து மணிவிழாக் கண்டு ஓய்வு பெறும் எமது அதிபரின் மணிவிழாவும் சேவை நலன் பாராட்டு விழாவும் நடைபெறுவதையிட்டு வெளியிடப்படும்பணி நயப்பு மலரில் ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்ச் சியடைகின்றேன்.

இராமலிங்கம் அவர்கள் ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்வி அதிகாரியாக கடமையாற்றி கல்விச்சமூகத்தின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்ட மனிதநேயம் மிக்க அலுவலர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கல்விக்காக நேரம் பாராது கண்துஞ்சாது கருமமே கண்ணாக பணியாற்றியவர். யாவரிடையேயும் இன,மத வேறுபாடின்றி அர்ப்பணிப்புடன் சேவை புரிந்து கல்விச் சமூகத்தின் பெரு மதிப்பை பெற்றவர். அவர் பணியில் பதிவுகள் என்றும் எம் மனத்தில் நிலைத்திருக்கும். அவரது ஓய்வுக்காலம் சிறப்பாகவும் பயனுள்ளதாகவும் அமைய எனது நல்வாழ்த்துக்கள்.

வண.எஸ்.பி.நேசகுமார்
யாழ்.குருமுதல்வர், இலங்கை திருச்சபை.

### சேவை மனப்பான்மை கொண்ட செம்மல்



இன்று மணிவிழாக்காணும் எமது அதிபர் எமது பாடசாலைக்கு வாராது வந்த சொத்து. அர்ப்பணிப்பான சேவையால் பாடசாலைச் சமூகத்தினரின் அன்பையும் ஆதரவையும் பெற்றவர். பொறுப்பேற்ற ஒரு மாதத்திற்குள்ளேயே இங்கு கணனி வள நிலையம் உருவாக்கியவர். இரவது காலப்பகுதியில் கல்வித்தர மேம்பாடு மட்டுமன்றி பௌதிக ரீதியாகவும் பாடசாலை வளர்ச்சியுற்றது. சமூக சேவையின் செம்மல், தனது நண்பர்கள், உறவினர்கள் உதவியுடன் லட்ச ரூபா பெறுமதியான பாடசாலை மாணவர்களின் தேவைகளை பெற்றக்கொடுத்தார். சேவாலங்கா உதவியுடன் பல லட்சங்கள் பெறுமதியான கட்டடம் ஒன்றை உருவாக்கியவர். சிறுவர்களுக்கான பூங்காவையும் அமைத்து தன்னலம் கருதாது சேவையே பெரிதாகக் கருதும் மணிவிழா நாயகன் ஓய்வுக் காலத்திலும் சேவைகளிலும் ஈடுபட மனோபலத்தையும் சிறந்த வாழ்வை யும் இறைவன் அருள வேண்டுமென வேண்டி வாழ்த்துகின்றேன்.

திருமதி.இ.விஜயவாணி, செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.



### மாணிக்கம் தன்னைத் தேடி மனிதத்துள் கண்டுகொண்டேன்

சின்னத்துரை இராமலிக்கம் என்றோர்
சிறப்புறு பெயரைக் கொண்டீர்
பளை மத்திய கல்லூரி தன்னை
விளை நிலமாயக் கொண்டு கற்றீர்
நளைத்தோங்கும் உயர்படிப்பை
யாழ்.மத்திய கல்லூரியில் பெற்றீர்
பல்கலைக்கழகம் சென்று
பட்டங்கள் பலவும் பெற்றீர்
கல்விசார் துறைகளெல்லாம்
பல்வேறு பதவி கண்டீர்
எல்லையிலா ஆசிரியப் பணியும்
எம் மண்ணில் ஆற்றி நின்றீர்
அதிபராய்ப் பதவி தன்னில்
தரமொன்றைத் தாண்டி நின்றீர்
நிகரில்லாச் சேவையாலே
நிமிர்ந்ததோர் குன்றாய் நின்றீர்
திரைகடல் தாண்டி மக்கள்
திறமைகள் காக்க வைத்தீர்
ஆண்டுகள் முப்பத்திமூன்று
பூண்டதோர் சேவை செய்தீர்
நல்லதோர் சேவை செய்தீர்
நல்லதோர் நட்பை நாளும்
நம்மிடம் பகிர்ந்தே தந்தீர்
கூடவே பணிகள் செய்து
பெருமையும் எமக்கே சேர்த்தீர்
சமாதான நீதிவானெனும்
கௌரவப் பதவி கொண்டீர்
பெரியபுலம் மகா வித்தியாலயத்தில்
பெரும்பணி முடித்தும் கொண்டீர்
மணிவிழா அணிகளெல்லாம்
மாநிலம் ஆற்றக் கண்டீர்
மனிதருள் மாணிக்கம் என்பர்
அதை உம்முள்ளே இருக்கக் கண்டேன்
வாழி நின் சேவையெல்லாம்
வையகம் போற்றும் வாழி
ஆழி சூழ் உலகுள்ள வரைக்கும்
நின்புகழ் வளரும் வாழி

மணி விழாக் காணும்
நாயகனை மனமுவந்து வாழ்த்தும்
எஸ்.புத்திசிகாமணி,
பிரதேச செயலாளர்,
வலி.மேற்கு.



### கண்ணெனக் காத்த சொத்தே காசினிபோற்ற வாழ்க

எண்ணிய எண்ணியாங்கு ஏற்றிடு கல்விப் பணியால் புண்ணியம் கோடிபண்ணி புகழ் வளம் சிறக்கக் கண்டீர் விண்நிகர் கீர்த்தியோடு விளைந்திட்ட உயர்வினாலே தண்ணரும் பெரியப்புலத்தின் தகவுடைக் கோமானானீர் தன்னலமில்லா துழைத்துக் கல்வி தளைத்திட நல்லூர்க்கோட்டம் கண்ணெனக் காத்தசொத் தே காசினிபோற்ற வாழ்க.

வே.ஞானகாந்தன் அதிபர் சங்கத்தலைவர்.
(நல்லூர்க்கோட்டம்)


# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - TNA



அருந்தவபாலன் அவன் அப்படித்தான்
அன்றும் அவன் அப்படித்தான்
இன்றும் அவன் அப்படித்தான்
கொள்கையில் மலையவன்
குணத்தில் பெரியவன்
அறிவில் மேலவன்
ஆற்றலில் ஆதவன்
மனதில் எளியவன்
மானத்தில் உயிரவன்
துணிவில் முனியவன்
பணிவில் பனியவன்
கனிவில் இனியவன்
பரிவில் உறவினன்

சான்றளிப்போர்:
கூடிக்கற்ற தமிழ் உணர்வுமிக்க உறவுகள்

X

அளித்திடுவோம் நம் வாக்குகளைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின்
திரு.க.அருந்தவபாலன் அவர்களுக்கே!

இலங்கைத் தமிழரசுக் கட்சி

1 2 3 4 5 6 7 8 9 10 11 12

# இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்து போக்குவரத்துச் சபை ஊழியர் மரணம்

## படுகாயமடைந்த இருவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், மார்ச் 31

மோட்டார் சைக்கிள்கள் எதிரெதிரே மோதிக் கொண்டதில் ஒருவர் மரணமானார். மற்றும் இருவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் பருத்தித்துறை ஓராம் கட்டைக்கும் கிராமக்கோட்டுச் சந்திக்கும் இடையில் நடைபெற்றுள்ளது.

இந்த விபத்துச் சம்பவத்தில் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ ஊழியரான சந்திரவதனன் சாந்தகுமார் (32 வயது) பலியானார். குடும்பஸ்தரான இவர், கரவெட்டி வடக்கு, கல்வத்தையைச் சேர்ந்தவர்.

படுகாயமடைந்த ச. ராஜேந்திரதேசிகர் (வயது 21) பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார். இவர் பருத்தித்துறை பண்டாரி அம்மன் கோயிலடியைச் சேர்ந்தவர்.

காயமடைந்த அச்சுவேலி, தோப்பைச் சேர்ந்த கனகசுந்தரம் ரஜீவகுமார் (வயது 27) பருத்தித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் குறித்து பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஜோய் மகாதேவா பருத்தித்துறைப் பொலிஸாரின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின் பலியானவரின் உடலை மனைவியிடம் ஒப்படைக்குமாறு பணித்தார். (ஒ-10-236)

# மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, மார்ச் 31

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2223ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "Q" என்ற ஆங்கில எழுத்தும் 5/7/5/5/2/7 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் ஆங்கில எழுத்துடன் 5/7/5/5/2/7என்ற இலக்கங்களைக் கொண்ட சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. 5/7/5/5/2/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

7/5/5/2/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கும்.

5/5/2/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 126 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

5/2/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,244 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

2/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12,204 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கும்.

7 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,20,320 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

வலமிருந்து இடமான அமைப்பில் 5/7/5/5/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12 பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கும்.

5/7/5/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 124 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

5/7/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,206 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கும்.

5/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12,023 பேருக்கு பத்தாம் பரிசாக தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"Q" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 48,192 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஒ-10)

# இராமகிருஷ்ண மிசன் சுவாமி யாழ். வருகை

யாழ்ப்பாணம், மார்ச் 31

கொழும்பு, இராமகிருஷ்ண மிசனின் மூத்த துறவியான ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தர் இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றார்.

எதிர்வரும் சனிக்கிழமை வரை இங்கு தங்கி இருக்கம் சுவாமிகளை யாழ்.சிவ தொண்டன் நிலையத்திலும் தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியிலும் தரிசித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ளுமாறு சமித்தியினர் அறிவித்துள்ளர். (ஒ)



ஈழத்தமிழர்களின் விடி வெள்ளி தந்தை செல்வாவின் 112 ஆவது பிறந்த தினத்தில் அவரை நினைவு கூருவோம்.

# பென்னாகரத்தில் தி.மு.க. அமோக வெற்றி 2 ஆம் இடத்தைக் கைப்பற்றியது பா.ம.க.

## அ.தி.மு.க., தே.மு.திக. கட்டுப்பணம் இழப்பு

பென்னாகரம், மார்ச் 31

பென்னாகரம் இடைத்தேர்தலில் 36,426 வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.க. அமோக வெற்றி பெற்றுள்ளது. 41,243 வாக்குகளைப் பெற்று 2 ஆவது இடத்தை பா.ம.க. பிடித்துள்ளது.

பதிவான மொத்த வாக்குகளில் ஆறில் ஒரு பங்கு கிடைக்காத அ.தி.மு.கவும் தே.மு.தி.கவும் கட்டுப்பணத்தை இழந்தன.

பென்னாகரம் இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை நேற்று நடைபெற்றது. 18 ஆவது இறுதிச் சுற்று முடிவின்படி தி.மு.க. வேட்பாளர் இன்பசேகரன் 36,426 வாக்குகள் வித்தியாசத்தில் பெரு வெற்றியீட்டினார்.

இறுதிச் சுற்று விவரம் வருமாறு -

| | |
|---|---|
| இன்பசேகரன் (தி.மு.க.) | - 77,637 |
| தமிழ்க்குமரன் (பா.ம.க.) | - 41,243 |
| அன்பழகன் (அ.தி.மு.க.) | - 26,784 |
| காவேரிவர்மன் (தே.மு.தி.க.) | - 11,406 |

பென்னாகரம் தொகுதி இடைத்தேர்தல் 27 ஆம் திகதி நடந்தது. இன்பசேகரன் (தி.மு.க.), அன்பழகன் (அ.தி.மு.க.), தமிழ்க்குமரன் (பா.ம.க.), காவேரிவர்மன் (தே.மு.தி.க.) உட்பட 31 வேட்பாளர்கள் களத்தில் நின்றனர்.

இந்தத் தொகுதியின் மொத்த வாக்காளர் எண்ணிக்கை 2 லட்சத்து 8. இதில் ஒரு லட்சத்து 70 ஆயிரத்து 778 வாக்குகள் பதிவாகின. தொகுதி முழுவதும் 250 வாக்குச் சாவடிகளில் இந்த வாக்குகள் பதிவாகின.

வாக்குப்பதிவுக்கு பயன்படுத்தப்பட்ட மின்னணு இயந்திரங்கள், தருமபுரி அரச கலைக்கல்லூரியில் 3 அடுக்கு பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்தன. 500 இற்கும் அதிகமான பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. 100 இற்கும் மேற்பட்ட அலுவலர்கள் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட்டனர். ஒவ்வொரு சுற்றுக்கும் 14 மேசைகளில் வாக்குகள் எண்ணப்பட்டன.

வாக்கு எண்ணும் மையத்துக்குள் சென்ற வேட்பாளங்கள், முகவர்கள், ஊழியர்கள் பலத்த சோதனைக்கு பிறகே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். மின்தடையும் ஏற்பட்டது. இதனால் வாக்கு எண்ணிக்கை தாமதம் ஆனது.

# இலங்கையில் சீனாவின் துறைமுகம்: இந்தியாவுக்கு அச்சுறுத்தல் இல்லை

## தெற்குக் கப்பற்படைத் தளபதி பேட்டி

கொல்கத்தா, மார்ச் 31

சீனாவின் உதவியுடன் இலங்கை துறைமுகம் அமைத்து வருவது குறித்து நாம் கவலைகொள்ளத் தேவையில்லை. இதனால் நமது பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் கிடையாது - தெற்கு கப்பற்படை தளபதி கே.என். சுன்சில் தெரிவித்தார்.

தெற்கு இலங்கையில் உள்ள அம்பாந்தோட்டை என்னுமிடத்தில் ரூபா 500 கோடி செலவில் மிகப்பெரியதொரு துறைமுகத்தைக் கட்டுவதற்கு சீனா உதவி வருகிறது. 2020 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்படவுள்ள இந்த துறைமுகத்தில் 33 கப்பல்களை கையாள இயலும்.

இதுகுறித்து கொல்கத்தாவில் நடந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்த தெற்கு கப்பற்படை தளபதி கே.என். சுன்சிலிடம் கேட்கப்பட்டதற்கு அவர் அளித்த பதில் வருமாறு -

சீனாவின் உதவியுடன் இலங்கை துறைமுகம் அமைத்து வருவது குறித்து நாம் கவலைகொள்ளத் தேவையில்லை. இதனால் நமது பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் கிடையாது. சரக்குக் கப்பல்களைக் கையாள்வதற்காகவே இந்தத் துறைமுகம் கட்டப்பட்டு வருகிறது. இந்தத் துறைமுகம் கட்டி முடித்த பின்பு அங்கிருந்து சீனா வெளியேறவில்லை என்றால்தான் நாம் அதைக் கவனிக்கவேண்டும் - என்றார்.

# ஆட்சிமொழி அந்தஸ்தை தமிழ் இழக்கும் அபாயம்!

## கனிமொழி எம்.பி. கவலை



60 ஆண்டுகளுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் காயிதே மில்லத் வலியுறுத்தியபடி, தமிழை இந்தியாவின் ஆட்சிமொழிகளில் ஒன்றாக ஆக்கவில்லை என்றால் சிங்கப்பூர் உள்ளிட்ட அன்னிய நாடுகளில், ஆட்சிமொழி அந்தஸ்தை தமிழ்மொழி இழக்கும் அபாயம் உள்ளது - என்று மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி கூறினார்.

சென்னை மேடவாக்கம் காயிதே மில்லத் கல்லூரியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற காயிதே மில்லத்தின் 'ஆட்சிமொழி தமிழே' என்ற உரிமை முழக்கத்தின் மணி விழாவில் பங்கேற்று அவர் பேசியபோதே அதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

டில்லியில் இன்றும் தமிழர்களை 'மதராஸி' என்று இழிவாகக் கருதும் இளக்காரமாகப் பார்க்கும் நிலை மாறவில்லை.

ஆனால் 60 ஆண்டுகளுக்கு முன்பு நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இந்திய அரசியல் நிர்ணய அவையில் ஆட்சி மொழி பற்றிய விவாதத்தில் புராதன மொழியான தமிழ் மொழி தேசிய மொழியாக ஏற்றுக் கொள்ளக்கூடிய மொழி என்று உரை நிகழ்த்திய காயிதே மில்லத்தின் துணிவையும், தன்னம்பிக்கையையும், நேர்மையையும், பேரறிவையும் மெச்சிப் பாராட்டி, அவர் வழியில் தொடர்ந்து போராடிக்கொண்டு இருக்கின்றோம்.

மற்ற இந்திய மொழிகளையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு செம்மொழியான தமிழுக்குத் தான் முதலிடம் தந்து ஆட்சி மொழி ஆக்க வேண்டும் என்று நாம் இறுமாப்புடன் கோரவில்லை.

ஜனநாயக ரீதியாக, இத்தனை கோடி மக்கள் இவ்வளவு ஆண்டுகளாகப் பேசிவரும் பழைமையும், புராதனப் பெருமையும் வாய்ந்த தமிழ்மொழி ஆட்சி மொழியாகும் தகுதி படைத்த மொழி. எனவே ஆட்சிமொழி அந்தஸ்து தாருங்கள் என்று வலியுறுத்தி வருகின்றோம்.

தமிழை ஆட்சிமொழி ஆக்கினால் என்ன பயன். அதன் மூலம் எங்களது வாழ்க்கை நிலை உயருமா என்ற கேள்வி அனைவரின் மனதில் எழும். கேள்வி எழவில்லை என்றால் எழ வேண்டும். மொழியை வைத்துத் தான் நாம் யார் என்று உலகுக்கு அடையாளம் காட்ட முடியும். மதம், இனம், நம்பிக்கை உள்ளிட்ட பல்வேறு வேறுபாடுகளைக் கொண்ட நம்மைப் பிணைக்க, இணைக்கக் கூடியது மொழிதான்.

நமது மொழி நசுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட நிலையில் நமது அடையாளத்தைத் தொலைத்து விட்டு வாழ்வது, நம்மை நாமே அழித்துக் கொள்வதற்குச் சமம்.

தமிழ் உதித்த மண்ணில் - இந்தியாவில் உரிய மரியாதை வழங்கப்படவில்லை என்றால், தமிழுக்கு ஆட்சி மொழி அந்தஸ்து வழங்கிக் கௌரவித்திருக்கும் சிங்கப்பூர் அரசு, உங்கள் நாட்டில் தமிழ் மொழி இன்னும் ஆட்சிமொழி அந்தஸ்து பெறாத நிலையில் நாங்கள் ஏன் வழங்க வேண்டும் என்று கேட்கும் நிலை வரலாம் - என்றார்.

# இன்று மாணவன்.....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே கடந்த பல ஆண்டுக ளாகக் கடத்தப்பட்டும், கொல்லப்பட்டும் காணாமற் போயுமுள்ள எண் ணற்ற மக்களின் வரிசையில் இன்று இம்மாணவன் - ஒன்று மறியாத சிறு வன் கபிலநாத்...

நாளை இந்தப்பட்டியலில் யார் யாரோ? அவர்கள் உங்களின் பிள் ளையாக, சகோதரனாக, தந்தையாக இன்னும் என்னென்னவோ உறவுகளுக்குரியவர்களாகவும் இருக்கலாம்.

மனச்சாட்சிக்கு விரோதமாக மௌனம் காத்தல் உங்களுக்கே ஆபத் தாக முடியும். சிறுமை கண்டு பொங்கி யெழும் உங்களின் மரபியல் பண்பை ஏன் அடக்கி வைக்கின்றீர்கள். இதன் மூலம் கொலை பாதகர்களுக்கு நீங்கள் முடி சூட்டிவிடும் படுபாதகத்தை செய்தவர்களாகிவிடுவீர்கள். வரலாறு ''அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும் உச்சத்தில் கொண்ட ஊமைச் சனங்களாய்'' உங்களை பதிவு செய்து வைத்துவிடும்.

கபிலதேவ் கடத்தப்பட்டு 13 நாள்களாக அவரை கண்டு பிடிக்காது விட்டு கடைசியில் சடலமாக மீட்கும் சாதனை நிறைவேறியிருக்கிறது. இத னால் மக்கள் மனம் கொதித்துப் போயுள்ளார்கள்! இதயம் நொந்து வெதும்பியுள்ளார்கள்! அவர்களால் அதைத் தவிர வேறு எதையும் செய்து விட முடியவில்லை. இதனை அப்படியே விட்டுவிட முடியாது. விட்டு விட்டால் வரலாறு எம்மை மன்னிக்காது.

சட்டத்தின் ஓட்டைகளால் தப்பி விடும் அராஜக அரசியல் செல்வாக்குள்ளவர்களை இனங்கண்டுகளை பிடுங்கி எறிய வேண்டியது மக்களின் கடமை மட்டுமல்ல உரிமையும் கூட... சட்டம் உங்களைப் பாதுகாக்க தவறும்போது நீங்களே உங்களை பாதுகாத்தல் உங்களது தார்மீகக் கடமையாகும். அரசியல் அதிகாரத்தில் உள்ளவர்களின் ஆசீர்வாதத்து டன் இயங்கும் இந்த நபர்களுக்கு ஆத ரவளித்து அங்கீகரிப்பதானது இத் தகைய கொலைகள், கடத்தல்கள், காணாமற்போதல்கள் போன்ற மனித அவலங்கள் இனிவரும் காலங்களிலும் தொடர்வதற்கே வழிவகுக்கும் என்பதை எச்சரிக்கையுடன் உணர்ந்து செயற்படுங்கள்.

மானுட அவலங்களுக்கு காரண மான அராஜக அரசியலுக்கு முடிவு கட்டாத வரை அச்சமும் பீதியுமற்ற அமைதியான வாழ்வு எமக்குக் கிட் டாது - என்றுள்ளது.

### கஜேந்திரனின் அறிக்கை

அப்பாவி மாணவன் கபிலநாத் தின் கொலை தொடர்பாக தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி யின் வேட்பாளரும் முன்னாள் எம்.பி யுமான செல்வராஜா கஜேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அப்பாவி மாணவனான கபிலநாத் கொடூரமாக படுகொலை செய்யப் பட்டு புதைக்கப்பட்ட சம்பவத்தை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின் றேன். இப்படு கொலையுடன் தொடர் புடைய அமைப்பின் நபர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டனை வழங்கப்படல் வேண்டும்.

கடந்த காலத்தில் மகிந்தராஜ பக்ஷவின் ஆட்சிக்காலத்தில் அரச படைகளுடன் இணைந்து அப்பாவிப் பொது மக்களை கடத்திப் படுகொலை செய்யும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தவர்கள் இன்னமும் தமது கொலைக் கலாசாரத்தை நிறுத்த வில்லை.

ஜனநாயப் படுகொலைகளை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக் கின்றோம். குறிப்பிட்ட அமைப்பு கொலைக்கலாசாரத்தினை முற்றாக கைவிட்டு ஜனநாயக வழி முறைக்குத் திரும்ப சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்தின் மீதும் அந்த அமைப்பின் மீதும் அழுத்தங் களைப் பிரயோகிக்க வேண்டுமெனக் கோருகின்றோம் - என்றுள்ளது. (ஒ)

## சேர்.பொன். இராமநாதன் நினைவுப் பேருரை இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவின் ஓர் அங்கமாக நடைபெறும் நினைவுப் பேருரைத் தொடரில் சேர்.பொன். இராமநாதன் ஞாபகர்த்த நினைவுப் பேருரை இன்று மு.ப. 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

நினைவுப் பேருரையை தமிழ்நாடு, தமிழ்ப் பல்கலைக்கழக தத்துவ மையத்தின் இயக்குநர், தத்துவப் பேராசிரியர் கணபதி பாஸ்கரன் ''உலகமயமாக்கல் மத்தியில் கலாசாரத்தின் ஆற்றல்'' என்னும் தலைப்பில் நிகழ்த்தவுள்ளார்.

ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் இந் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-10)

## சாவகச்சேரி மாணவியின் சங்கிலி அபகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த மாணவியை வழிமறித்த நான்குபேர் அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவசம் நேற்று இரவு 7 மணியளவில் சாவகச்சேரி, கல்வயல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பாக பெற்றோர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (ஒ-10-207)

## ஊடக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மல்வத்த, இதன் காரணமாக இலங்கை ஜனநாயக நாடா என்ற கேள்வி எழுவதாகவும் தெரிவித்துள்ளார். (உ)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் தொடர்பில் வன்செயல்களில் ஈடுபட்ட சுமார் 130 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் பெருந்தொகையானோர் கைது செய்யப்படுவதற்காக பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றனர். - என்றார். (அ-சி)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீண்ட காலமாக இந்தியாவில் தங்கியிருந்த வரதராஜப்பெருமாள் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்திய போது ஒத்துழைப்பு கிடைக்காத காரணத்தினால் அதனை மீண்டும் கோருவது அர்த்தமற்ற செயல்.

மக்களுக்கு எந்தவகையான அரசியல் தீர்வு அவசியம் என்பதை தற்போதையகள நிலை மாற்றங்களுக்கு ஏற்ப மக்களே தீர்மானிக்க வேண்டும் .இலங்கை அரசாங்கமும் தமிழ் மக்களும் கலந்து பேசியே புதிய தீர்வுத் திட்டத்தைஉருவாக்க வேண்டும்- என்றும் அவர் சொன்னார். (அ-10)

## பொன்சேகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரத் பொன்சேகாவை கூட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி, அதன் பின்னர் அறிக்கை சமர்ப்பித்தால், அதனை ஏற்றுக்கொள்ளலாம்.

சரத் பொன்சேகா மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுகின்றமையை நாங்கள் கண்டிக்கின்றோம்.

நாடாளுமன்றம் ஏப்ரல் ஆறாம் திகதி மீண்டும் கூடும்போது ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, இந்திக பண்டாரநாயக்கவிற்குப் பதிலாக இரு ஐ.தே.க. உறுப்பினர்கள் பதவியேற்பதற்கு அனுமதியளிக்குமாறு சபாநாயகரைக் கோரியுள்ளோம்.

ஆறாம் திகதி அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்காக மாத்திரம் நாடாளுமன்றம் கூடுகின்றது. வேறு எதனையும் விவாதிக்க முடியாது என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. - என்றார் அவர். (அ-சி)

## தேர்தல் காலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இது குறித்து தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பிலிருந்தே தேர்தல் வன்முறைகள் மீறப்பட்டமை குறித்த அதிகளவான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

பொதுத் தேர்தல் காலத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக முப்படைகளின் உதவியைக் கோரியுள்ளோம்.

தேர்தல் பணிகளில் 59 ஆயிரம் பொலிஸாரை ஈடுபடுத்தியுள்ளோம். இது தவிர, 20 ஆயிரம் இராணுவத்தினரின் உதவியைக் கோரியுள்ளோம்.

வாக்காளர்கள் மற்றும் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் பாதுகாப்பை உறுதி செய்வதிலும், வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்லும்போது பாதுகாப்பு அளிக்கும் நடவடிக்கைகளிலும் இவர்கள் ஈடுபடுவர். விசேட அதிரடிப் படையினரும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவர்.

பொதுத் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முடிந்த பின்னர், இவர்களைப் பணியில் ஈடுபடுத்தவுள்ளோம்.

பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் நேற்று வரை தேர்தல் வன்முறைகள் தொடர்பாக 219 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

மட்டக்களப்பிலிருந்து அதிக எண்ணிக்கையான தேர்தல் வன்முறை முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் தமது கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு எதிராகக் கொடுத்துள்ள முறைப்பாடுகளே அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றன.

தேர்தல் சட்டங்களை மீறிய - வன்முறைகளில் ஈடுபட்ட 174 பேரை இதுவரை கைதுசெய்துள்ளோம். 161 பேரை நீதிமன்றத்தின் முன் நிறுத்தியுள்ளோம் - என்றார்.

இதேவேளை, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி நடைபெறஉள்ள தேர்தலில் போது பாதுகாப்பை உறுதிப்படுத்த பொலிஸ் அதிகாரிகளையும் கடமையில் ஈடுபடுத்த உள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார். (அ-சி)

## மழையுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரி பீ.டி.ஆனந்த பெரேரா தெரிவித்தார்.

மழை பெய்யும்போது தொலைபேசி பாவிப்பது மற்றும் வெளியில் நடமாடுவது என்பவை இத்தகைய அனர்த்தங்கள் ஏற்படக் காரணமாளவுள்ளன என அவர் மேலும் கூறினார்.

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவரின் உரையை எதிர்பார்த்து பெரும் எண்ணிக்கையான ஆதரவாளர்களும் அங்கு திரண்டிருந்தனர். அவ்வேளையில் திடீரென அங்கு வந்த பொலிஸ் குழுவொன்று குறிப்பிட்ட பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மேடையை அகற்றியது.

மேலும் பொலிஸார் அப்பகுதியில் ஒட்டப்பட்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் சுவரொட்டிகளையும் கிழித்து வீசியதுடன் மேடையிலிருந்த பொருள்களையும் எடுத்துச் சென்றனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் நடு வீதியில் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையை அடுத்து அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து அப்பகுதியில் மேலதிக பொலிஸார் குவிக்கப்பட்டதுடன் தண்ணீர் பிரயோகத்தை மேற்கொள்வதற்கும் அவர்கள் தயாராகினர்.

பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் வெலிக்கடைப் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாகத் திரண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (அ-சி)


கருத்தரங்கு
பொருளியல்
திரு.P.சண்
விடயம்:
தேசிய வருமானக் க/கு
காலம்:
02.04.2010 வெள்ளி
8.00am - 12.30pm
யூனிவேர்சல்
கல்விமையம்
1.30pm - 6.00pm
நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
MIS
Tamil / English Medium
ICT - 10 /11
100% practical
R.Kumaran - B.Sc.
# 74, Sabapathy Lane, Jaffna. TPNO: 0213216083

தரம் 1 முதல் O/L வரை
2ஆம் தவணைக்கான வகுப்புகள் ஆரம்பம்
01.04.2010 வியாழன் 3.30 மணி
* புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

ELECTRONIC REPAIRS
HOT LINE
021 7913020
Analog & Digital Monitors
Inkjet / Laser / Dot matrix Printers
Power Supply
Scanners
Laptop & Mobile PCs
UPS
VCD/DVD players
Hi-fi systems
And all electronic Equipments
MICRO PC SYSTEMS
Jaffna 218, Hospital Road, Jaffna. T.P: 021 7913020, 0777425974
Nelliady Kodikamam Road, Nelliady, T.P - 0773039536

Deutsch, Dutch, French, Italian வகுப்புக்கள்
ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் ஜேர்மன் எம்பசி பரீட்சைக்கான Deutsch புதிய வகுப்புக்கள் தற்பொழுது ஆரம்பமாகியுள்ளன. மேலும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
Vivekananda Academy
(Centre for International language Studies)
No,3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
T.P : 077 4842464, 021 3216928, 0779927117

யாழ் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் !
மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின்
BIT
பயிற்சி நெறி இப்போது...
யாழ் மண்ணில் ESOFT இல் மட்டுமே...
விண்ணப்ப முடிவுத் திகதி 12.04.2010
ESOFT The Leader in Professional ICT Education
114, Navalar Road,Jaffna.
Call @ 021 222 4142
077 309 9 308

தமிழ்க் காங்கிரஸ்





X
10
S.வரதராஜன்
(முதன்மை வேட்பாளர்)
ஓய்வுபெற்ற பிரதி பொருளியல் ஆசிரியர்

உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கின்ற மங்கலகரமான நிகழ்வுகளுக்கு ...
திருமண அழைப்பிதழ் காட்சியறை
மதிகலர்ஸ் பிறிண்டர்ஸ்
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல வர்ண புத்தம்புதிய டிசைன்களுடன் 15 ரூபா முதல் 35 ரூபா வரை விசேட கழிவுடன்
எமது காட்சியறையில் உங்களுக்காக ...
Wedding Card Show Room
MATHI COLOURS PRINTERS
15/2B, முருகேசர் லேன், நல்லூர், (முத்திரைச்சந்தி) யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 2229285, 0777 222524





சீ.வீ.கே.சிவஞானம்
தமிழ்த் தேசியத்திற்கான தாயக தன்னாட்சிக்கான விட்டுக் கொடுப்பற்ற பயணிப்பு
தனியார் துறை பணியாளர்களின் ஊழியர் சேமலாபநிதிக் கணக்கு யாழ்ப்பாண மாவட் டத்தில் மட்டும் தேசிய அடை யாள அட்டை இலக்கத்துடன் இணைக்கப்படாமை குறித்து தொழில் அமைச்சருக்கு சுட்டிக்காட்டி அந்த நடைமுறையை யாழ்ப்பாண மாவட்டத்திலும் அமுல் செய்வித்ததுடன் இதனால் பல வசதிகளையும் பணியாளர்கள் பெற்றுக்கொள்ள வழிவகுத்தவர்.
X
1 2 3 4 5 6 7 8 9 10
11 12







கிராமத்து குடிசைகளை கல்வீடாக்கிய தியாகராஜா மகேஸ்வரன் வழியில்
அவர் தம்பி தியாகராஜா துவாரகேஸ்வரன்
X
1
மக்கள் துயர் துடைக்க
மீண்டும் ஒரு மகேஸ்வரன்...
தியாகராஜா துவாரகேஸ்வரன்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.